தத் ஸத்

ஸ்ரீ பர ப்ரஹ்மணே நம:

மாயையின் ரஹஸ்யார்த்தம் வெளிப்படுத்தி

மனதை நிறுத்த

உபதேசிக்கும் நூல்.

இது,

கடப்பை ஜில்லா கடிகோட்டை ஆசிரமவாசிகளாகிய

ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரர்

அவர்களால் இயற்றி,

சென்னை - சூளை,

ஸ்ரீ "பாரதி" அச்சுக்கூடத்தில்

ஸ்ரீ ஸச்சிதானந்தர் கம்பெனியாரால்

பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு - 1,000.

1—11—1939.

 [விலை அணு 8.

தத் ஸத்

ஸ்ரீ பர ப்ரஹ்மணே நம:

மாயையின் ரஹஸ்யார்த்தம் வெளிப்படுத்தி

மனதை நிறுத்த

உபதேசிக்கும் நூல்.

இது,

கடப்பை ஜில்லா கடிகோட்டை ஆசிரம வாசிகளாகிய

ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரர்

அவர்களால் இயற்றி,

சென்னை - சூளை,

ஸ்ரீ "பாரதி" அச்சுக்கூடத்தில்,

ஸ்ரீ ஸச்சிதானந்தர் கம்பெனியாரால்

பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு-1000.


1—11—1939.

 [விலை அணு 8.

மேற்படி யோகீஸ்வர ரவர்களால் எழுதிய நூல்கள்.

1	முன் பதிப்புகளைவிட இதில் இன்னும் அனேக தேவரஹஸ்யங்களும், அனேக படங்களும் அடங்கிய பத்தாம் பதிப்பு "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" உயர்ந்த காலிகோ பயிண்டு ...	4	0
2	ஷை நூல் இங்கிலீஷ் முதற்பாகம்	2	8
3	"ஜீவப் பிரம்மைக்ய ராஜயோக சாராம்ருதம்." தெலுங்கு மூன்றும் பதிப்பு	4	4
4	ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை ஐந்தாம் பதிப்பு உயர்ந்த காலிகோ பயிண்டு	2	4
5	மேற்படி தெலுங்கு ஸ்ரீ பகவத்கீதை	2	4
6	தமிழ் ஸ்ரீ கபீர்தாஸ் சரித்திரம் மூன்றும் பதிப்பு	2	4
7	தெலுங்கு ஸ்ரீ கபீர்தாஸ் சரித்திரம்	2	8
8	யோகாப்பியாசம் செய்யவேண்டிய முறைகளை உபதேசிக்கும் நூல்	1	8
9	மாயையின் ரகஸ்யார்த்தம் வெளிப்படுத்தி மனதை நிறுத்தும் நூல்	0	8
10	தத்துவ பரிசோதனை அன்னதான பலன் என்னும் நூல் மூன்றும் பதிப்பு	0	8
11	சரீர தேவாலய ரஹஸ்யார்த்த பாரிஜாதம். இது மிகவும் சிரேஷ்டமான நூல்	0	6
12	மேற்படி பாரிஜாதம் தெலுங்கு	0	6
13	ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரர் பூர்வ ஜன்ம இச்ஜன்ம சரித்திரம் மூன்றும் பதிப்பு ...	0	6
14	மனோ ஓட்டத்தை நிறுத்திக் காட்டும் நூல் ...	0	4
	ஷை நூல் இங்கிலீஷ்	0	4
15	ஸ்ரீ ஸச்சிதானந்தர் தமிழ்ப் பாமாலை	0	4
15	ஜனனமரண ரகசியம்	0	2
16	1-மணிநேரம் எரியும் உயர்ந்த ஊதுவத்தி 100-க்கு	1	12
17	இந்நூலாசிரியர் 3 மாதம் 13-று, தினங்கள் யோக சமாதியிலிருந்து வெளி வந்தபோது பிடித்த போட்டோ, ஆர்டுபேபரில் பிரிண்டு செய்தது ...	1	0
19	சரீரத்தின்மேல் கட்டிக்காட்டிய விஷ்ணு கோவில் படம் பெரிய சயிஸ்	0	8
20	சரீரத்தின்மேல் கட்டிக் காட்டிய சிவன் கோவில் படம் பெரிய சயிஸ்	0	8

ஸ்ரீ ஸச்சிதானந்தர் கம்பெனி,
சூளை, போஸ்டு, சென்னை.



ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரர்

மூன்றுமாதம் பதின்மூன்று தினங்கள் யோகசமாதியிலிருந்து வெளிவந்தவுடன் பிடித்த போட்டோ. இது 63-வது வயதில் பிடித்தபடம்.

శ్రీ పరమహంస సచ్చిదానంద యోగీశ్వరులు,

మూడునెలలు 13-దినములు యోగసమాధియందుండి వెలువడినవెంటనే తీసిన ఫోటో వయస్సు 63.

ஓம்
தத் ஸத்
ஸ்ரீ பரப்ரஹ்மணே நம:.

கடப்பை ஜீல்லா கடிகோட்டை ஆசிரம வாசிகளாகிய
ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதாநந்த யோகீஸ்வரர்மீது
பாடிய

ஸச்சிதானந்தத் தமிழ்ப்பாமாலை.

இது
சேலம் ஜில்லா இராசிபுரம் தாலூக்கா தொ. ஜேடர்பாளையம்
மாதுரியச் சந்தச் செந்தமிழ்
வேலாயுதசாமி யவர்களால்
இயற்றியது.

1. விநாயகர் துதி - வெண்பா

மலையின் வளமாற்றின் மாவள மல்கும்
தலமாங் கடப்பைத் தனில்வாழ்—நலமாம்
சிவயோகர் மீதினில் செப்பப்பா மாலைத்
தவயானை தாளே சரண்.

2. நாட்டை] பல்லவி. [ஆதி.

மூலாதாரா நாத
சீலாசாரா நீதனே
அநேகனே பெரு
முதுமறை யதுமறை (மூ)

அநுபல்லவி.

ஆலாகாராதிபன் பாலாபக்தருக்கனு
கூலாவிநாயகவென்
குற்ற முற்று மற்று வற்ற வரமணி (மூ)

சரணம்.

மாலாவாராசிக்கும் மேலாகியமருகா
வேலாயுதனுக்கருள்
மிக்க நற்க விக்க லக்க மறவினி (மூ)

---

3. சற்குரு ஸ்துதி விருத்தம்.

வேதமுழு துணர்ந்தானை வித்தகனன் மனத்தானை
வீட்டை நல்கும்
போதமருள் செயும்ஜீவப் பிரம்மைக்ய வேதாந்தம்
புகன்றிட் டானை
ஆதவனைத் தொடுமாட நிறைகடப்பை நகரிலெழுந்
தருளு வோனை
வாதனைசெய் பிறவியினி வாராம லிருக்கநிதம்
வணங்கு வோமே.

---

4. சித்திரக்கட்டிலிலேறி

சிந்துபைரவி] பல்லவி. [ரூபகம்.

சச்சிதாநந்தர் பொற்பாதம் தினம்
தவறுமலே போற்றிப் பாடுவோம் சங்கீதம் (ச)

அநுபல்லவிச்சந்தம்.

தரமலிந்த திருவமர்ந்த
வரமலிந்த பரமஹம்ஸ (ச)

தடப்புனல்கள் மடைப்பெருகும்
இடப்பழன கடப்பை வளர் (ச)

தகுந்து விரும்பி வணங்க
மிகுந்த வரங்கள் வழங்கு (ச)

சந்தம்பெருகு மந்தந்திகழும்
பந்தந்தொலைய சொந்தந்தரும்
தப்பாமலட்டதிக்கும்
எப்போதுமெச்சலுற்ற
மெய்ப்போதமுற்றசுத்த
சாதனங்களேமிகுந்து யோகமென்ற
நீதமென்று மேபுரிந்து மேவுகின்ற
சந்தேக நொந்தேக வந்தேக ருணைபுரிகிற (ச)

சரணம்.

கச்சிதனில்ஜன்மம் கண்டிட்டவாமி
கருதும்ப்ராணாயாமம் கைக்கொண்டநேமி
மெச்சிடுஞ்சந்த வேலாயுதசாமி
விரும் பிடும் பதந் தரும்
பெருந் திரம் பொருந் திடும் (ச)

---

5. கனகசபாபதி தரிசனம் என்ற வர்னமெட்டு.

தன்யாஸ்] பல்லவி [ஆதி

பரமஹம்ஸ சச்சிதாநந்த யோகப்
பண்ணவர் பதந் துணையே (ப)

அநுபல்லவி.

வரமருள்யோக மார்க்காநுபோக
பிரமவிவேக பேரொளிதேக (ப)

சரணங்கள்.

சஞ்சிதவினைகளைத் தவிர்த்தினிதாக்கும்
சாகரமென்றசமு சாரத்தைப்போக்கும்
தஞ்சமென்றடைந்தவர் தமக்கருள்தேக்கும்
சலனமிகுமனத்தின் சந்தேகம்நீக்கும் (ப)

ஆரணமதின்முடி வாய்விளையாடும்
அகிலசராசரங்கள் அனைத்துமாய்நீடும்
காரணசற்குருவாய் கதியினைத்தேடும்
காணுமடியவர்கள் கருத்தில்கொண்டாடும் (ப)

மாயையென்றிடும்பெரு வல்லிருள்மாற்றும்
மயலினையொழித்திட மந்திரஞ்சாற்றும்
ஆயுமறையுங்காண வரிதெனத்தோற்றும்
அடியவர்க்கடியன்வே லாயுதன்போற்றும் (ப)

---

6. பண்டாரதண்டாயுதா என்ற வர்னமெட்டு.

செஞ்சுருட்டி] பலலவி [ஏகம்.

பேரின்ப வானந்தநல் யோகப் பெரியவராம் (பே

அநுபல்லவி.

ப்ரம்மநிலையை யறிந்தஞான
ஜன்மமதனில் சிறந்தமோன

சரணங்கள்.

பாரின்பமேதுறந்த பக்தியதில்சிறந்த
சீரின்மடைதிறந்த
சித்தசத்திய மெத்தநித்திய (பே)

மனநிலையைக்கண்ட வடிந்திடுமமுதுண்ட
கனதவங்கைக்கொண்ட
காரணக்குரு பூரணத்திரு (பே),

மேலாந்துதிசாற்றும் மெய்த்தமிழைக்காப்பாற்றும்
வேலாயுதன்போற்றும்
வித்தகபாக்ய சித்தவைராக்ய (பே),

---

7. தாதாபாய் நௌரோஜி

இந்துஸ்தான்தோடி] பல்லவி. [ஏகம்.

பூரண வானந்த
புண்யஜனனர் கண்யமன்னர் (பூ)

அநுபல்லவி.

காரணசற்குருவாம் காணும்திருவுருவாம்
கதியளித்திடு பரமபாக்ய
மதிநிறுத்திடு மதிசிலாக்ய (பூ)

மனநிலையாம்நேமம் வருகும்ப்ராணாயாமம்
வாசியடக்கி யோகமியற்றிடும்
பாசமொழித்து மோகமகற்றிடும் (பூ)

பரப்ரம்மதரிசனமே பக்குவமுற்றோர்கனமே
பத்தனென்றிடும் வேலாயுதன்
நித்தமுந்தொழும் யோகீஸ்வர ’பூ)

---

8. பாண்டியனீன்ற மீனாக்ஷி.

இந்துஸ்த்தான் தோடி] பல்லவி. [ஆதி.

சித்தமே தெளிந்த சிவயோகி மெஞ்ஞானம்
செய்திடும் த்யாகி (சி)

அநுபல்லவி.

நித்தமே நிலையுணர்போகி சுந்தர
நிர்மல தேகி (சி)

தோஹையரு.

தேஜோன்மயானந்த ப்ரம்மமேதானாய்த்
திகழ்ந்திடும் பரமஞானி
காஷாயவஸ்த்ரதர மெய்யலங்காரசுக
கருணைவளர் மிகுநிதானி

அநுபல்லவித் தொடர்.

காரணம் கண்ட சன்யாசி கடப்பை
கனநகர் வாசி (சி)

தொகையறு.

பனிரெண்டுவருடங்கள் வரையுமானஸபூஜை
பழகித்தெரிந்த த்யானி
தனியானபொருளீதென்று றுதியாகச்சிந்தை
தங்கும் யோகாபிமானி

அநுபல்லவித் தொடர்.

சச்சிதா நந்தயோகேசர் சதுர்வே
தாநுபோகேசர் (சி)

தொகையறு.

பூர்வஜன்மங்கண்டு மாந்தர்களுய்யப்
புகன்றிடும் புண்யசாலி
ஆர்வமாய்ப்போற்றிடும் தொண்டருக்கருள்தனை
யளிக்குங்க்ருபாநுகூலி

அநுபல்லவித் தொடர்.

அன்பன்வே லாயுதசாமி போற்றிடும்
அந்தரியாமி (சி)

---

9. சுவாமி விவேகாநந்த

இந்துஸ்த்தான் ப்யாக்] பல்லவி. [ஏகம்.

நிஷ்டாநுபோகாவலி நிமலநிர்விகல்ப (நி)
நிகிலபரம நிஷ்களங்க
வகிலசரண சத்யதுங்க (நி)

அநுபல்லவி.

சிஷ்டோபதேசதிரு சின்மயானந்தவுரு
திகழுங்குரு
தேசுறவேவளர் சஞ்சிதங்கொய்திட
ரேசகபூரக கும்பகஞ்செய்திடும் (நி)

தோஹையரு.

லோகோபகாரார்த்தமா யவதரித்துண்மை
நூலுணர்ந்திடு மப்யாசி
பாகூறவே ஜீவ ப்ரம்மைக்ய ரகசியம்
பகரும் சுயம்ப்ரகாசி

அநுபல்லவித் தோடர்.

பற்றற்றமெய்த்துறவி பக்தர்கள்கூட்டுறவி
பலன்பிறவி
படித்தவர்மலி கடப்பைநகரில்
முடித்திடுமொரு மடத்தினில்வளர் (நி)

தோஹையரு.

திருநகரமர்ந்த வேகாம்பரேசுரர் வனசச்
செழும்பதத் தொண்டராகி
வருடமீராறு மானஸ பூஜை செய்துமன
மகிழுங்க்ருபா விவேகி

அநுபல்லவித் தோடர்.

வாழ்ப்ரம்மசம்மந்த வளர்சச்சிதாநந்த
மனமிறந்த
வாலாயதி யானசற்குரு
வேலாயுத சாமிசொற்கருள் (நி)

10. இந்துஸ்த்தான் தோடி] [ஏகம்.

பல்லவி.

மோகநிக்கிரகம் தவ யோகவிக்கிரகம்
முக்கியநேம வேதரூப
பக்குவகாம க்ரோதலோப (மோ)

அநுபல்லவி.

தேகவபிமானம் தீர்ந்திட்டஞானம்
மதி தெளிந்தனர் அநுமானம்
மிகச் செய்தாரமிர்த பானம்
உறச் சேர்ந்தனர் பரஸ்தானம்
திரமோனம் பிரதானம் செழுந்
திருக்கடப்பையதே மிக
விருக்குநிட்டையதே உண்மை
செப்புஞ்சுருதி யுக்தியநுபவ
நுட்பந்தினமு மிக்கவறிதவ (மோ)

பரமாத்மநீதம் பகர்ந்திடும் வேதம்
பரிபக்குவமுள போதம்
பந்த பாசமும் மலச்சேதம்
செவி படுத்தினர் தசநாதம்
அவர்பாதம் பிரசாதம் தினம்
பணிந்தன்புபெறுவோம் சிரம்
அணிந்தின்பமுறுவோம் சந்தம்
பகருமுத்தமிழ் வேலாயுதன்
நுகருமுத்தமத் தேனுகிய (மோ)

——

11. மேரெதர் தேஜிவர்னிஷா.

செஞ்சுருட்டி] பல்லவி. [ஆதி.

மோக்ஷ ஞானோபதேசமாநாயகமே மோக்ஷ (ஞா)

அநுபல்லவி.

நாயகமே தொண்டர் தாயகமே மோக்ஷ (ஞா)

சரணங்கள்.

தானகவேயமர்ந்த தலைமைச்சின்மயாநந்த
தேனகிடுமினிந்த தேஜோன்மயசுகந்த (ஞா)
சர்வமயவிநோதி சச்சிதாநந்தஜோதி
நிர்விகல்பசமாதி நிஷ்டையுணர்ந்தநீதி (ஞா)
மனமெனுமாயைவிண்ட மாதவரூபங்கொண்ட
அநுபவத்தில்லைகண்ட அமிர்தமதனையுண்ட (ஞா)
மிக்கமதுரச்சந்த வேலாயுதன்விழைந்த
தக்கவரத்தைத்தந்த சற்குணத்திற்சிறந்த (ஞா)

---

11. ஆண்டிப்பண்டாரம் பின்மகுடம்.

சுருட்டி] பல்லவி. [ஏகம்

ஆத்மவிவேகி சச்சி
தாநந்தயோகி பரம (ஆ)

அநுபல்லவிச்சந்தம்.

ஆதிசிற்பர ஜோதிநற்பர (மா)

அகத்து ளிருக்கு
மிகுத்த மகத்து (வா)

ஆரணந்தெரி காரணங்களு
தாரணந்தரு பூரணம்பெரும் (ஆ)

சரணங்கள்.

சாத்விகமேநிறைந்த தத்துவங்களேயறிந்த
பூத்தவருள்செறிந்த புண்யமதேமிகுந்த
தங்குஞானசாகரம் தவவிசாலசேகரம்
தரமலிந்த தருமவம்ச

வரமிகுந்த பரமஹம்ச (ஆ)
காஞ்சிதனிலேபிறந்து கடப்பைதனிலேசிறந்து
வாஞ்சைதனையேதுறந்து மனந்தன்னையேமறந்து
கருதுயோகநித்திரை கைகளோசின்முத்திரை
கட்டிடுங்கௌ பீனமான
மட்டறுஞ்சி வாபிமான (ஆ)

பரமாத்மசம்மந்தம் பரிபூரணானந்தம்
திரமானநற்கந்தம் சிவபக்தியேசொந்தம்
பக்குவமனநேசியே பகர்ந்திடும்சந்யாசியே
பாடிடுந்தமிழ் வேலாயுதன்
நாடிடுந்திர ஞானோதய (ஆ)

---

13. பாலாபிஷேக.

சிந்துபைரவி] பல்லவி. [சாப்பு.

பரமாம்சசச்சிதா நந்தயோகீஸ்வரர்
பக்தரைக்காக்கப் பிறந்தவராம் (ப)

அநுபல்லவி.

திரமாகிய ஜீவ ப்ரம்மைக்ய வேதாந்தம்
செய்துமிகவும் சிறந்தவராம்

தோஹையரு.

பாதிமதிவேணி ஏகாம்பரேசரருளால்
படைத்தார் மெஞ்ஞானுதாரம்
ஆதிகுருசங்கராசார்யரென்றேபுகல
ஆனார் திருவவதாரம்

முடுகு.

பலவிடமலேகிற மனதைக்கட்டி
நலமுடனொருநிலே பெறுமதிகெட்டி.

அநுபல்லவித் தொடர்.

படுத்தும் வைராக்கிய
கிடைத்திடும் யோக்கிய
கடப்பையின் பாக்கியக் காரணனுர் (ப)

தோஹையரு.

முன்ஜனனங்க்ரிஸ்தவராகிக் கடவுளொன்றென்றே
மொழிந்துபதேசித்ததாலே
பின்ஜனனமாகுமிதில் விட்டகுறைவந்தடையப்
பெற்றூர்சிலாக்ய மேலே

முடுகு.

முதனடு முடிவறு முழுப்பொருள்மீது
நிதநிதமனமுறு நினேவுவிடாது

அநுபல்லவித் தொடர்.

முந்து நாலாவிதச்
சந்த வேலாயுதன்
மூர்த்தியென் றேத்திடும் தோத்திரனுர் (ப)

14. பஹாரியாலா.

இந்துஸ்த்தான் தோடி பல்லவி. [ஆதி.

சமாதியோகதவ சாதனநிதி (ச)

அநுபல்லவி.

ப்ரமாதமானதாகும் ஜீவ ப்ரம்மைக்ய வேதாந்தம்
பேரின்பப் பாலூற்றிவைத்த பெரும்பாண்டம்
பெற்றுதந்தசாந்தம் பற்றும்சிந்தை காந்தம் வரும்
பிறப்பெனுங்கடல் தனைக்கடந்ததி
சிறப்படைந்தொரு நினைப்பினின்றிடு
பிஞ்சக னென்றப ரந்தனில் சிந்தனை (ச)

விவேகமீறும்பதி னெண்சித்தர் மேன்மைபெற்ற நாயனர்
வேமன்னர் பட்டினத்தார் பத்திரகிரியார்
மிக்கக்களித்துரைத்தார் நிற்க ஒளித்துவைத்தார் அதை
வெட்டவெளியுடன் மட்டிமடையரு
மிட்டபரகதி திட்டமுடனுற
விரித்து வழுத்தும் பெருத்து பழுத்த (ச)

அவாவெனும் பொல்லாதபேயை யலறியோடவோட்டி
ஆணவமுதல் மலங்கள் அறவாட்டி
அஞ்ஞானத்தை வீட்டி மெஞ்ஞானத்தை நாட்டி இசை
அந்தமிகுந்திடு சந்தவேலாயுதன்
சிந்தைபுகுந்துநி றைந்தமேலாகிய
அரும கத்வ நிருவி கற்ப (ச)

---

15. ஏமாந்துனே செலியா.

காம்போதி பல்லவி. [ஆதி.

வேதாந்தசாகரமே நம்
வினைதீர மனதாற வினிதூற வருளும்வரமே (வே)

அநுபல்லவி.

நாதாந்தமாய்நின்ற நண்ணும்பவங்கொன்ற
போதாந்தமாகின்ற
புத்தமுத மொத்தமொழி
பத்தரிட மெத்தமொழி (வே)

சரணம்.

வல்லபிறவியெனும் வாரிதியைக்கடந்து
வளருங்கரையிலேறி மாறுச்சுகமடைந்து
அல்லலெனுமுலக அவஸ்தைகளைக்கடிந்து
அற்புத முற்றுநி றுத்திபு லத்தினை
நற்படி கத்தினை யொத்துச லிப்பற
அஞ்சாப்பவமது பஞ்சாய்ப்படவிழை
பஞ்சாக்ஷரமெனு மந்த்ரோத்தமமொழி
ஆருமெத்த மாரகல்ய காயசுத்தி யேபடுத்த
பாகமிக்க வாரணச்சு லோகமொட்டி யேயுரைத்த
ஆதிபவநாச
ஜோதிதவநேச
நீதிசிவதாச
தீதிலுபதேச
அதிசயமிகமுன மெடுஜனனமிதென
பதியினிலருளின மதிநிருவியகன
அகக்காந்திபெறு மிகச்சாந்தமொடு
சுகக்காஞ்சிதனி லுதித்தோங்கிதினம்

ஆடுமளி வீழுமல ரின்பொழிற்கள்சூழும்
மாடநிறைவீதிமலி யுங்கடப்பை வாழும்
அப்பாவு ளெப்பார்சி
றப்பாகு மிப்பாரில்
பொற்பாதம் தப்பாத
ளிப்பாய்வி ழிப்பாரும்
அந்தமிகுஞானமிர்த சாரநிதி மாதுரியச்
சந்தமொழி வேலாயுதசாமி பணிசாதுரிய' (வே)

---

16. அரனார் திருமாநுதலின்.

சங்கராபரணம்] பல்லவி. [ரூபகம்.

திருமாதவ யோகசுகுண சீரியமறை வாரிதியே
சித்தந்தெளிந்த பரிசுத்தம்பொலிந்த குருநிதியே (தி)

அநுபல்லவி.

அருமாமறைநாலையுமே அறிந்திடு பெருந்தகைபொருந்
அகப்பற்றுதனை யுகப்பெற்றுபர [திடும்
சுகப்பற்றுதனை மிகப்பெற்றுதிரமொடுவளர் (தி)

வணங்குதொண்டர்க்கருள்தர விணங்குசிந்தைப்
பொலிவொடு
வந்தண்டும் பண்பெங்கும்
பொங்குந்துங் கம்பெருநய
மாசற்றவாலைப்பி ராயத்திலேதொட்டு யோகத்தி லாசித்து
மங்காதெங்குமி லங்காநின்றிட
கொண்டாடும்புகழ் நின்றேதுன்றிட
மன்ற லம்ப தம்பொ ருந்தி
வளர்வுறு விதரண நயகுண (தி)

வாசியின்வேகமடங்கிட ரேசக பூரக கும்பகம்
மந்திரத்துடன் பழக்கி
சிந்தையைக்க டிந்தடக்கி
வன்மைத்தரு சின்முத்திரை
யின்மெத்தவு நன்மைத்தவ
வாலாயதி யானத்தமிழ்
வேலாயுத சாமித்தொழும்
வரஞ்சாலு மருஞ்சாது
பரஞ்ஜோதி சரதவிரத (தி)

---

17. கௌனமிஸியாதேரெ.

அரைவிருத்தம்.

கச்சிமாநகருதித்துக் கடப்பைவாழ் பரமஹம்ஸ
சச்சிதானந்த யோகத் தத்துவ ப்ரம்மஞானி

பாட்டு.

தாமரைப்பூந்துணையடிகள் தனைத்துதிப்பாய்மனமே சமு
சாரமதைவிலக்கமதி தந்திடுஞ்சாதனமே இந்த
தாரணிசுகதினமே மிகச்
சாற்றலாஞ்சொப்பனமே உடல்
ஜலத்திலெழும்புங் குமிழிபோலத் தானறிவாய்மனமே ()

அரைவிருத்தம்.

எவ்விதத்தொழிலில்பாக்கி யிருக்கினும் ப்ராணன்போகும்
அவ்விதம்விலக்கலாமோ அறிகுவாய்பிரத்தியட்சம்

பாட்டு.

ஆதலினால் நாட்களையனி யாயமாய்த்தள்ளாதே என்றும்
அரிவையரைக்கண்டவுடன் ஆனந்தங்கொள்ளாதே । அது

அனைத்தும் பொல்லாச்சூதே மிக
அவத்தைவருந்தப்பாதே வீணில்
அழிந்திடி லோவிந்தஜன்மம் அப்புறம்வாராதே ()

அரைவிருத்தம்.

நேத்திரம்தன்னில்காணும் நிகிலமுமுரைக்கிற்கொஞ்ச
மாத்திரமென்றெண்ணமல் மயங்கியேயழிந்திடாதே

பாட்டு.

மாயவாழ்க்கைதனைவிடுத்து மற்றொன்றைவிரும்பு திரு
மதுரச்சந்தவேலாயுதன் வார்த்தையைநீ நம்பு இது
மனமினிக்குங்கரும்பு மிக
வந்திடும்பெருந் தென்பு அதி
மாக்ஷியுடைய மோக்ஷமடைய வழிகாட்டுங்கொம்பு ()

18. சோமசேகரனருளும்

இந்துஸ்த்தான் தோடி] கண்ணிகள் [ஏகம்

ஞானசூர்யவாசி யோகமூர்த்திமூர்த்தி எந்த
நாளுமின்பவாரிமூழ்கு நேர்த்திநேர்த்தி உயர்
வானமேவுமாடகூட மாளிகைத்தெருக்கடப்பை
வளருகின்றதெங்குமிக்கக்கீர்த்திகீர்த்தி (ஞா)

மும்மலங்களை யொழித்த ஜோதிஜோதி கொண்டார்
முக்கியம்மனத்தைக்கொல்லும் நீதிநீதி மிக்க
நம்மையாக்கவேண்டி மெத்த ரகசியத்தை வெளியுரைத்து
நாட்டிடும் அருள்விளங்கும் ஆதிஆதி (ஞான)

மானஸவிசேஷபூஜை செய்துசெய்து தினம்
வழக்கமாகவன்புமாரி பெய்துபெய்து மிகத்
தானெனும்பொருள்தெரிந்து தத்துவங்கள் கண்டறிந்து
சலனமற்றார் மாயைதன்னைக் கொய்துகொய்து (ஞா)

சந்தமாரும் செந்தமிழைப் பாடும்பாடும் சிவ
தாசனும் வேலாயுதன் கொண்டாடும் நாடும் தவ
சொந்தரானநித்தியவா னந்தர்பாதமேதுதிக்கின்
தொல்லையான வினைகளெல்லாம் ஓடும்ஓடும் (ஞா)

19. பூபாலர்மெச்சிடும் பூமான்.

செஞ்சுருட்டி] பல்லவி. [ஆதி

வேதாந்தசாரவைபோகி
நாதாந்ததீரமெய்யோகி (வே)

அநுபல்லவிச்சந்தம்.

விகசித மிகுமன
சுகநய சுகுண (வே)

வித்தக தவ
நித்திய சிவசரண (வே)

வெம்ப வங்க
ளைந்து லங்குதுங்க (வே)

மிஞ்சுந் துங்கந்
தங்குந் தங்க (வே)

சரணம்.

தீதாம்மேதினி பந்தம் எனத்
தீர்த்தவராகும னந்தம் சிவன்
பாதாம்புயமது சொந்தம் மிகப்
படைத்தவர்நித்யா னந்தம் (வே)

தோஹையரு.

பனிரெண்டுவயதிலேயே பழகினவர்சிந்தை
இனிவாகநிறுத்துதற்கு இயம்பிடிலோவிந்தை

பாட்டு.

பத்தரைமாற்றின் தங்கமெனும்படி
இத்தரைபோற்றும் துங்கமிருந்த (வே)

சரணத்தொடர்.

வஞ்சகவாசையை விட்ட ஓம்
மந்திரவிதைதனை நட்ட பெரும்
சஞ்சிதங்களையொழித்திட்ட பர
சற்குருபாதங்கும் பிட்ட (வே)

தோஹையரு.

தசவிதமானநாதம் தான்கண்ட சீமான்
நிசமிதுவென்றுசிந்தை நிச்சயித்தபூமான்

பாட்டு.

சந்தமுழங்குந் தமிழ்வேலாயுதன்
முந்திவணங்கும் பரமாதார (வே)

---

20. மயிலேறிவாவேலனே.

சேஞ்சுருட்டி] பல்லவி. [ஆதி

பரிபூரணானந்தமே
பரமஹம்ஸர் பாதம் வரமிகும்ப்ரசாதம் நற் (ப)

தோஹையரு.

பந்தவாரிதிதன்னில் பட்டுக்கிடந்து தினம்
பரிதாபமே
விந்தையாய்ப்படுமாந்தர் மனவிருளைக் கொய்ஞான
மெய்த்தீபமே

அநுபல்லவி.

விரிபூதலத்திலுற்ற வினைகளெல்லாமகற்ற
 வித்தகப்பரம சற்குருப்பெயரின்
 உத்தமத்துடனு நித்தமுத்தியருள் (ப)

தொகையறா.

மதிகேடடைந்துள்ளமூடர்கள் பிழைத்திடும்
 வாறுபூமேல்
சதுர்வேதமேயுருக் கொண்டிங்குவந்ததெனச்
 சாற்றலாமே

அநுபல்லவித்தொடர்.

சந்தநல்வேலாயுதன் செந்தமிழினற்புதன்
 சந்தத முந்தொழு தின்பமி குந்துசு
 கந்தனை முந்துபொ ருந்தும ருந்தவ (ப)

---

21. கோலாகலலீலையின்பமே பின்மகுடம்.

தன்யாஸ்] பல்லவி. [ரூபகம்.

தேஜோன்மயநித்யானந்தராம் திகழுஞ்சுகந்தராம் ()
 செந்தமிழ்மொழிவேலாயுதன்
 வந்தனைசெயு மேலாகிய (தே)

 தித்திக்கு முத்திக்கு வித்தான
 பத்திக்கு புத்திக்கு சத்தான (தே)

அநுபல்லவி.

பூஜாவிதி யாகிய மாதவ சாதன (தே)

சரணங்கள்.

பத்மாசனம் படவுட்கார்ந்து
பற்றியேசின்முத்திரைதேர்ந்து
தத்வாதார சாரமோர்ந்து
தவமுயன்று உடல்நிமிர்ந்து
விழியிரண்டின் நடுவறிந்து
தாக்கிப்பெரு நோக்கத்தினை
நீக்கித்துயர் ஊக்கத்தொடு
சாசனமாகு பெருஞ்சுக நேசமதே மிகவும்புக
ரேசகபூரககும்பக மேசெயுமா * பரநம்பக (தே)

சோத்திராதி புலன்கள்வென்று
தொடருமனத்தைச் சுட்டுக்கொன்று
வாத்தியதச நாதநன்று
மனமகிழ்ந்து மிகவுணர்ந்து
கனலில்வெந்த வமுதமுண்டு
மாக்ஷிப்பெரு மோக்ஷப்பத
சூக்ஷித்தெரி காக்ஷிக்கொள
மறந்துமெய்சமாதிநிலை யறிந்துறைவிவேகமது
சிறந்துமேசுபோதமடை திறந்துபாய்குணுதிபதி ()

---

22. துலங்குசெம்பொன்.

சேஞ்சுருட்டி] கண்ணிகள். [ஆதி

தவம்புரிந்துண்மைப்பொருள்கண்டவர் தாரணியிற்
[கடப்பை
சச்சிதாநந்தயோகியே உலகமெங்கும்
மெச்சும்பெறுவிவேகியே விரி

---

* பரம்-நம்பு-அகம்+சிவத்தை-நம்பும்-மனம்.

தாரணிக்குளதி ரகஸியமானதை
பூரணத்தில்மிக வெளியினிலோதிய
சத்துவபோதத்யாகியே சந்தேகமற்ற
தத்துவஞானயோகியே (த)

பவம்பெருஞ்சஞ்சிதவினையற்றிட பாரவஷ்டாங்கயோகம்
பழகித்தெரிந்தஜோதியே பத்மாசன
வழகிற்சிறந்த நீதியே மனம்
பக்குவமாகிட முக்கியமானஸ
நற்கனபூஜையி யற்றியசாதன
பண்புபொருந்தும் ஆதியே வைராக்கியத்தில்
உண்டுபலப்ரக் யாதியே (த)

சிவந்தெழும்பும்யோகாக்கினியது சிரசில்படக்கரைந்து
சிந்தும் அமிர்தபானமே தினமுஞ்செய்து
சொந்தமடைந்தார் ஞானமே சந்தச்
செந்தமிழ்வேலா யுதசாமித்தினம்
சிந்தையில்பாமாலையையோதித் தொழும்
சித்தநிர்மலநேசியே முற்றுந்துறந்த
வித்தகநற்சந்யாசியே

---

23. பாலராமனையனே.

தோடி] பல்லவி. [ரூபகம்

மிக்கமட நெஞ்சமே மிக
மெய்யெனநம்பாதே பொய்யேப்ரபஞ்சமே (மி)
வீணிற்றிரி யாதேவினை
பேணிப்புரி யாதே பவ (மி)

விரும்பியுல குறும்பொருளே
யருங்கதியை யிழந்துவிடும் (மி)

விளக்கைக்க ரம்பிடித்துக்
கிணற்றில்வி ழுந்திறக்கும் (மி)

வேதமுத லாகிநடு வாகிமுடி
வாகிநிறை வானபொரு ளேயறிவை (மி)

அநுபல்லவி.

முக்கியமான முழுப்பொருள்தன்னை
முதலில்கண்டுக்கொண்டு செய்குவாய்பின்னே
தக்கவுன்காரியம் சாங்கமாய்ச்சொன்னேன்
தப்பாதிம் மொழிகேட்டுபி
ழைப்பாயுன் மதமென்னே (மி)

பல்லவித்தொடர்.

அல்லல்தனைக்கொள்ளாதே கொண்டு
அழிந்துபோகாதேநாள் கழிந்துசாகாதேபாழ் (அ)

அநுபல்லவித்தொடர்.

கல்லிலும்செம்பிலும் கடவுள்தானேது
கண்காக்ஷிக்குச்செய்தார் காசினிமீது
சொல்லுகிறேனிது முற்றிலுஞ்சூது
சுருக்கியறி யுன்னுள்ளே
யிருக்கிறது தப்பாது (மி)

பல்லவித்தொடர்.

சற்குருவைப்போற்றுவாய் மதுரச்
சந்தவேலாயுதன் செந்தமிழ்சாற்றுவாய் (ச)

அநுபல்லவித்தொடர்.

கற்கண்டெனும்பர கதியினைநாடு
கடப்பையோகீஸ்வரர் கருணையைத்தேடு
அற்பமனைவாழ்க்கை யைத்தள்ளிப்போடு
ஆனந்தப் பெருங்கடலி
லேநின்றுக் கூத்தாடு (மீ)

---

24. ஆசிரியவிருத்தம்.

பொல்லாத திரைவீசு வாரிதி கடந்திடப்
* புணைபோல வும்பெருத்த
புகலறும் பசிதா னடங்கிடப் பொன்னுலகப்
புத்தமுத மேபோலவும்
சொல்லாத விருள்மூண்ட கானகந் தாண்டத்
தெரிந்ததுணை யைப்போலவும்
தீராதுமேன்மேலு மதிகமாம் நோய்நீங்கச்
சித்தௌஷ தம்போலவும்
வெல்லாத சிங்கத்தை வெல்லவே வளர்சத்தி
வேலாயுதம்போலவும்
வினைமாந்தர் கண்டுய்ய வொளிர்ஜீவ ப்ரம்மைக்ய
வேதாந்த ரகஸியத்தைச்
சல்லாப முடனுரைத் திட்டபர மாசார்யத்
தவயோக சிவயோகியே
தடப்பொழில்கள் பலசூழ்ந்த கடப்பைவளர் பரமாம்ஸ
சச்சிதா நந்த குருவே.

---

* புணை-தெப்பம்.

25. செந்தின்மாநகரந்தனில்.

சேஞ்சுருட்டி] கண்ணிகள். [சாப்பு

சச்சிதாநந்த யோகேந்த்ர காரண
சற்குருபாதத்தைப் போற்று அவர்
நற்பெருங்கீர்த்தியைச் சாற்று மெய்யாய்
தங்குமிச்சக வாழ்வுசொப்பன
மென்பதிற்றடை யாதிருப்பது
சங்கமே கண்முன் வாழ்ந்தோரிறந்தார்கள்
சற்றும்நீயோசியா வண்ணமே யாது
குற்றம்பொருந்துமென் எண்ணமே (ச)

மெச்சியேவரும் மனைவியும்மக்களும்
வீடுதோட்டங்களும் ஆஸ்தியே யதும்
தேடும்பொருள்களும் நாஸ்தியே நாளை
வீங்கிடாமுனம் நான்குபேர்களும்
ஓங்கிதோள்மிசை தாங்கியேசெல
மிக்கவே வுந்தன் கூடவெதுவரும்
விளம்பிடுகொண்பேனுன்யூகமே சுகம்
வளர்ந்ததுபோதுமுன் ஸ்நேகமே (ச)

நல்லமாதிரி பெண்களைக்கண்டாலே
நவிலுமுன்நாடுகின்றுயே வரும்
கவலைதனைத்தெரி யாயே மிக
நகைப்புக்கிட மிதைச்சொற்றிடில்
மிகுத்துத்தெரி மடப்புத்தியே
நப்பிஞலிந்த நானிலவாழ்க்கையை
நாசமேயாகுவா யீது கண்டும்
மோசமடைதல்த காது (ச)

வல்லமாயையின் சம்மந்தத்தால்மெய்யை
வழுவித்துயரிற்சேராதே சொன்னேன்
பழுதையைப்பாம்பென்றோராதே பல
வற்றையுற்றுந சிந்திடாதழி
வற்றமெய்ப்பொருள் கண்டிடாயினி
வற்றிடாச்சந்த மதுரவேலாயுதன்
வாக்கியமேதகும் சாக்ஷி இதை
நோக்கியறிந்திடு சூக்ஷி (ச)

---

26. என்னகேள்விமுறை.

பிலஹரி] பல்லவி. [ரூபகம்

ராஜயோகமே எந்த
நாளும்நலந்தரு மேசுபாகமே (ரா)

அநுபல்லவி.

பூஜா விதியி தேசாதனையி லேசாதாரண (ரா)

சரணங்கள்.

வித்யாசமற்றிடும் நித்யானந்தம்பெறச்
சித்தாசனமாய்ச்சின் முத்ராஸ்த்தத்துடனே
மேலாகச்செயுங் கோலாகலவி சாலாதிசய (ரா)

மந்திரமான "ஸோ ஹம்" தனில்த்யானமாம்
தந்திரமோனயோ கந்திரமானதே
வாட்டும்பவத்தை யோட்டும்அவத்தைக்கூட்டும் சிவத்தை
பூரகரேசகத் தோடுபொருந்தியே
நேரகத்துள்ளே நினைந்துதிருந்தியே
போற்றும் ஜனன மாற்றும்மனனந் தோற்றும்சுஜன (ரா)

கானந்தருஞ்சந்த ஞானவேலாயுதன்
த்யானந்தரும்சச்சி தானந்தயோகீசர்
காட்டும் ஞானப்பா லூட்டும் மோனத்தில் பூட்டும்
மெஞ்ஞான (ரா)

---

27. எமிமாயமு.

காம்போதி] பல்லவி. [ரூபகம்

உண்மையான வேதநூலை யுணர்ந்தசந்யாசி
உரைக்கமு பந்யாசி (உ)
உத்தமதவ மெத்தவுமிழை
தத்துவபரி சுத்தவிரத (உ)
ஒடுக்கி மனத்தை யகத்தி
லடக்கி சுகத்தி லிருக்கும் (உ)
உடைப்படா பந்தமதனி
னிடைப்படா விஞ்சையருளும் (உ)
உலகத்தவர் கதியைப்பெற
திலகத்திரு வுருவுற்றிடும் (உ)

அநுபல்லவி.

திண்மையான சிவத்தின் நிலையைத்
தேர்ந்த ஓர்ந்த சார்ந்த மெய்ஞ்ஞானி (உ)

சரணங்கள்.

என்றுமழியாத வின்பத்திலோயாத
இச்சையுறுவோருக் கின்றியமையாத
நன்றுவேதாந்த ரகசியமாம்போத
நாயகநூலை மொழிந்தவர்
தூயசமாதி யறிந்தவர் (உ)

நாவல்கதைகளை நாம்தள்ளிப்போடுவோம்
நலமிகுமந்நூலை நாளுமேநாடுவோம்
பாவலன்வேலாயு தன்கவிபாடுவோம்
பற்றற்ற மனம்பெறுவோம்
சற்றுற்று நினைந்தறிவோம் (உ)

28. ஆசிரியவிருத்தம்.

சஞ்சிதம் ப்ராரத்வ மாகாம்ய மென்றுமிகச்
சாற்றிடும் வினைகள்மூன்றும்
தப்பாதொழிந்துவிடி லப்போதலோபிறவி
தானுந் தொலைந்து போகும்
வஞ்சக மிகுந்தமன முள்ளவரை யிற்பிறவி
வாரா தொழிந்திடாதே
மனமற்ற விடமாகு மழிவற்ற சுகமென
வழுத்துவது மிகவுண்மையே
மிஞ்சிவெளி யோடித்திரிந்திடு மனத்தினை
வீக்கி சூட்சுமமதாக்கி
மிக்கவதையுஞ்சூன்ய மாக்கியே பேரின்ப
வீடடையு மார்க்க மருள்வாய்
தஞ்சமென வுந்தனிரு செஞ்சர ணடைந்தனன்
தமியேனும் நான்சிறுவனே
தடப்பொழில்கள்பலசூழ்ந்த கடப்பைவளர் பரமாம்ஸ
சச்சிதா நந்த குருவே.

29. ஷாதுமான்.

இந்துஸ்த்தான்தோடி] பல்லவி [ஏகம்.

தேகமே ஆகுஞ்சந் தேகமே (தே)

அநுபல்லவி.

தினமேமிக நிலையாமென
நினையேல்மட மனமேகன (தே)

சரணங்கள்.

நாகமதையணிந்த நாதன்பதமதையே
நம்பு நம்பு நம்பு நம்பு
நாட்டஞ்சுழற்றிக் காட்டுங்கொங்கையர்
நோட்டந்துரத்திற் தேட்டங்கொண்டிடு (தே)

ஊனும் நரம்பெலும்பும் உதிரம்மலநிறைந்த
உடலம் உடலம் உடலம் உடலம் அதில்
உலவித்திரியும் காற்றின்மூச்சு
வெளியிற்பிரியின் ஆட்டம்போச்சு (தே)

கூடும்மனையுறவோர் குழந்தைகளும்சந்தைக்
கூட்டம் கூட்டம் கூட்டம் கூட்டம் அந்த
குறிப்பையுரைக்கி னுலகினியல்பு
சிரிப்பைவிளைக்கு மதிகமதிகம் (தே)

மதுரமிகுஞ்சந்த மலியும் வேலாயுதனின்
வாக்கு வாக்கு வாக்கு வாக்கு இதை
மதிக்குளிருத்தி மிகுத்துபொருத்தி
இதத்தையருத்தி படுத்துவிருத்தி

30. இன்னமுங்கோபமா

பிலஹரி] பல்லவி [ரூபகம்

பொய்யானகாயம் உயிர்
போகும்போதெவர் செய்வார்சகாயம் (பொ)

அநுபல்லவி.

மெய்யா யெண்ணியே யையாதிந்தநாள்
செய்யாயுபாயம் (பொ)

சரணங்கள்.

ஆதாரமாறில் அடைந்துவருங்காற்று
அனைத்துமுடிந்தா லதுநமக்குக்கூற்று
வேதாவியாம்பர வெளியிலதையேற்று
மேன்மையாம்ஜீவனை வேண்டியிடம்மாற்று
விந்தைத்தரு மந்தக்கர
ணங்கெட்டிட தண்டித்திடு
சிந்தைத்தனை சொந்தப்பட
மிஞ்சித்தினம் கண்டித்திடு
வீணாய்ப்போகாதே வாணாளேகிடும் காணாய்மெத்
தவும் (பொ)
மண்பெண்பொன்னாசை மயக்கங்கள்பொல்லாது
வஞ்சமனமொரு வழியினில்நில்லாது
சண்டனெறியும் பாசந்தன்னைவெல்லாது
தகைமையுஞ்செல்வச் சம்பத்துகள் செல்லாது
சந்தச்செந் தமிழ்வேலா
யுதன்றொழும் சச்சிதா
னந்தப்பண் பவர்நேராய்
நவின்றிடும் உச்சித
சந்தே கமில்லாச் செந்தேனுண்டுபொ ருந்தேபேரின்பம்()

மங்களம்.

31. கல்யாணம்செய்தமைவையுமே.

ப்யாக்] பல்லவி. [ஆதி

சம்பூர்ணஜெயமங்களம் தினம்
தருநய கனசுப (ச)

அநுபல்லவி.

லம்போதரகண நாயகனடிக்கும்
நந்தொலிசாகர நடுவுறும்படிக்கும்
விண்பாலிருந்துமே வீழ்ந்திடுமழைக்கும்
வித்தகயோகிகள் மிகுதவக்களைக்கும் (ச)

கயலினந்தாவியே கமுகினிற்குதிக்கும்
கழனிகள்சூழ்ந்திடுங் கடப்பையம் பதிக்கும்
ஜயமிகுந்தூயவே காம்பரநிதிக்கும்
சச்சிதானந்த மா தவவாரிதிக்கும் (ச)

சந்ததமேபர தாசர்கள் தனக்கும்
தங்கிடும்துரிதச் சந்தங்கள்தொனிக்கும்
செந்தமிழ்வேலா யுதன்கவிக்கனிக்கும்
சென்னை ஸச்சிதானந்த கம்பெனிக்கும் (ச)

32. வாழி விருத்தம்.

வேதமொரு நான்கதுவு மிகவே வாழி
விரிஜீவ ப்ரம்மைக்ய மெய்ந்நூல் தானும்
ஏதமறு மிந்நாலு மென்றும் வாழி
இயற்றினோர் படித்தவர்களியல்பாய் வாழி
நீதமுடன் கேட்டவர்கள் நெறிநின்றோர்கள்
நிலையான சுகமடைந்து நிதமும் வாழி
கோதறவே யச்சியற்றி முடித்த ஸச்சி
தானந்த கம்பெனியும் வாழி மாதோ.

ஸச்சிதானந்தத் தமிழ்ப்பாமாலை சம்பூர்ணம்.

முகவுரை.

ஓ சஹோதரி! சகோதரர்களே!

எல்லா தேசங்களிலுமுள்ள ஸ்திரீ புருஷர்களனைவரும் ஆசாபாசங்களென்னும் மாயையாற் கட்டுப்பட்டு மோக்ஷமென்னும் வீட்டை அடைய சக்தியில்லாமல், மரணமடைந்து மறுபடியும் வேறு சரீர மெடுக்கின்றார்கள். இவ்வாறாக வேறு சரீர மெடுத்தபின், முன்ஜன்மவாசனையினால் அடுத்த ஜன்மத்தில் மற்றும் சில ஆசைகள் அதிகரித்து மறுபடியும் மரணமடைகின்றார்கள். இவ்வாறாகவே ஒவ்வொரு ஜன்மத்திலும் ஆசைகள் சிறுகச்சிறுக அபிவிருத்தியாய்க்கொண்டே வருவதனால், அந்தப் பாழும் ஆசைகள் மோக்ஷமென்னும் வீட்டை அடையவிடாமல் செய்விக்கின்றன.

மோக்ஷமென்னும் பதத்திற்குச் சரியான அர்த்தம் என்னவென்றால் விடுதலை. விடுதலை என்றால், எல்லா ஆசாபாசங்களிலிருந்து விடுதலை அடைவதே யாம். இவ்வண்ணமாய் எல்லா ஆசைகளுடனிருந்து அநேக ஜன்மங்களை எடுத்துப் பிறந்துகொண்டும் மறுபடியும் இறந்துகொண்டுமாய் இருக்கும் விஷயம் உங்கள் எல்லோருக்கும் தெரிந்த விஷயமே யல்லவா? ஜலத்திலுண்டாகும் நீர்க்குமிழிகள் எவ்வளவு சீக்கிரமாய் ஜலத்தில் பிறந்து பிறந்து உடனே நசித்துப்போகின்றனவோ, அவ்வண்ணமே எல்லோருடைய தேகத்திற்குள்ளிருக்கும் ஜீவனும் சிலநாள்மாத்திரம் அந்தத் தேஹத்திற்குள் குடியிருந்து, எனது எனது என்னும் ஆசையால் கட்டுப்பட்டிருந்து மறுபடியும் அத்தேஹத்தைவிட்டு மற்றொரு தேஹத்தில் போய்ச்சேரும். இவ்வாறாகவே ஜீவன் அடிக்கடி ஒவ்வொரு தேஹத்தையும் விட்டுப் பல தேஹங்களை எடுத்துக்கொண்டே போகின்றது.

ஜீவன் ஒவ்வொரு தேஹம் எடுக்கும்பொழுதெல்லாம் ஒவ்வொருவீட்டிலும் தனக்கு வந்துசேரும் மனைவி, புத்திரர்கள், புத்திரிகள், பேரன், பேத்திமார் முதலானவர்களின்மீதும் மற்ற பந்துக்களின்மீதும் எப்படி இருக்கவேண்டுமென்றால், பார்க்கப்பட்டவர்களுக் கெல்லாம் மிகவும் ஆசையுடையவனைப் போல் நடித்துக்காட்டிப் பிறகு தனக்குள்தான் அடியில் சொல்வதுபோல் இருக்கவேண்டும். அஃதெப்படியென்றால்,

"பத்மபத்ர யதாதோயைஃ ஸ்வஸ்த்தைரபி நலிப்யதே
ஸப்தாதி விஷயாம்போபிஃ தத்வஜ்ஞானி நலிப்யதே

யஸ்மாந் மந்த்ரபலோபேதஃ க்ரீடந் ஸர்ப்பைர்ந தஸ்யதே
க்ரீடந்நபி நலிப்யதே தத்வதிந்திரிய பந்நகைஃ."

தாமரை இலையின்மீதிருக்கும் ஜலம் தாமரை இலையில் ஒட்டாமல் முத்துச் சொரூபமாய் எப்படி அசைந்துகொண்டிருக்கின்றதோ அதுபோல் மனமானது எல்லா ஆசைகளுடன் கூடியிருந்தபோதிலும், அவ்வாசைகளின்மேல் பற்றுதல் இல்லாமல், மேற்படி தாமரை இலையின் மீதிருக்கும் ஜலபிந்துவைப் போல் இருக்கவேண்டும். இதன்றியும் இந்த ஆசைகளிலிருந்து எப்படி தப்பித்துக்கொள்ளவேண்டுமென்றால்,

மந்திரங்கற்ற பாம்பாட்டியானவன் சர்ப்பங்களுடன் விளையாடிக்கொண்டிருந்தபோதிலும், அந்த சர்ப்பங்கள் புஸ்புஸ் என்று சீறிக்கடிக்க வரும்பொழுது அக்கடிக்கு அகப்படாமல் எப்படித் தப்பித்துக்கொள்கின்றானோ அதுபோல் விஷத்திற்குச் சமானமாயிருக்கும் குடும்பத்திலுள்ள ஆசைகளின் மேல் பற்றுதலை வையாமல் அந்த ஆசைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளவேண்டும்.

மனைவி மக்கள்மேல் இருக்கும் ஆசையினால் அவர்களைக் காப்பாற்ற தனத்தைச் சம்பாதித்தபோதிலும், அத்தனத்தின் மேல் விசேஷ பற்றுதலும் ஆசையும் இல்லாதவர்களாயிருந்து தனத்தைச் சம்பாதித்தும், விசேஷபக்தியுடன் கடவுளைத் தொழுதும் நல்ல தர்மகார்யங்களைச்செய்தும் மரணமடைவார்களேயாகில், மறுஜன்மத்தில் தாம் முன்ஜன்மத்தில் அடைந்த சுகத்தைவிட இன்னும் மேலான சுகத்தைத் தப்பாமல் அடைவார்கள். இவ்வாறாக ஜீவன் நல்ல கார்யங்களையே செய்து பல ஜன்மங்களை எடுத்துக் கடைசியில் ஏதோ ஓர் ஜன்மத்தில் தான் செய்துவந்த நல்ல புண்ணியவிசேஷத்தினால் தன்னைப் பற்றிக்கொண்டேவந்த எல்லா ஆசைகளும் அறவே ஒழிந்து அதன்பிறகு, ஜீவன் மோக்ஷமென்னும் பெருத்த சாம்ராஜ்ய பதவியைத் தப்பாமல் அடையும். மாயை என்பது ஜீவர்களை எவ்வாறு பற்றிவருகின்றதோ அதுவிஷயத்தைக்குறித்து இனி சொல்லப்போகின்றோம் கேளுங்கள்.

இங்ஙனம்

பரமஹம்ஸ ஸச்சிதானந்தன்

கடவுள் பிரபஞ்சத்தைச் சிருஷ்டிசெய்து பிறகு மாயையை உண்டாக்கி, அம்மாயை ஸ்திரீ புருஷர்களைத் தொடர்ந்துவரச் செய்விக்கின்றார்.

எனதன்பர்களே !

இந்தப் பிரபஞ்சத்திலுள்ள மனிதர்களெல்லோரும் "மாயை, மாயை" என்று வழக்கச்சொல்லாய்ச் சொல்வதுண்டு. அந்த மாயை என்பது எப்படிப்பட்டதோ அதன் விஷயத்தைக் குறித்து இனி சொல்லப்போகின்றோம் கேளுங்கள்.

பிரமதேவர் ஆதியில் பிரபஞ்சத்தைச் சிருஷ்டிசெய்யும்பொழுது எண்பத்துநான்குலக்ஷ ஜீவராசிகளையும் சிருஷ்டிசெய்தனர். இந்த எண்பத்துநான்குலக்ஷ ஜீவராசிகளிலும் வெவ்வேறான ஜாதிகளும், அந்தந்த ஜாதிகளுக்குத் தக்க பாஷைகளையுடைய நான்குலக்ஷ மனித ஜாதிகளைக் கலியுக ஆரம்பத்தில் சிருஷ்டிசெய்தனர். பிறகு, இவர்களின் ஆஹாரத்திற்காக வேண்டிய நெல், கோதுமை, சோளம், கம்பு, கேழ்வரகு, தினை, இன்னும் அநேகவிதங்களாகிய தானிய வஸ்துக்களைச் சிருஷ்டிசெய்து பிறகு, அவைகளுக்குவேண்டும், கத்திரி, வண்டை, புடலை, அவரை, பூசனி, பீர்க்கன் இன்னும் அநேகவிதங்களாகிய பதார்த்த தினுசுகளும், பழதினுசுகளும், கீரைதினுசுகளும், இதன்றியும் துவரை, உளுந்து, பச்சை, மொச்சை இன்னும் அநேக விதங்களாகிய தானிய தினுசுகளும், புளி மிளகாய் தினுசுகளும் சிருஷ்டிசெய்து, பிறகு பிரபஞ்சத்திற்கெல்லாம் உப்பு வேண்டியதாய் இருப்பதனால் சமுத்

திர ஜலத்தையே உப்புஜலமாய்ச் சிருஷ்டிசெய்து, அந்த சமுத்திர உப்புஜலத்தைக் கழனியில்பாய்ச்சி உப்பாய்ப் பயிர்செய்து உபயோகப்படுத்திக்கொள்ள ஏற்படுத்தி, மேற்சொல்லிய தானிய தினுசுகளும் அந்தந்தக் காலங்களில் சரியாய் விளைவதற்காக வேண்டும் மழையை அப்போதைக்கப்போது வருஷவாரியில் பெய்விக்கச்செய்து வருகின்றார். இவர்களுக்கு வேண்டும் பால், தயிர், வெண்ணெய், நெய் முதலியவைகளுக்காகப் பசுக்களையும், எருமைகளையும் சிருஷ்டிசெய்வித்தனர். இதன்றியும் இன்னும் என்னசெய்தாரென்றால், ஜனங்களுக்குக் குளிர்காலத்தில் போர்த்துக்கொள்ள கம்பளிகள் வேண்டுமல்லவா? அதற்காக குரும்பாடுகளைச் சிருஷ்டிசெய்து அவற்றின்மேலிருக்கும் மயிர்களைக் கத்தரித்து, அம்மயிர்களைக்கொண்டு கம்பளிகள் நெய்து, போர்த்துக்கொள்வதற்காக ஏற்பாடு செய்திருக்கின்றார்.

வெள்ளாடுகள் எல்லாவிதமாகிய செடிகளிலுள்ள தழைகளை வாயால் பரித்துத் தின்னும். அதனால், அதன் பால் மிகவும் சிரேஷ்டமானது. அந்தப்பால் எல்லோருக்கும் உபயோகப்படுவதற்கும், அவைகளின் மலமூத்திரம் பயிர்களுக்கு மிகவும் உயர்ந்த எருவாயிருப்பதனாலும் இந்த வெள்ளாடுகளையும் சிருஷ்டிசெய்தனர். அன்றியும் இன்னும் சொல்லுகின்றோம் கேளுங்கள்.

பயிர்வேலை செய்யப்பட்டவர்களும், வியாபாரம் செய்யப்பட்டவர்களும், உத்தியோகம் செய்யப்பட்டவர்களும், காலையில் ஸ்நாநம்செய்து ஜபதபாதி பூஜைகள் செய்யப்பட்டவர்களும், மற்றெல்லோரும் இரவு போஜனமுண்டு படுத்துத் தூங்கிக்கொண் டிருப்பார்கள். இப்படியாய்த் தூங்கிக்கொண் டிருப்பவர்களெல்லோரும், காலை

மூன்றுமணிக்கெல்லாம் எழுந்து அவரவர்களின் கார்யங்களையெல்லாம் பார்க்கும்படித் தெரிவிப்பதற்காக கடவுளானவர் சேவல்களைச் சிருஷ்டி செய்தபடியால், அச்சேவல்கள் தினந்தோறும் காலை மூன்று மணிக்கெல்லாம் எழுந்து இறகுகளைப் படபடவென் றடித்துப் பூமியை மூன்றுதரம் தம் மூக்கினால் குத்தி, அதன் பிறகு "கொக்கர்கோ—கோ!" என்று கூவும். இவ்வாறாக ஒருமுறைக்குப் பன்முறை கோழிகள் கூப்பிடும். அப்போதுபொழுது விடிந்ததென்று ஜனங்களெல்லோரும் எழுந்து அவரவர்களின் கார்யங்களைச் செய்யச் சென்றுவிடுவார்கள். இதன்றியும், பெட்டைக்கோழிகளும் அதன் குஞ்சுகளும் சேவல்களும் தம்தம் எஜமானர் வீட்டின் சமீபமாயிருக்கும் புழுக்களையும், சிதறுண்டிருக்கும் சாதம் தானியங்கள் முதலானவைகளையெல்லாம் தின்று, தம்தம் எஜமானர் வீட்டினிடம் சுத்தம் செய்துவைக்கும்.

ஜனங்களுக்கு வேண்டும் சௌகர்யத்திற்காகவே குரும்பாடுகளையும், வெள்ளாடுகளையும், கோழிகளையும் கடவுளானவர் சிருஷ்டிசெய்தாரேயொழிய அவைகளை அறுத்துச் சாப்பிடுவதற்காக அல்ல.

பிரபஞ்சத்தை முதல் சிருஷ்டிசெய்யுங்காலத்தில் ஜனங்களுக்குவேண்டிய இவ்வாறான கார்யங்களையெல்லாம் கடவுளானவர் ஏற்படுத்திவைத்துப் பிறகு மாயை என்பதை எவ்வாறு உண்டாக்கினாரோ அதுவிஷயத்தைக் குறித்து இனி விவரமாய்ச் சொல்லப்போகின்றோம் கேளுங்கள்.

மாயை ஸ்திரீ புருஷர்களைத் தொடர்வது.

பிரபஞ்சோற்பத்தி காலத்தில் நான்குலக்ஷ ஜாதி பேதமுடைய ஜனங்களைப் பிரமதேவர் சிருஷ்டி செய்தாரென்று இதுவரையில் முன் சொல்லியிருக்கின்றோம். ஆதலால், அந்தந்த ஜாதியிலுள்ள ஆண் பெண்களைக் கர்ம காண்ட விதிப்படி விவாகம்செய்ய ஏற்படுத்திவைத்தார்கள். விவாகம் முடிந்தபின் தம்பதிகள் இருவரும் ஒருவர் மேல் ஒருவர் ஆசையா யிருக்கும்படி, கடவுளானவர் ஓர் மோஹத்தை உண்டாக்கினர். தம்பதிகள் இருவரும் ஆசை என்னும் மோஹத்தால் கட்டுப்பட்டிருப்பதே 'மாயை' என்று சொல்லப்படும்.

தம்பதிகள் இருவரும் மாயை என்னும் கயிற்றால் கட்டுப்பட்டிருப்பதனால் புருஷன் சொல்வதுபோல் மனைவியானவள் நடந்துகொள்வாள். அதனால் மனைவியின் மீது புருஷனுக்கு அதிக ஆசை யுண்டாகின்றது. அந்த ஆசை என்னும் வலையில் புருஷன் எப்படி அகப்பட்டுக்கொள்ளுகின்றனோ அதை இனி சொல்லப்போகின்றோம் கேளுங்கள்.

தன் புருஷனுக்கு எந்தப்பதார்த்தங்களின்மீது அதிக பிரீதியோ அந்தப் பதார்த்தங்களை அப்போதைக்கப் போது சமைத்து இலையில் பரிமாறி, தான் தன்புருஷன் சமீபமாய் உட்கார்ந்து விசிறியினால் விசிறிக்கொண்டே நல்ல சந்தோஷமான பேச்சுகளைப் பேசிக்கொண்டிருப்பது வழக்கம். இப்படியாய் நடந்தேறிவரும் நாளில் ஒரு நாள் தன் புருஷன் மிகவும் சந்தோஷமாய்த் தன்னுடன் கூடப் பேசிக்கொண்டிருக்கும் சமயத்தில் தன் புருஷனைப் பார்த்து பல்லெல்லாந் தெரியக்காட்டிச் சிரித்துக்

கொண்டே தான் நல்ல வார்த்தைகளைப் பேசி "எனக்கு காசிமாலையும், கை வங்கிகளையும் செய்துதந்து, காசிப் புட்டாசேலையும் மத்தாப்பு ரவிக்கையும் வாங்கிக் கொடுங்கள்" என்று தனது புருஷன் மோவாய்க் கட்டையைப் பிடித்து மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொள்வாள். அப்போது அவள்மீதிருக்கும் மோஹத்தினால் அவன் அப்படியே ஆகட்டுமென்று சொல்லுவான். அவ்வாறு சொன்னவுடன் அவள் மிகவும் சந்தோஷிப்பாள். இவ்வாறான அல்பசுகத்தை இச்சித்து சந்தோஷிப்பதே 'மாயை'

அதன்பிறகு சில நாளில் காசிமாலையும் கை வங்கிகளையும் செய்வித்துத் தன்மனைவியிடம் தந்து பிறகு, காசிப் புட்டாசேலையும், மத்தாப்பு ரவிக்கையும் வாங்கிக் கொண்டுவந்து கொடுத்தான். இவைகளையெல்லாம் பெற்றுக்கொண்டபிறகு, "ஆஹா! நான் கேட்டவுடன் யாதொரு தடையும் சொல்லாமல் இவைகளையெல்லாம் வெகு சீக்கிரத்தில் செய்வித்துக் கொண்டுவந்து கொடுத்தாரல்லவா? என்று தனக்குள் தான் எண்ணி மிகவும் சந்தோஷித்து, புருஷன்மீது முன்னிருந்த ஆசையைவிட இன்னும் அதிக ஆசையாய் இருந்தாள். இந்த ஆசைக்கே 'மாயை' என்று சொல்லப்படும்.

பிறகு தன்புருஷன் ஓர் கார்யார்த்தமாய்த் தனக்குப் புலிப்பால் வேண்டியதாயிருந்து தன் நாயகியிடம் சொல்லினன். அப்போது தன் நாயகியானவள் உடனே புலிப்பாலைக் கொண்டுவரத்தக்க மனிதர்களைக் கண்டுபிடித்து வரவழைத்து, அவர்களுக்கு எவ்வளவு பொருள் வேண்டுமோ அவ்வளவு பொருளையும் கொடுத்தனுப்பி, சீக்கிரமாய்ப் புலிப்பாலை வரவழைத்துத் தன்நாயகனுக்குத் தந்தனள். கிடைக்கத்தகாத புலிப்பாலைத் தன்நாயகி சீக்கிரமாய் வரவழைத்துக் கொடுத்தபடியால் தன் நாயகியின்

மீது முன்னிருந்த ஆசையைவிட இன்னும் அதிக ஆசை ஏற்பட்டது. இந்த ஆசைக்கே 'மாயை' என்று சொல்லப் படும்.

ஒருவர்மேல் ஒருவருக்கு இவ்வாறுன ஆசைகள் ஏற் பட்டு சில காலம் சென்றபிறகு, இவர்களுக்குப் புத்திர சந்தானமுண்டாய், அக்குழந்தையை மிகவும் பிரீதியுடன் தாலாட்டி வளர்த்துவந்தார்கள். அக்குழந்தைக்கு இரண் டுவயது தொடங்கியவுடன் கண் எது, மூக்கு எது, வாய் எது, கை எது, கால் எது, தலை எது என்று அக்குழந்தை யைக் கேழ்ப்பார்கள். அப்போது அக்குழந்தை அந்தந்த அங்கங்களையெல்லாம் தன்விரலால் தொட்டுக்காட்டும். பிறகு அப்பா யார், அம்மா யார், அத்தை யார், தாத்தா யார் என்று கேழ்ப்பார்கள். அப்போது, அவர்களையெல் லாம் அக்குழந்தை தன்விரலால் சுட்டிக்காட்டும். பிறகு அப்பாவென்று சொல், அம்மாவென்று சொல், அத்தை யென்று சொல், தாத்தாயென்று சொல் என்று இவ்வா றுன வார்த்தைகளைக் கற்றுக்கொடுப்பார்கள். அப்போ ழுது அக்குழந்தையானது தன் சிறியவாயால் முத்துக் களைப்போன்ற வார்த்தையால் அவர்களின் பெயர்களை யெல்லாம் சொல்லும். அப்படிப்பேசும் முத்துப்போன்ற வார்த்தைகளையெல்லாம் குழந்தையின் தாய்தந்தையர் கள் கேட்டு மிகவும் சந்தோஷித்து அக்குழந்தையை வாரி யெடுத்து முத்தமிட்டு என்செல்வமே, என்கண்ணே, கண் மணியே என்று குழந்தையின் முகத்துடன் முகம்வைத் துக் கொஞ்சுவார்கள். இவ்வாறுக கொஞ்சிக்கொஞ்சி விளையாடுவதே மாயை. இப்படியாய் அக்குழந்தையுடன் கொஞ்சி விளையாடி வளர்த்துவரும்நாளில் அக்குழந்தை சிறுகச் சிறுக வளர்ந்து ஐந்துவயதுடைய சிறுவனுகின் ருன். இப்படியிருக்கும் சமயத்தில் ஒருநாள்காலை அச்சிறு

வனது தந்தை ஏதோ ஓர் கார்யார்த்தமாய்ப் படுக்கையை விட்டெழுந்து வெளியில்சென்று மறுபடியும் காலை பத்து மணிக்கு வீடுவந்து சேர்ந்தான்.

அப்பொழுது அச்சிறுவன் தந்தையைப் பார்த்தவுடன் எதிர்கொண்டோடி, தன் இரண்டு சிறியகரத்தால் தந்தையின் வலதுகரத்தைப் பிடித்து "அப்பா! பலகாரமும் காப்பியும் சாப்பிடாமல் இதுவரையில் எங்கேபோயிருந்தாய்? நான் அம்மாளிடம்போய் பலகாரமும், காப்பியும் கொண்டுவருகிறேன்" என்று தந்தையிடம் சொல்லிப் பிறகு தான் குடுகுடுவென்றோடி தாயைப்பார்த்து "அம்மா! அப்பா எங்கேயோபோய் இப்போதே வந்தார். பலகாரமும் காப்பியும் கொடு; அப்பாவுக்குக் கொண்டு போய்க்கொடுக்கின்றேன்" என்று தாயைக்கேட்டு பலகாரங்களையும், காப்பியையும் வாங்கிக்கொண்டுபோய்த் தந்தையின் எதிரில்வைத்து "சாப்பிடும் அப்பா!" என்று குமாரன் சொன்னவுடன், தந்தையானவன் என்ன ஆலோசிக்கின்றானோ இனி அதைச் சொல்லப்போகின்றோம் கேளுங்கள்,

"ஆஹா! வெளியில்சென்று சற்று ஆலஸ்யமாய் வந்ததற்காக நான் சாப்பிடவில்லை யென்று மகன் பரிதாபப்பட்டு உடனே தன் தாயிடம் சென்று பலகாரமும், காப்பியும் கொண்டுவந்து கொடுத்தானல்லவா?" என்று குமாரன்மேல் முன்னிருந்த ஆசையைவிட இன்னும் ஆசை அதிகமாயிற்று. இந்த ஆசைக்கே 'மாயை' என்று செல்லப்படும். அச்சிறுவன் தன் தாய்த் தந்தைகளின்மீது இவ்வாறான ஆசைகளுடன் கூடி இருக்கும் சமயத்தில் ஏதோ ஓர் வியாதிகண்டு உடனே அகஸ்மாத்தாய் இறந்து விட்டான். அப்போது அவன் தாய்த் தந்தையர்களுக்

குத் திக்கென்று வயிறெரிந்து பிறகு, சிறுவனது தந்தையானவன் என்னசொல்லி அழுகின்றானென்றால்,

"அப்பா மகனே! சென்றுவிட்டாயா? நான் எவ்விடமாகிலும் சென்று சற்று ஆலஸ்யமாய் வருவேனேயாகில், அப்பா! காப்பியும் சாப்பிடாமல் இவ்வளவு நேரம் எங்கு போயிருந்தாய் என்றுசொல்லி, பிறகு உன் தாயிடம் சென்று எனக்காக பலகாரமும் காப்பியும் கொண்டுவந்து கொடுத்தாயே? அப்பா! மகனே! இனி யார் உன்னைப் போல் உபசரித்து எனக்குப் பலகாரங்களையும், காப்பியையும் கொண்டுவந்து கொடுக்கப்போகின்றார்கள்" என்று குமாரன் தனக்காக செய்த நன்மைகளெல்லாம் அச்சமயம் ஒன்றின்பின் ஒன்றாய் வந்துகொண்டே இருப்பதை யெல்லாம் தான் நினைக்கநினைக்க அப்போது எங்குமில்லாத பெருந் துக்கமுண்டாய், ஓ வென்று கதறி, கண்களில் தாரைதாரையாய் ஜலம் வரும்படி வெகுநேரம் வரையில் அழுதுகொண்டே இருப்பான். இவ்வாறாக மிகவும் துக்கப்பட்டு குமாரனை நினைத்து அழுவதே 'மாயை' என்று சொல்லப்படும்.

குமாரன் செய்த நன்மைகளை யெல்லாம் அந்தசமயத்தில்மாத்திரம் நினைத்து நினைத்து துக்கித்துப் பிறகு அச்சிறுவனை சமாதிசெய்துவந்தபின் சில நாள்களுக்குள் அத்துக்கமெல்லாம் சிறுகச்சிறுக நீங்கி, சிலவருஷங்கள் சென்றவுடன் குமாரனைப் பூர்த்தியாய் மறந்துவிட்டான். தனக்கெதிரில் பிரத்தியக்ஷமாய்க் காணப்பட்டு மறுபடியும் சிலநாள்களுக்குள் காணப்படாமல் மறைந்துவிடுவதே 'மாயை' என்று சொல்லப்படும். இச்சிறுவன் விஷயம் அவ்வாறிருக்கட்டும். இனி, இவன் தாய் விஷயத்தைக் குறித்துச் சொல்லப்போகின்றோம் கேளுங்கள்.

மேற்சொல்லிய சிறுவனுடைய தந்தைக்கு ஏதோ ஓர் வியாதி உண்டாயிற்று. அந்த வியாதியினால் மரணமடைவானென்று அவன் மனைவிக்குத் தோன்றி, அதுமுதல் புருஷன்மேல் ஏக்கம்பிடித்து, மிகவும் மனவருத்தமுண்டாய் அந்த மனவருத்தத்தால், அவளுக்குப் பசியுண்டாகாமல், அவன் வருத்தமே அவளது பசியை ஆற்றிக்கொண்டே வந்தது. பிறகு, அவள் தன்புருஷன் சமீபமாய் உட்கார்ந்து புருஷன் முகத்தையே பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது அவனுக்குப் பெருமூச்சு உண்டாய் அம்மூச்சை வெளியில் விட்டுக்கொண்டும், மறுபடியும் உள்ளுக் கிழுத்துக்கொண்டுமாய்ச் சிலநேரம் வரையில் இருந்து பிறகு, கடைசியாய்வந்த மூச்சானது மறுபடியும் மூக்கிற்குள் பிரவேசிக்காமல் அப்படியே ஓடிவிட்டது. அப்பொழுது தன் புருஷன் சரீரத்தைவிட்டு நீங்கிவிட்டானென்று தனக்குள் திருடமாய்த் தோன்றியவுடன், அந்தக்ஷணமே திக்கென்று அவள் வயிறெரிந்து இரத்தம் வரும்படி தன் இரு கைகளால் வாயில் அறைந்துகொண்டும், நெற்றி வீங்கும்படி பூமியில் அநேக தடவைகளில் நெற்றியை மோதி இடித்துக்கொண்டும் வெகுநேரம்வரையில் கண்களில் ஜலம் தாரைதாரையாய்ப்பெருக அழுது, பிறகு தன் கணவனது முகத்துடன் முகம்வைத்துக் கட்டியணைத்துச் சிலநேரம் அழுது, பிறகு அவன் மார்பின்மீது தன்முகம் வைத்துச் சிலநேரம் அழுதாள். தன்புருஷன் பிராணனை விட்டதுமுதல் வெகுநேரம்வரையில் ஓயாமல் அழுது கொண்டே இருந்ததனால் அவள் சரீரமெல்லாம் மிகவும் அலண்டுப் பிறகு அழ சக்தியில்லாமல் பூமியின்மேல் சும்மாய்ப்படுத்திருந்தாள். ஆனால், பார்க்கப்பட்டவர்களுக்கு மாத்திரம் சும்மாய்ப் படுத்திருப்பவளைப்போல் காணப்பட்டாளேயொழிய தனக்குள் தான் என்ன நினைத்துக்

கொள்ளுகின்றாளோ அதுவிஷயம் இனி சொல்லப்போகின்றோம் கேளுங்கள்.

இறந்திருக்கும் தன்புருஷன்சமீபமாய் அவள் ஒஞ்சரித்துப்படுத்து பூமியைப் பார்த்துக்கொண்டே கீழ்சொல்லப்போகுமாறு தனக்குள்தான் ஆலோசித்துக்கொண்டிருப்பாள். அது என்ன ஆலோசனையென்றால்,

"நான் இவரை விவாகம் செய்துகொண்டபின் என் இஷ்டம்போல் இவருடன்கூடி அநேக சுகங்களை அனுபவித்தேன். இவர் சொல்வதற்கு யாதொரு பதிலும் தடை சொல்லாமல் அவர் இஷ்டம்போல் நடந்துவந்தேன். இவர் எந்த வஸ்துக்களை அதிக பிரீதியாய்ச் சாப்பிடுவாரோ அந்தப் பதார்த்தங்களை அடிக்கடி கொண்டுவந்து சமைத்துப் பரிமாரி அவர் சமீபமாய் உட்கார்ந்து விசிறியினால் விசிறிக்கொண்டே சந்தோஷமான பேச்சுகளைப் பேசி, இன்னும் கொஞ்சம் அதிக சாதம் பதார்த்தங்களைச் சாப்பிடும்படிச் செய்துக்கொண்டிருந்தேன். எவ்விடமாகிலும் சென்று அதிக நேரப்பட்டு வருவாரேயாகில் இன்னும் வரவில்லையே என்று அவர்மேல் ஏக்கங்கொண்டிருந்தேன். அவர் வந்தபிறகு சென்றவிடத்தில் நடந்த க்ஷேமலாபங்களையெல்லாம் விசாரித்துக்கொண்டிருப்பேன்.

காசிமாலையும் கை வங்கிகளும் சரிகைப் புட்டாசேலையும், மத்தாப்பு ரவிக்கையும் வேண்டுமென்று கேட்டவுடன் அவைகளை யெல்லாம் உடனே தயார்செய்வித்துக் கொண்டுவந்து கொடுத்தார். அவர் என்னிஷ்டம்போல் நடந்தபடியால் அவர்மேல் எனக்கு இன்னும் அதிக ஆசை உண்டாயிற்று. அவருக்கு ஏதோ கார்யார்த்தமாய்ப் புலிப்பால் வேண்டுமென்று என்னுடன் சொன்னமாத்திரத்திலேயே அதற்குத்தக்க மனிதர்களைக் கண்டுபிடித்து, அவர்கள்கேட்ட பொருளைத்தந்து அதிசீக்கிரமாய்ப் புலிப்பாலை

வரவழைத்துத் தந்தேன். புலிப்பாலை வரவழைத்து அவரிடம் தந்தபின் என்மீது முன்னிருந்த பிரீதியைவிட இன்னும் அதிக பிரீதியுண்டாய் என்விஷயத்தில் எதுவும் மனம் கோணுமல் நடத்திவந்தார். சாஸ்திர விதிப்படி பதிவிருதையா யிருக்கப்பட்டவள் தன்புருஷனிடத்தில் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டுமோ அதுபோலெல்லாம் நடந்துகொண்டேன். நான் இதுவரையில் இவருடன்கூடி அனுபவித்த சுகங்களையெல்லாம் இனி எப்பொழுது இவருடன்கூடி அனுபவிக்கப்போகின்றேன்.

இவர் ஏதாகிலும் ஓர் விஷயத்தைச் செய்ய எண்ணி அதற்காக என்னுடன் ஆலோசிப்பார். அந்த விஷயங்களுக்குத் தக்கபடிசெய்ய ஆலோசனைகளைச் சொன்னவுடன் என்பேரில் மிகவும் சந்தோஷிப்பார். இனிமேல் என்னிடம் இவரைப்போல் ஆலோசனைகளை யார் செய்யப்போகின்றார்கள். இச்சன்மத்தில் இவருடன்கூடி அனுபவித்த சுகம்போல் இனி எந்த ஜன்மத்தில் நான் மறுபடியும் இவருடன்கூடி சுகம் அனுபவிக்கப்போகின்றேன். இனிமேல் நான் எடுக்கப்போகும் ஜன்மத்தில் மறுபடியும் இவரே எனக்கு நாயகனுய்வந்து, இப்போதுதந்த சுகங்களையெல்லாம் அந்த ஜன்மத்திலும் தருவாரா?'' என்று,

இவ்வாருன அநேக எண்ணங்களை எண்ணிக்கொண்டிருக்கும் சமயத்தில் விசேஷமாய் அழுது அலண்டிருந்த தன்சரீரத்தின் அலுப்பு அச்சமயத்தில் சிறிது தீர்ந்திருக்கும். சரீரத்தின் அலுப்புத் தீர்ந்தவுடன், பூமியிலிருந்து எழுந்து மறுபடியும் புருஷன்மேல் விழுந்துவிழுந்து அழுவாள். ஆனல் அந்த அழுகை எப்படியிருக்குமென்ருல், புருஷன் பிராணன் போனவுடன் திக்கென்று வயிறெரிந்து இரத்தம்வரும்படி வாயில் அறைந்துகொண்டு சரீரமெல்லாம் வியர்த்து, இவ்வளவென்று சொல்லமுடியாத விசேஷ

துக்கத்துடன் இருந்து அழுத அழுகையைப்போல் இரா மல் அந்தத் துக்கத்தில் பாதிதுக்கம் மாத்திரம் இருந்து சிலநேரம் அழுவாள். அவ்வாருக அழுவதனல் மறுபடி யும் சரீரமெல்லாம் அலண்டு பிறகு, அழ சக்தியில்லால் மறுபடியும் பூமியின்மேல் படுத்து முன்போல் இன்னும் அநேகவிதங்களாகிய யோசனைகளையெல்லாம் யோசித்துக் கொண்டிருப்பாள்.

இதற்குள் சவத்தை எடுக்கப் பாடையைக்கட்டித் தயார்செய்துவைத்துப் பிறகு சவத்தைக் கொண்டுபோய் ஸ்நாநம் செய்விக்கும் சமயத்தில் அப்பொழுது இவளும் சவத்தினிடம் எழுந்துசென்று சவத்தின்மேல் விழுந்து அழுதுகொண் டிருக்கும்சமயத்தில், சவத்தின்மேலும் அவள்சிரசிலும் ஜலங்கொட்டி இருவர்களுக்கும் ஸ்நானம் செய்வித்துப் பிறகு, சவத்தைக் கொண்டுபோய்ப் பாடை யின்மேல்வைத்துக்கட்டி பாடையைத் தூக்கும்சமயத்தில் அதைத் தூக்கவிடாமல்செய்து இரண்டாவதுமுறை அழுத அழுகையைவிட இன்னும் விசேஷ துக்கத்துடன் சவத் தைக் கட்டியணைத்து முகத்தை முத்தமிட்டு அழுதுகொண் டிருக்கும்சமயத்தில், ஸ்திரீகளெல்லோரும்சேர்ந்து அவளை சவத்தினிடமிருந்து அப்புரப்படுத்துவார்கள். அவளை அப்புரப்படுத்திப் பாடையை எடுத்துச் செல்லும்பொழுது அவன்மனைவியானவள் எழுந்துநின்று இரண்டுகைகளையும் குவித்துத் தன் சிரசின்மேல்வைத்துக் கும்பிட்டுக் கொண்டே, "என் துரையே! என்னைவிட்டுப் போகின் ருயா! இனி நான் உன்னை எப்போது காணப்போகின் றேன்" என்று வெட்டிச்சாய்த்த மரம்போல் பாடையின் கீழ்விழுந்து புரண்டு புரண்டு அழுவாள். இவ்வாருக புரு ஷனை நினைத்து நினைத்து அழுவதே மாயை.

பிறகு, ஸ்திரீகளெல்லோரும் உள்ளே அழைத்துச்

சென்று அவளைக் கட்டி சிலநேரம் அழுது ஓய்ந்து எல்லோரும் ஸ்நானம்செய்து இவளையும் ஸ்நானம் செய்வித்துப் பந்துஜனங்களெல்லோரும் சாப்பிடச் செல்லுவார்கள். அதன்பிறகு புருஷனை இழந்தவள் இருக்குமிடத்திற்குச் சாதம் கொண்டுபோய் இலையில் பரிமாரி அவளைச் சாப்பிடச் சொல்லுவார்கள். எவர்களுக்கு விசேஷ துக்கம் இருக்கின்றதோ அப்படிப்பட்டவர்களுக் கெல்லாம் அவர்களின் துக்கமே அவர்களுக்குப் பசி எடுக்கவிடாமல் செய்விக்கும். அப்படிக்கல்லாமல் ஒருவேளை அவர்கள் சாதம் எடுத்து வாயில்வைத்தவுடன் வாந்தை உண்டாக்கும். ஆதலால், புருஷனை இழந்து விசனத்துடன் இருக்கப்பட்டவர்களுக்குப் பசி இராது. மேற்சொல்லிய ஸ்திரீயானவள் விசனத்துடன் படுத்திருந்து இன்னும் அநேக விதங்களாகிய யோசனைகளையெல்லாம் யோசித்துக் கொண்டே இருப்பாள். அநேக யோசனைகளையெல்லாம் யோசிது முடிந்தபின், அவளது விசனமானது சிறுகச் சிறுக தினந்தோறும் குறைந்துகொண்டேவந்து பிறகு எல்லோரிடமும் பேச ஆரம்பிப்பாள். புருஷன் இறந்த பதினாருவதுதினத்தில் கருமாதி கிரிகைகளைச் செய்வதற்குமுன் அவள் கழுத்திலிருக்கும் மாங்கல்யத்தைக் கழற்றுவார்கள். அச்சமயத்தில் அவளுக்கு விசேஷதுக்கமுண்டாய் 'ஐயோ! என்கழுத்தில் என்புருஷன் கட்டி வைத்த மாங்கல்யம் இத்தனைவருஷங்களாய் இருந்ததை இப்போது கழற்றிவிடுகின்றார்களே' என்று அழுவாள். ஆனால் அந்த அழுகை பிராணன்போகும்பொழுதும், பாடையைத் தூக்கும்பொழுதும் விசேஷ துக்கப்பட்டு அழுத அழுகையைப்போல் இராது. அவைகளில் பாதி துக்கம் மாத்திரமே இருந்து அழுவாள். இவ்வாருக இருந்து துக்கித்து அழுவதே **மாயை.**

கருமாதிக் கிரிகைகள் முடிந்தபின் தன் வீட்டுக் கார் யங்களையெல்லாம் பார்த்துக்கொண்டும், பேரன் பேத்தி மார்களையெல்லாம் உபசரித்துப் பள்ளிக்கு அனுப்பி அவர்களின்மீதும், தன் குமாரன்மீதும், மற்றவர்களின் மீதும் பிரீதியுடையவளாயிருந்து, குடும்ப விவகாரங்களை யெல்லாம் பார்த்துவருவாள். இவ்வாறாக குடும்பவிஷயங் களையெல்லாம் பார்த்துவருவதே மாயை.

ஒருவருஷம் சென்றபிறகு தன்புருஷனுக்குப் பிரதம திதிவரும். அப்போது புருஷன்மேல்இருந்த எல்லா பற்று தலும் ஆசையும் நீங்கித் திதியை மிகவும் சந்தோஷமாய்க் கொடுத்து அநேகர்களுக்குச் சாதம் போடுவிப்பாள். இருபது வருஷங்கள் சென்றபிறகு புருஷன் ஞாபகம் அடியோடே மறந்துவிடுவாள். மேற்சொல்லியதுபோல் எல்லா சுகங்களையும் அனுபவித்துப் பிறகு அடியோடே மறந்துவிடுவது மாயையேயொழிய இதைவிட மாயை என்பது வேறொன்று இல்லவே இல்லையென்று அறியக் கடவீர்களாக. இதன்றியும் பிரபஞ்சமெல்லாம் மாயா சொரூபமாகவே இருக்கின்றதென்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நாம் தினந்தோறும் பிரத்தியக்ஷமாய்ப் பார்த்துக்கொண்டிருக்கும் பிரபஞ்சத் தையெல்லாம் மாயாசொரூபமாய் இருக்கின்றதென்பதை எப்படி நம்பலாம் என்று சிலருக்குத் தோன்றலாம். அப் படிப்பட்டவர்களின் சந்தேகங்களையெல்லாம் நிவாரணை செய்யக் கீழே சொல்லப்போகின்றோம் கேளுங்கள்.

பிரபஞ்சமெல்லாம் மாயாசொரூபமாகவே இருக்கின்றது.

ஓசகோதரீ! சகோதரர்களே!

பிரபஞ்சமெல்லாம் மாயா சொரூபமாகவே இருக்கின்றதென்று பெரியோர்கள் சொல்லியிருக்கின்றார்கள். 'மாயா' என்பதின் கருத்து என்னவென்றால் 'மா' எது, 'யா' இல்லையோ, அதுவே மாயை. அதாவது இல்லாத பிரபஞ்சத்தை உண்டென்று பிரமையடைவதே 'மாயை' என்று சொல்லியிருக்கின்றார்கள்.

"ஓ சுவாமீ! பிரபஞ்சத்திலுள்ள எல்லா வஸ்துக்களையும் தினந்தோறும் நாம் பிரத்தியக்ஷமாய்ப் பார்த்துக் கொண்டேயிருக்கின்றோம். அப்படியிருக்க, இல்லாத பிரபஞ்சத்தை உண்டென்று பிரமை யடைகின்றார்களென்று பெரியோர்கள் சொன்னதாய்ச் சொல்லுகின்றீரே, அவர்கள் சொல்லும் வார்த்தையை எப்படி நம்பலாம்?"

"அப்பா குழந்தாய்! நீ கேட்டகேள்வி மிகவும் சரியான கேள்வியேயாம்! அக்கேள்விக்குத் தக்கபதில் சொல்லுகின்றோம் கேட்கக்கடவாய்."

"உலகத்திலுள்ள ஜனங்களெல்லோரும் பிரதிதினம் காலை நாலுமணிக்கெழுது வெளியில் சென்று மறுபடியும் ஆறு அல்லது ஏழு மணிக்கு வீட்டிற்கு வந்து பசியாற்றி, அவரவர்கள் செய்யவேண்டிய வியாபாரத்திற்கோ அல்லது உத்தியோகத்திற்கோ சென்று, அந்தந்த வேலைகளை முடித்து மறுபடியும் மாலை வீட்டிற்கு வருகின்றார்கள்.

அதுபோல் பயிர்த்தொழில் செய்யப்பட்டவர்களும் கழனிக்குச்சென்று பயிர்வேலைகளையெல்லாம் பார்த்துக்கொண்டு மாலையில் வீடுவந்து சேருவார்கள். அதுபோல் பக்ஷிகளும் தினந்தோறும் இரை தேடுவதற்காக காலை வெளியில்சென்று இரைதேடி மேய்ந்து மறுபடியும் மாலை தம்தம் கூண்டுகளில் போய்ச்சேரும். அதுபோல் பசுக்களும் மேய்வதற்காக வெளியில்சென்று மேய்ந்து தண்ணீர்க்குடித்து மறுபடியும் மாலை தம்தம் இருப்பிடம் போய்ச்சேரும். மனிதர்களும், பக்ஷிகளுய், பசுக்களும் தினந்தோறும் இவ்வாறான கார்யங்களையெல்லாம் செய்து, அந்தந்த ஜீவர்கள் இருப்பிடம் போய்ச்சேர்ந்து மனிதர்கள் இரவில் போஜனமுண்டு படுத்துத் தூங்குவார்கள். அதுபோல், பக்ஷிகளும் மிருகங்களும் இரவில் தூங்குகின்றன. எல்லா ஜீவராசிகளும் தூங்கும்பொழுது இரவு ஒரு மணிக்குப் பிரபஞ்சமெல்லாம் எப்படி இருக்குமென்றால், எந்த சந்தடியும் இல்லாமல் எங்கும் ஒரே நிஸ் ஸப்தமாயிருக்கும். அப்படிப்பட்ட சமயத்தில் ஸ்திரீபுருஷர்களெல்லோரும் தம்தம் சரீரத்தை மறந்து தூங்கும்பொழுது, அக்காலத்தில் மனைவி எங்கே, புத்திரர்கள் எங்கே, புத்திரிகள் எங்கே, பேரன்மார்கள் எங்கே, பேத்திமார்கள் எங்கே, பந்துக்கள் எங்கே, வீடுவாசல்கள் எங்கே, பூமிகள் எங்கே, தோட்டம் துரவுகள் எங்கே, வாகனங்கள் எங்கே இரும்புப்பெட்டிகள் எங்கே, பொன் எங்கே, வெள்ளி எங்கே, தானியம் எங்கே? இப்படிப்பட்டவைகளையெல்லாம் விட்டுத் தம்தம் சரீரத்தையும் மறந்து தூங்குகின்றார்களல்லவா? அப்படிப்பட்டவர்களுக்குப் பிரபஞ்சம் இருக்கின்றதென்று ஏதாகிலும் ஞாபகம் இருக்குமா? பிரபஞ்ச விஷய எண்ணமே தூங்குங்காலத்தில் ஒன்றும் ஞாபகம் இராதல்லவா?

மறுபடியும் காலையில் எழுந்து எல்லாவற்றையும் பார்த்தாலல்லவோ பிரபஞ்சம் இருக்கும் ஞாபகம் உண்டாகப்போகின்றது. படுத்துத் தூங்கிக்கொண் டிருக்கும்பொழுது இறந்துவிடுவானேயாகில் அவனுக்குப் பிரபஞ்சம் இருக்கின்றதென்று தெரியவருமா? அவன் மறுபடியும் மற்றொரு தாய்க் கர்ப்பத்தில் போய்ப்பிறந்து வளர்ந்த பிறகல்லவோ மறுபடியும் பிரபஞ்சத்தைப் பார்க்கப்போகின்றான். அவன் பிரபஞ்சத்தில் பிறவாமல் மோக்ஷமென்னும் வீட்டை அடைவானேயாகில் என்றால், வெளியோடேவெளியாய்க் கலந்துவிடுவானேயாகில் அவனுக்குப் பிரபஞ்சதர்மம் ஒன்றும் தெரியவேமாட்டா. இதுபோல் ஒவ்வொருவரும் இந்த மாயா பிரபஞ்சத்தை அடியோடே மறந்து வெளியுடன்வெளியாய்க் கலந்துவிடவேண்டுமென்பதே வேதாந்தத்தின் கருத்தாகும். ஆதலால், உலகமே மாயாசொரூபமாகிய பொய்யுலகமென்று பெரியோர்கள் சொல்லிய வாக்கியமே சத்தியமானது.

இந்த ஜீவர்களெல்லோரும் ஆசாபாசங்களுடன் இருந்து, அநேக கோடானகோடி ஜன்மங்களை எடுத்த போதிலும் ஏதோ ஓர் ஜன்மத்தில் அந்த ஆசாபாசங்களெல்லாம் ஜீவர்களுக்கு நீங்கி, அதன்பிறகு கடைசியாய் எடுக்கப்போகும் ஜன்மத்தில் வெளியோடே வெளியாய்க் கலந்துவிடுவார்களேயொழிய இந்த மாயாப்பிரபஞ்சத்திலேயே அகப்பட்டுக்கொண்டிரார்கள். இம்மாயைக்குக் காரணம் மனம். இம்மனமானது தூங்கும்வேளை தவிர மற்றக் காலங்களிலெல்லாம் இமைக்கொட்டு மவ்வளவு நேரமும் சும்மாயிராமல் எப்பொழுதும் எதையோ ஒன்றை நினைத்து வெளியில் ஓடிக்கொண்டேயிருக்கும். இதற்குத் தாயுமானவர், இடைக்காட்டுச்சித்தர், குணங்குடியார் பாடல் பிரமாணம் என்னவென்றால்,

"ஆசையெனும் பெருங்காற்றூ டிலவம்பஞ் செனவுமன
தலையுங் காலம்
மோசம்வரு மிதனாலே கற்றதுங் கேட்டதுந் தூர்ந்து
முத்திக் கான
நேசமுநல் வாசமும்போய் புலனாயிற் கொடுமைபற்றி
நிற்ப ரந்தோ
தேசுபழுத் தருள்பழுத்த பராபரமே நிராசையின்றேற்
றெய்வ முண்டோ."

"மனமது அசைந்தால் வையகம்பிறக்கும்
மாயைதன்கிளையுடன் சனிக்கும்
மனமொருவருக்கு வசப்படுமானால்
மாதவம்செய்ய வேறுளதோ
மனமதை யிணக்கவேண்டியே அறிஞர்
வகுத்தனர் பற்பலமார்க்கம்
மனமதை யிணக்கு மாயமீதென்று
வகை விபரமதுடன் வரைவாம்."

"மனமென்னும் ஆடடங்கில் தாண்டவக்கோனே
முத்தி வாய்த்ததென்று நினையடா தாண்டவக்கோனே."

"மனக்குரங்கைக் கட்டிவைத்தாலும் பல்லைக்காட்டும்."

இப்படிப்பட்ட மனக்குரங்கை ஒரேநிலையில் கொண்டு வந்து நிறுத்துவதற்காக கடவுளைப் பூசைசெய்யவேண்டும். அக்கடவுளானவர் எவ்விட மிருக்கின்றார். அவரை எவ்வாறு பூஜிக்கவேண்டும் என்பதை இனி சொல்லப் போகின்றோம். ஆனால், இப்பிரபஞ்சம் முதல் எப்படி உண்டாயிற்றோ அதன் ரஹஸ்யங்களையெல்லாம் சொல்லி, பிறகு கடவுளைப் பூஜிக்கவேண்டிய விதியைச் சொல்வோம்.

இப்பிரபஞ்சம் எவ்வாறு உண்டாயிற்று.

எமதன்பர்களே!

கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகமென நான்கு யுகங்களுண்டு. ஒவ்வொரு யுகத்திற்கும் எத்தனை வருஷங்களோ அதை இனி சொல்லப்போகின்றோம் கேளுங்கள்.

1. பதினேழுலக்ஷத்து இருபத்து எண்ணாயிரம் வருஷங்களானால் ஒரு **கிருதயுகம்.**

2. பன்னிரண்டுலக்ஷத்துத் தொண்ணூற்றாராயிரம் வருஷங்களானால் ஒரு **திரேதாயுகம்.**

3. எட்டுலக்ஷத்து அறுபத்து நாலாயிரம் வருஷங்களானால் ஒரு **துவாபரயுகம்.**

4. நான்குலக்ஷத்து முப்பத்து ஈராயிரம் வருஷங்களானால் ஒரு **கலியுகம்.**

ஒவ்வொரு யுகமுடிவிலும் பிரளயகாலம் வருவதுண்டு. பிரளயகாலமென்றால், பிரபஞ்சம் சுற்றிலும், இதன்றியும் எல்லா தீவுகளின் சுற்றிலும் சமுத்திரங்கள் இருக்கின்றன. இவ்வாறாக பிரபஞ்சமெங்கும் சுற்றிக்கொண்டிருக்கும் சமுத்திர ஜலமெல்லாம் ஒரேகாலத்தில் ஒரேமுறையாய், பால் அடுப்பில் எவ்வளவு சீக்கிரமாய்ப் பொங்குகின்றதோ அதைப்போல் எங்கும் இருக்கப்பட்ட சமுத்திர ஜலமெல்லாம் அதிசீக்கிரமாய்ப் பொங்கி, மேல் ஆகாயம் வரையில் பரவியிருக்கும். இதற்கே ஜலப் பிரளயமென்று சொல்லப்படும்.

இந்த ஜலப் பிரளயத்தில் பிரபஞ்சமும், எல்லாத் தீவுகளும் இரண்டாயிரம் வருஷங்கள்வரையில் மூழ்கியிருக்கும். அக்காலத்தில் இவ்வுலகின்கண் சீரும், சிறப்பும்,

நீர்வளம், நிலவம் பொருந்தி எக்கண்டத்தினும் நற்கண்ட மென்னும் புண்ணிய பூமியாகிய நமது பரதகண்டத்தி லுள்ள காசி இராமேஸ்வராதி இன்னுமுள்ள மஹா திவ்விய க்ஷேத்திரங்களும் கங்கா, யமுநா, ஸரஸ்வதி, ஸிந்து, காவேரி, துங்கபத்ரா, கோதாவரி, கிருஷ்ணா, நர்மதா என்னும் ஒன்பது மஹா தீர்த்தங்களும், எல்லா தீவு (Islands)களும் ஜலத்தில் மூழ்கி நாசமாய்விடும். இவ்வாறாக பிரபஞ்சமெல்லாம் இரண்டாயிரம் வருஷங்கள்வரையில் ஜலத்தில் மூழ்கியிருந்து, இரண்டாயிரம் வருஷங்கள் முடிந்தபின் பொங்கிக்கொண்டிருந்த சமுத்திரஜலமெல்லாம் குறைந்து வற்றிக்கொண்டேவந்து பிறகு, அந்தந்த சமுத்திரங்கள் இருக்கப்பட்ட இடங்களுக்குச் சென்றுவிடும். அப்போது பிரபஞ்சமும், தீவுகளும், இல்லாமல் எங்குபார்க்கினும் ஒரே வெளியாகவே இருக்கும்.

இங்கிலீஷ் 1932-வது, வருஷத்தில் இந்நூல் எழுதப்பட்டது. இதற்குக் கலியுகாதிவருஷம் என்னவென்றால் ஐயாயிரத்து முப்பத்து ஆறாயிரம் வருஷங்களாகின்றன. இவ்வருஷங்கள்போக இன்னும் கலியுகம் எத்தனை வருஷங்கள் இருக்கின்றனவென்றால், "நாலுலக்ஷத்து, இருபத்தாறாயிரத்து, தொளாயிரத்து அறுபத்துநாலு" வருஷங்கள் இருக்கின்றன. மேற்சொல்லிய வருஷங்கள்வரையில் கலியுகமிருந்து பிறகு கலியுகம் முடிந்தவுடன் பிரளயகாலம் வரும்.

இக்கலியுக ஆரம்பத்தில் இப்போதிருக்கு மவ்வளவு ஜனங்கள் இராமல் மிகவும் சொல்பமாய் இருந்தார்கள். கலியுகம் பெருகப்பெருக ஜனங்கள் அபிவிர்த்தியாய்க் கொண்டே வருகின்றார்கள். இவ்வளவு ஜனங்கள் அபிவிர்த்தியாவதற்குக் காரணம் "திருவாசக" பிரமாணம் இங்கு சொல்லுகின்றோம் கேளுங்கள்.

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர ஜங்கமத்து
ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்."

இப்பாடலின் கருத்து என்னவென்றால், ஏதோ ஓர் ஜன்மத்தில் பெரியோர்களின் பாதங்களும், அவர்களின் நிழலும் புற்களின்மேல் படும். அப்போது அப்புற்களுக்குப் புண்ணியம் உண்டாகும் அப்புண்ணியவிசேஷத்தினால் மறுஜன்மத்தினால் அப்புற்கள் பூடாய்ப் பிறக்கின்றன. புற்கள் பூடாய்ப் பிறந்தபின், மரமாயும், அநேகவித புஷ்பச் செடிகளாயும், புழுவாயும், பாம்பாயும், பறவைகளாயும், கல்லாயும், மிருகங்களாயும் வந்துபிறந்து, பிறகு மனிதர்களாய்ப் பிறக்கின்றன. புற்களானவை இத்தனை ஜன்மங்களையும் எடுத்துக் கடைசியில் அப்புற்கள் மனிதர்களாய் வருவதற்குக் காரணம் என்னவென்றால், பெரியோர்களின் பாதங்களும் அவர்களின் நிழலும் புற்களின் மேல் பட்டபடியால் இத்தனை ஜன்மங்களையும் கடந்து, கடைசியில் அறிவோடும் கூடிய மனிதரூபமாய் வந்து பிறக்கின்றன. இதற்கோர் திருஷ்டாந்தம் சொல்லுகின்றேம் கேளுங்கள்.

கோவில்களைக் கட்டிவைத்த புண்ணியவான்கள் என்னசெய்வார்களென்றால், கோவில் சுற்றிலும் இருக்கும் உட் பிராகாரத்திற்குள் கருங் கற்களைப் பறப்பி, அக்கற்களின்மேல் அநேக இடங்களில் கோவில் கட்டிவைத்தவர்களின் உருவம்போன்ற உருவங்களைப் பலவிடங்களிலும் சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்கரிப்பதுபோல் உளிகளால் செதுக்கிவைப்பார்கள். இதன்றியும் அவர்களின்

பெயரையும் ஆங்காங்கு செதுக்கிவைப்பதுண்டு. இவ்வாருகச் செய்துவைப்பதற்குக் காரணம் என்னவென்ருல்,

பெரியோர்கள், மஹான்கள், யோகிகள் முதலானவர்களும் கோவிலுக்குள் வந்து சுற்றுப் பிராகாரங்களில் நடக்கும்பொழுது அவர்களின் பாதங்கள் அந்தக் கல்விக்கிரகங்களின்மேல் பட்டவுடன் கோவில்களைக் கட்டிவைத்தவர்களாகிய தமக்குப் புண்ணிய முண்டாகுமென்றும், அப்புண்ணிய விசேஷத்தினுல் தாம் கடைத்தேறிப்போகலாமென்றும் உத்தேசங்கொண்டு, கோவில்களைச் கட்டிவைத்தவர்கள் அவர்களின் உருவத்தையும், பெயரையும் கோவில் சுற்றுப் பிராகாரங்களிலுள்ள கற்களின்மேல் செதுக்கிவைப்பதுண்டு.

அதுபோல், பெரியோர்களின் பாதங்கள் புற்களின் மேல் பட்டவுடன் அப்புற்களுக்கெல்லாம் புண்ணியமுண்டாய், அப்புண்ணிய விசேஷத்தினுல் கடைசியில்மனிதர்களாய் வந்து பிறக்கின்றன. இப்பொழுது பிரபஞ்சத்தில் மனிதரூபமாய்க் காணப்படும் ஸ்திரீபுருஷர்கள் எல்லோரையும் மனிதர்களென்று எண்ணவேண்டாம். இதற்குச் சிவாநந்தபோதம் பிரமாணம் சொல்லுகின்ருேம் கேளுங்கள்.

மனிதரிலும் பறவையுண்டு விலங்குண்டு கல்லுண்டு மரமுமுண்டு
மனிதரிலும் நீர்வாழுஞ் சாதியுண்டு அநேககுல மனிதருண்டு
மனிதரிலுமனித ருண்டு வானவரு மனிதராய் வருவதுண்டு
மனிதரிலே பிறப்பறுக்க வந்ததே யருமையென வகுத்தார்
[முன்னேர்.

இப்பாடலின் கருத்து என்னவென்ருல், மனிதரிலும் மனிதருண்டு, மனிதரிலும் ஆடுண்டு, கோழியுண்டு, நாயுண்டு, பூனையுண்டு, பசுவுண்டு, எருதுண்டு, எருமையுண்டு, புலியுண்டு, கரடியுண்டு, யானையுண்டு, சிங்கமுண்டு

நீர்வாழும் முதலை முதலிய ஜாதியுண்டு, பக்ஷியுண்டு, கல்லுண்டு. மனிதஜாதியில் மேற்சொல்லிய எல்லா மிருகஜாதிகளும் உண்டு. இதன் கருத்து என்னவென்றால்,

முதல்ஜன்மத்தில் மனிதர்களாய் வந்தவர்கள் மிகவும் சிரத்தை பக்தியுடன் ஈஸ்வரனைப் பூஜித்து மரணமடைந்தால் மறு ஜன்மத்திலும் மனிதர்களாகவே வந்து பிறக்கின்றார்கள். இதுபோல் ஒவ்வொரு ஜன்மத்திலும் ஈஸ்வரனைப் பூஜைசெய்து மரணமடைந்துகொண்டே வருவதனால் அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் மனிதஜன்மமே வந்துகொண்டிருக்கும். ஆதலால், மனிதரிலும் மனிதருண்டு என்று பெரியோர்கள் பாடியிருக்கின்றார்கள்.

மற்ற மிருகங்களும், பக்ஷிகளும் நகர்ந்துசெல்லும் புழுக்களும், மனிதர்களாய்வந்து பிறந்தபோதிலும் அவைகளின் சரீரம்மாத்திரம் மனிதரூபமாய்க் காணப்படுமேயொழிய அச்சரீரத்திற்குள்ளிருக்கும் குணங்கள் மிருகங்களுக்கு உள்ள குணங்கள் இருக்குமேயொழிய மனிதர்களுக்கிருக்கும் குணங்கள் இராது. மிருகங்களாயிருந்து மனுஷ்யர்களாய்வந்து பிறந்தவைகளுக்கு முதல் ஜன்மத்தில் ஈஸ்வரபக்தி யென்பது சிறிதேனும் இராது. ஆனால், மிருகங்களாயிருந்து மனுஷ்யர்களாய் வந்தவர்களுக்கு ஈஸ்வரபக்தி எப்பொழுது உண்டாகுமென்றால், ஒவ்வொரு ஜன்மத்திலும் தாம் செய்துவரும் புண்ணிய விசேஷத்தினால் ஏதோ ஓர் ஜன்மத்தில் ஈஸ்வரபக்தி யுண்டாகும். அந்த ஈஸ்வரபக்தி ஒவ்வொரு ஜன்மத்திலும் அதிகரித்துக் கொண்டேவந்து பிறகு, மாயாசொரூபமாயிருக்கும் சம்சாரமென்னும் பந்தத்தில் சிலகாலம் உழன்று அதன் பிறகு, நல்லறிவு உண்டாய், அந்த சம்சாரமென்னும் பந்தத்திலிருந்து விடுபட்டுப் பிறகு மோக்ஷமென்னும் வீட்டை அடைவார்கள்.

மிருகங்களும் மனுஷ்யர்களாய்வந்து பிறக்கின்றன, என்பதற்கு மற்றொரு திருஷ்டாந்தம் சொல்லுகின்றோம் கேளுங்கள். நமது இந்தியாவைப் பரிபாலனம்செய்துவரும் சக்ரவர்த்தியானவர் பத்து வருஷங்களுக்கு ஒருமுறை (Census) "ஸேன்ஸஸ்" என்னும் கணக்கை எடுக்கும்படி ஏற்பாடு செய்திருக்கின்றார். ஒவ்வொரு "ஸேன்ஸஸி" லும் அநேக லக்ஷக்கணக்காய் ஜனங்கள் அபிவிருத்தியாய்க்கொண்டே வருகின்றார்கள். இப்படியாய் அபிவிருத்தியாய்க்கொண்டே வரப்பட்டவர்களையெல்லாம் மனிதர்கள் என்று எண்ணவேண்டாம். ஒவ்வொரு "ஸேன்ஸஸ்"ஸிலும் அதாவது, ஒவ்வொரு ஜனத்தொகைக் கணக்கிலும் மிருகங்களும் மனுஷ்யர்களாய்வந்து பிறந்து கொண்டே யிருப்பதனால் ஒவ்வொரு கிராமங்களிலும், தாலுக்கா, ஜில்லா, பட்டணங்களிலும் ஜனங்கள் வருஷாந்திரம்தோறும் அபிவிருத்தியாய்க்கொண்டே வருவதையறியலாம். ஆதலால், இந்த ஜனங்களெல்லோரும் நிவசிப்பதற்காக அந்தந்த ஊர்களில் இடம் போதாமலிருப்பதனால், சமுத்திர ஜலமும் வற்றி சமுத்திரம் இருந்த இடத்தில் வீடுகளைக்கட்ட பூமி இடங்கொடுத்துக்கொண்டே போகின்றது. சமுத்திரஜலம் வற்றி பூமி இடங்கொடுத்துக்கொண்டு போகின்றதென்பதற்குச் சில திருஷ்டாந்தங்களை இங்கு சொல்லுகின்றோம் கேளுங்கள்.

இங்கிலீஷ் 1876-வது, வருஷத்தில் அதாவது 56-வருஷங்களுக்குமுன் இந்நூலாசிரியராகிய அடியேன் பன்னிரண்டு வயதுடைய சிறுவனாயிருந்தபோது (Madras) சென்னப்பட்டணத்தில் சமுத்திரம் எவ்விடமிருந்ததென்றால் இப்பொழுது ஹைகோர்ட்டு (High Court) எவ்விடம் இருக்கின்றதோ அந்த ஹைகோர்ட்டுக்கு எதிரில் இருக்கும் ரோட்டு சமீபமாகவே சமுத்திரம் இருந்தது.

இந்த 56-வருஷங்களுக்குள் சென்னை சமுத்திரமானது சுமார் ஒரு மைலுக்கு அப்பால் விலகிப்போய்விட்டது. சென்னப்பட்டணத்தில் சமுத்திரம் அவ்வாறு ஒருமைல் தூரம் விலகிப்போவதற்குக் காரணமென்னவென்றால், இன்னும் சில "ஸென்ஸஸ்" களுக்குள் மிருகங்களும் மனுஷ்யர்களாய் வரப்போகின்றன. அந்தமிருக மனுஷ்யர்கள் எல்லோரும் குடியிருக்க சென்னப்பட்டணத்தில் இடம் போதாமலிருப்பதனால் சமுத்திரமானது முன்னதாகவே வற்றி, இடத்தைத் தந்துகொண்டே போகின்றது. இதன்றியும் இன்னும் சில திருஷ்டாந்தங்களைச் சொல்லுகின்றோம் கேளுங்கள்.

இந்நூலாசிரியார் 1930ஆு ஜனவரிமீ 23உயில் "ஜகந்நாதம்" என்று சொல்லப்பட்ட க்ஷேத்திரத்திற்குச் சென்றிருந்தார். அந்த க்ஷேத்திரகோவில் சுற்றிலும் இருக்கப்பட்ட ஊர் முழுமையும் மணற்பாங்காகவே இருந்தது. அம்மணற்பாங்கில் நடந்துபோக மிகவும் கஷ்டமாய் இருக்கும். பூமியென்பது அவ்விடம் இல்லவேயில்லை. இதனால் என்ன ஏற்படுகின்றதென்றால், "ஜகந்நாதம்" கோவில் சுற்றிலும் ஆதியில் சமுத்திரம் இருந்தது. பிறகு அந்த சமுத்திர ஜலமெல்லாம் வற்றி, இப்பொழுது கோவிலுக்கு சுமார் ஒருமைல் தூரம் சமுத்திரம் சென்றுவிட்டது. இன்னும் ஐம்பது வருஷங்களுக்குள் 'ஜகந்நாத'த்தில் ஜனங்கள் அதிகமாய்ப் பிறக்கப்போகிறபடியால் அவர்கள் எல்லோரும் வீடுகளைக் கட்டிக்கொள்வதற்காக சமுத்திரமானது முன்னதாய் இடம் தந்துகொண்டே போகின்றது. இதன்றியும்,


1930ஆு செப்டம்பர்மீ 4உ (Ceylon) சிலோன் தேசத்திற்கு இந்நூலாசிரியராகிய அடியேன் இரண்டா

வதுமுறை போயிருந்தபோது, முதல்முறை சிலோன் போன சமயத்தில் சமுத்திரஜலம் எங்கு இருந்ததோ அந்த இடத்தில் சமுத்திர ஜலமெல்லாம் வற்றி, பெரிய கட்டிடங்கள்கட்டி ரோட்டுகள் போட்டிருக்கின்றார்கள். இன்னும் ஐம்பது வருஷங்களுக்குள் சிலோன் தேசத்திலுள்ள சமுத்திரமானது சிறுகச்சிறுக வற்றி, இடம் தந்துகொண்டே போகும். அதன் பிறகு, சிலோன் தேசத்திலும் மிருகள்கள் வந்து மனிதர்களாய்ப் பிறக்கப்போகின்றன. பிறகு, இந்நூலாசிரியர்,

1931௵ ஏப்ரல்௴ 4௳ சிலோன்தேசம்விட்டு, தென் ஆப்ரிகாதேசத்திற்குத் தலைநகரகாகிய டர்ப்பன் (Durban) பட்டணம் போய்ச்சேர்ந்து அவ்விடம் அம்கெனிரோட்டில் இருக்கப்பட்ட 'வைத்யநாதீஸ்வரர்' ஆலயத்தில் இறங்கி, ஒன்பது மாதங்கள்வரையில் அங்குதங்கி ஆப்ரிகா தேசமெல்லாம் சென்று உபந்நியாசங்களைச் செய்துவந்தனர். மேற்படி வைத்யநாதீஸ்வரர் இருக்கும் இடமாகிய ஆலயமுழுதும் எவ்விடம் தோண்டியபோதிலும் மணலாகவே இருந்தது. இந்த வைத்யநாதீஸ்வரர் ஆலயம் இருக்குமிடத்தில் ஆதியில் சமுத்திரம் இருந்தது. மேற்படி வைத்யநாதீஸ்வரர் ஆலயத்தினிடமிருந்த சமுத்திரமானது சிறுக்ச்சிறுக வற்றி இடம் தந்துகொண்டே போனபடியால் அந்த இடங்களில் கோவிலும் வீடுகளும் கட்டி, ரோட்டுகளும் போட்டுக்கொண்டார்கள். இதன்றியும் சமுத்திரம் மத்தியிலும் ஜலம்வற்றி மணற்பாங்காயிருந்தது. அந்த இடத்திலும் ரோட்டுகளைப்போட்டு வீடுகளைக் கட்டியிருக்கின்றார்கள். தென் ஆப்ரிகா தேசத்திலுள்ள 'டர்ப்பன் பட்டணம்' சமுத்திர மத்தியில் ஜலம் வற்றியிருந்த இடத்தில் இப்பொழுது ரோட்டுகளைப்போட்டு வீடுகளைக் கட்டியிருப்பதை ☞ எதிரிலிருக்கும் படத்தில் காட்டப்பட்டிருக்



டர்ப்பன் பட்டணம் (DURBAN)



டர்ப்பன் பட்டணம் (DURBAN)

கின்றது பாருங்கள். இவ்வாறுகவே ஒவ்வொரு பட்டணங்களிலும், ஜில்லா, தாலூக்கா, சிறிய சிறிய கிராமங்களிலும், காட்டில் வசித்துக்கொண்டிருக்கும் மனிதர்களும் இக்கலியுகம் உள்ளநாள்வரையில் வருஷாந்திரங்கள்தோறும் அதிகமாய்ப் பிறந்துகொண்டே வருவார்கள். எந்த ஸ்திரீபுருஷர்கள் கோவிலுக்குப் போகாமலும், கடவுளை பூஜிக்காமலும், கடவுளின்மேல் பக்தியில்லாமலிருந்து பெரியோர்களைத் தூஷித்துவருகின்றுர்களோ அப்படிப்பட்டவர்களெல்லோரும் முன்ஜன்மத்தில் மிருகங்களாய் இருந்து, ஏதோ புண்ணிய விசேஷத்தினுல் மனிதர்களாய் வந்தவர்களென்று தெரிந்துகொள்ளக்கடவீர்களாக. மிருகங்கள் மனிதர்களாய் வந்து பிறகு மறுபடியும் பாபகார்யங்களைச் செய்வதனுல் இவர்கள் இறந்தபின் மறுபடியும் முன்போல் மிருக ஜன்மத்தையே அடைவார்கள். பாபம் செய்த ஒருவன் ஏழைகளின்வீட்டில் பிறந்து மிகவும் கஷ்டதிசையை அனுபவித்துக்கொண் டிருந்தபோதிலும் புண்ணியம் செய்வானேயாகில் அப்படிப்பட்டவன் மறு ஜன்மத்தில் செல்வமுடையவர்களின் வீட்டில் போய்ப் பிறப்பான். செல்வமுடையவர்களின் வீட்டில் போய்ப் பிறந்தபின் மறுபடியும் பாபகார்யங்களைச் செய்வானேயாகில் அப்படிப்பட்டவன் மறுபடியும் ஏழைகளின்வீட்டில் போய்ப்பிறந்து மறுபடியும் கஷ்டதிசையை அனுபவிப்பான். வண்டியின்சக்கரம் கீழும் மேலுமாய் எப்படிச் சுற்றிவருகின்றதோ அதுபோல் மானவஜனங்களெல்லோரும் தாழ்ந்த ஜன்மத்திலிருந்து மேலான ஜன்மத்தையடைந்து, பிறகு அவ்விடமிருந்து மறுபடியும் தாழ்ந்த ஜன்மத்தை அடைகின்றுர்கள். இப்படியாய் மாறிமாறிப் பிறந்துவருவது மனிதர்களினுடைய சுபாவகுணமென்று அறியக்கடவீர்களாக.

கலியுகம் முடிவில் ஜலப்பிரளயம் வந்து பிறகு, அந்த ஜலமெல்லாம்வற்றி அவைகள் முன்னிருந்த தம்தம் இருப்பிடம் போய்ச் சேருமென்று இதுவரையில் முன் சொல்லி நிறுத்தியிருக்கின்றோம். மறுபடியும் இப்பொழுது அவ்விடமிருந்து துவக்கி மற்ற விவரத்தையும் சொல்லப் போகின்றோம் கேளுங்கள்.

ஜலப்பிரளயம் முடிந்தபின் எங்கும் பரிபூரணமாய் எள்ளுக்குள் எண்ணெய்போல் நிறைந்திருக்கும் பரமாத்மாவானவர், ஸ்ரீமந் நாராயணமூர்த்திரூபமாய் அவதரித்துவந்து பிரபஞ்சத்தைப் பார்த்தனர். அப்பொழுது எங்குபார்க்கினும் பிரபஞ்சத்தோற்றமின்றி ஏகவெளியாகவே இருந்தது. அதன்பிறகு, பிரபஞ்சத்தைச் சிருஷ்டி செய்யத் திருவுள்ளங்கொண்டு அவர் என்னசெய்தாரென்றால்,

மஹாவிஷ்ணுவாகிய ஸ்ரீமந் நாராயணமூர்த்தி ஐந்து சிரசுகளையுடைய ஆதிசேஷன்மீது சயனித்துக்கொண்டு "ஹே பிரமதேவா!" என்று மனதில் நினைத்தார். அவர் அவ்வாறு நினைத்தமாத்திரத்தில் ஸ்ரீமந் நாராயணமூர்த்தியின் தொப்புளில் இருந்து பிரமதேவர் புறப்பட்டு வந்தனர். ஸ்ரீமந் நாராயணமூர்த்தியின் தொப்புளில் இருந்து பிரமதேவர் புறப்பட்டுவந்ததை இதோ ☞ எதிரிலிருக்கும் படத்தில் காட்டப்பட்டிருக்கின்றது பாருங்கள்.



ஸ்ரீமந் நாராயணமூர்த்தி நாபியிலிருந்து
பிரமதேவர் பிறந்தனர்.

ஸ்ரீமந் நாராயணமூர்த்தி நாபியிலிருந்து பிரமதேவர் ஏன் பிறந்தாரோ அதன் ரஹஸ்யத்தைச் சொல்லுகின்றோம் கேளுங்கள். மனிதர்கள் எல்லோரும் தினந்தோறும்

காலைமுதல் இரவு படுத்து உறங்கும்வரையில் கணக்கில்லாத அநேகவித எண்ணங்களை எண்ணுவார்கள். அந்த எண்ணங்களுக்கே 'மனது' என்று சொல்லப்படும். இம்மனதிற்கு உற்பத்திஸ்தானம் எதுவென்றால் நாபி (தொப்புள்). ஆதலால், ஸ்ரீமந் நாராயணமூர்த்தி "ஹே பிரமதேவா!" என்று நினைத்தவுடன் ஸ்ரீமந் நாராயணமூர்த்தியின் நாபியிலிருந்து பிரமதேவர் புறப்பட்டு வந்தபடியால் எல்லோரும் நினைக்கும் நினைப்பானது, அவரவர்களின் நாபியிலிருந்து பிறக்கின்றனவென்று ஜனங்கள் தெரிந்துகொள்வதற்காகவே ஸ்ரீமந் நாராயணமூர்த்தி நாபியிலிருந்து பிரமதேவர் பிறந்ததாய்ச் சிலைகளில் செய்து காட்டியதுமேயல்லாமல், படங்களிலும் எழுதிக் காட்டியிருக்கின்றார்கள். ஸ்ரீமந் நாராயணமூர்த்தி நாபியிலிருந்து பிரமதேவர் பிறந்தபின், நாராயணமூர்த்தியைப் பிரமதேவர்பார்த்து இரண்டு கைகளையுங் குவித்து நமஸ்கரித்து நின்று, "அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகா, ஆதிமத்யாந்தரஹிதா, ஆபத்பாந்தவா, அநாதரக்ஷக, தேவதேவோத்தமா, தேவகீநாதா அடியேனை நினைத்த காரணம் யாது?" என்று கேட்டனர். அப்போது ஸ்ரீமந் நாராயணமூர்த்தியானவர் பிரமதேவரைப் பார்த்துச் சொல்லுகின்றார்.

"வாராய் பிரமதேவரே! நான்கு லக்ஷத்து முப்பத்து ஈராயிரம் வருஷங்கள்வரையில் கலியுகமிருந்து முடிந்து, பிறகு ஜலப்பிரளயம் வந்து அதுவும் முடிந்தது. இனி மறுபடியும் கிருதயுகம் சிருஷ்டி செய்யக்கடவாய்" என்று ஸ்ரீமந் நாராயணமூர்த்தி பிரமதேவருக்கு ஆஞ்ஞாபித்தனர். அதன்பிறகு, பிரமதேவர் எண்பத்துநான்குலக்ஷ ஜீவராசிகளையும் சிருஷ்டிசெய்தனர். அந்த எண்பத்துநான்குலக்ஷ ஜீவராசிகள் எவையோ அவற்றை இனி சொல்லப்போகின்றோம் கேளுங்கள்.

''ஸ்த்தாவரோ லக்ஷவிம்ஸத்ய ஜலஜோ நவலக்ஷ:
க்ரிமீணும் ருத்ரஸங்க்யாஸ்ச்ச சாதுர்லக்ஷந்து மாநுஷ:
த்ரிம்ஸல்லக்ஷம் கவாநாம் ச பக்ஷீணும் தஸலக்ஷ:''

அசையாமல் நின்றிருக்கும் மரங்கள் செடிகள் மலைகள் இருபது லக்ஷம்; ஜலத்திலுள்ள மீன்கள் முதலாகிய ஜலஜந்துக்கள் ஒன்பது லக்ஷம்; நகர்ந்துசெல்லும் புழு முதலாகிய ஜந்துக்கள் பதினேருலக்ஷம்; அநேகஜாதி அநேக பாஷைகளுள்ள மனிதர்கள் நான்கு லக்ஷம்; பசுக்கள் எருமைகள் யானைகள் புலிகள் முதலாகிய மிருகஜாதிகள் முப்பதுலக்ஷம்; பக்ஷி ஜாதிகள் பத்துலக்ஷம்; ஆக மொத்தம் எண்பத்து நான்குலக்ஷ ஜீவராசிகளையும் பிரமதேவர் சிருஷ்டிசெய்தனர். இப்படியிருக்க, உலகத்திலுள்ள ஜனங்கள் ஓர் பெரிய கேள்வி கேட்பது வழக்கம். அது என்னகேள்வியென்ருல், விதை முதலில் உண்டாயிற்ரு? அல்லது விருக்ஷம் முதலில் உண்டாயிற்ரு? என்று கேட்பதுண்டு. விதைமுந்தியென்ருலோ விருக்ஷமில்லாமல் விதை எப்படியுண்டாயிற்று என்று கேட்பதுண்டு. அல்லது, விருக்ஷம் முந்தியென்ருல் விதையில்லாமல் விருக்ஷம் எப்படி யுண்டாயிற்றென்று கேழ்ப்பார்கள். ஆதலால், விதை முந்தியென்பதும் அல்லது விருக்ஷம் முந்தியென்பதும் சொல்ல சாத்தியப்படமாட்டா. இவ்விரண்டில் முதல் எது ஏற்பட்டதோ அதைச்சொல்லுகின்ருேம் கேளுங்கள்.

பிரபஞ்ச சிருஷ்டிகாலத்தில் அசையாமல் நின்றிருக்கும் மரங்கள் செடிகள் மலைகள் இருபதுலக்ஷமென்று இதுவரையில் சொல்லியிருக்கின்ருேம். "ஸங்கல்பமாத்ரேண" என்ருல் தென்னை, வாழை, மா, பலா என்று அவையவைகளின் பெயர்களையெல்லாம் பிரமதேவர் நினைத்தமாத்திரத்தில் அந்தந்த மரங்களும், செடிகளும் அந்தக்ஷணமே உண்டாயிற்று. அதன்பிறகு, அம்மரங்க

ளிலும், செடிகளிலும் விதையுண்டாய் அந்த விதைகளை யும், செடிகளையும் நட்டு விருத்தி செய்துகொண்டார்களே யொழிய பிரபஞ்சம் உண்டானபோது விதையை உண் டாக்கவில்லை.

இதன்றியும் பிரபஞ்சம் சிருஷ்டிகாலத்தில் கோவில் களைக் கட்டிவைத்தார்கள். அந்தக் கோவில்களின் ரஹஸ் யார்த்தம் எதுவோ அதைச் சொல்லுகின்றோம் கேளுங்கள்.

ஸ்ரீரங்கம் கோவிலின் ரஹஸ்யார்த்தம் வெளியிடுதல்.

அவரவர்களின் ஜான்களால் அவரவர்களின் சரீ ரத்தை அளந்துபார்த்தால் எண்ஜாண் சரீரமே இருக் கும். சிற்பசாஸ்திர கணக்குப்படி அந்த எண்ஜாண் சரீ ரத்தைக் கோவில் அளவிற்கு அளவெடுத்துப் பார்க்கும் பொழுது, அந்தந்த கோவில்களுக்குத் தக்கபடி சரீரத்தை நூறு கணக்குகளான அடிகளாய்ப் பெருக்கி, சிவன்கோ வில்களையும் விஷ்ணுகோவில்களையும் பெரிய கோவில் களாய் இந்தியாவில் கட்டிவைத்தார்கள்.

எல்லா தேசங்களிலும் சிரேஷ்டமான தேசம் எது வென்றால் இந்தியா என்னும் இந்துதேசமேயாம். இந்த இந்துதேசமானது எல்லாதேசங்களுக்கும் தாயைப்போன் றதா யிருக்கின்றது. நீர்வளம், நெல்வளம், ஈஸ்வரபக்தி முதலானவைகளும் இந்தியாவில் நிறைந்திருக்கின்றன. தேவலோகத்தி லுள்ளவர்கள் எந்த வஸ்துக்கள் வேண்டு மென்று கேழ்க்கின்றார்களோ அந்த வஸ்துக்களையெல்லாம் காமதேனு என்னும் பசுவானது கொடுக்கின்றது. அது

போல் இந்தியாவிலுள்ள ஸ்திரீபுருஷர்கள் சிவ, விஷ்ணு கோவில்களுக்குச்சென்று, விசேஷ சிரத்தை பக்தியுடன் பூஜைசெய்து பிறகு, அக்கடவுள்களைத் தமது சுவாதீனம் செய்துகொள்வார்கள். கடவுளானவர் பக்தியென்னும் கயிற்றால் கட்டுப்படுவாரேயொழிய மற்ற எவைகளாலும் கட்டுப்படமாட்டார். ஒருவீட்டிற்குள் போகவேண்டுமானால் முதல் வாசற்படியில் நுழைந்து, பிறகு வீட்டிற்குள் போகவேண்டும். அதுபோல், இந்துதேசமானது மோக்ஷமென்னும் வீட்டிற்குப் போக வாசற்படியைப்போல் இருக்கின்றது.

இந்துதேசத்தில் கட்டியிருக்கும் இரஹஸ்யமான கோவில்களைப்போன்ற கோவில்கள் எந்தப் பிரபஞ்சத்திலும் கட்டியதில்லை. இந்தியாதவிர மற்ற தேசங்களில் கோடீஸ்வரனயிருந்து விசேஷ தானதர்மங்களைச்செய்து, அதனால் அதிக புண்ணியமுண்டாய் மரணமடைந்தபோதிலும் அப்படிப்பட்டவன், இந்தியாவில் மிகவும் ஏழையாயிருந்து கோவில்களுக்குச் சென்று கடவுளை மிகவும் சிரத்தை பக்தியுடன் பூஜை செய்துவரப்பட்டவனுக்குச் சமானமாகமாட்டான். அப்படிப்பட்ட கோடீஸ்வரன் இந்தியாவில்வந்து பிறந்து கடவுளை விசேஷபக்தியுடன் பூஜித்துவந்து பிறகு மோக்ஷமென்னும் வீடுபோய்ச் சேரவேண்டுமேயொழிய, இந்தியாதவிர வேறு தேசங்களிலிருந்து மோக்ஷமென்னும் வீட்டைப் போய்க் சேர சாத்தியப்படமாட்டாது. இந்தியாவில் விஷ்ணுகோவில் கட்டியிருக்கும் ரஹஸ்யார்த்தம் இனி சொல்லப்போகின்றேம். இப்படிப்பட்ட ரஹஸ்யார்த்தமான கோவில்கள் இந்தியாவில் தவிர மற்ற எந்தப் பிரபஞ்சத்திலும், தீவுகளிலும், தேசங்களிலும் கட்டிக் காட்டியதில்லை. ஆதலால், எல்லாதேசத்தையும்விட நமது இந்துதேசமே மிகவும் சிரேஷ்டமானது.

இந்தியாவில் திருச்சினப்பள்ளிஜில்லா இருக்கின்றது. அந்த ஜில்லாவிற்கு ஆறுமைல் தூரத்தில் ஸ்ரீரங்கமென்ற மஹா திவ்விய க்ஷேத்திரம் உண்டு. அந்த க்ஷேத்திரத்திலுள்ள கோவிலின் ரஹஸ்யார்த்தம் இனி சொல்லப்போகின்றோம் கேளுங்கள்.

எண்ஜாணுள்ள சரீரத்தையே கோவிலாய்க் கட்டிக் காட்டினார்கள் என்று இதுவரையில் சொல்லியிருக்கின்றோம். இந்த எண் ஜாணுள்ள சரீரத்தில் மூலாதார, சுவாதிஷ்டான, மணிபூரக, அநாஹத, விசுத்தி, ஆஞ்ஞேய, சஹஸ்ரார மென்று ஏழு சக்கரங்கள் இருக்கின்றன. அந்த ஏழு சக்கரங்களிலும் ஆறு சக்கரங்களை மாத்திரம் ஸ்ரீரங்கத்திலுள்ள ஸ்ரீரங்கநாதர் கோவில் சுற்றிலும் ஆறு சுற்றுப் பிராகாரங்களாய்க் கட்டிப் பிறகு ஏழாவது பிராகாரத்திற்குள் ஸ்ரீரங்கநாதர் பள்ளிகொண்டிருப்பதாய்க் காட்டியிருக்கின்றார்கள். இந்தக்கோவிலின் உள் ரஹஸ்யார்த்தம் இனி சொல்லப்போகின்றோம் கேளுங்கள்.

தொடைக்குமேல் குதஸ்தானமிருக்கின்றது. அந்த குதஸ்தானத்திற்கு "மூலாதார" மென்று சொல்லப்படும். மூலாதாரமென்றால் சரீரத்திற்கு முதல் ஆதாரமாயிருக்கப்பட்டதாதலால், அந்த குதத்திற்கு மூலாதாரமென்ற பெயருண்டாயிற்று. இந்த மூலாதாரவழியாய்ச் சாப்பிடப்பட்ட எல்லா வஸ்துக்களும் வெளியில் சென்று விடுவதனாலும், சரீரத்திற்கெல்லாம் முதல் ஆதாரமாய் இருப்பதனாலும், இந்த குதஸ்தானத்திற்கு மூலாதாரசக்ரமென்று பெயருண்டாயிற்று. இந்த மூலாதார சக்ரத்தையே ஸ்ரீரங்கத்திலுள்ள கோவிலுக்கு முதல் பிராகார மதில்சுவராய்க்கட்டி, அம்மதில்சுவர் ஓரமாய் நான்கு பக்கங்களிலும் அநேக கடைகளும், வீடுகளும் கட்டி குடியிருக்கின்றார்கள்.

மூலாதாரத்திற்குமேல் பிரஜாபதி இருக்கின்றது. அந்தப் பிரஜாபதி இருக்குமிடத்தை "சுவாதிஷ்டான" சக்ரமென்று சொல்லப்படும். அந்தச் சுவாதிஷ்டான சக்ரத்தையே மேற்படி கோவிலுக்கு இரண்டாவது மதில் சுவராய்க்கட்டி, அம்மதில்சுவர் ஓரமாய் நான்குபக்கங்களி லும் அநேக கடைகளும் வீடுகளும்கட்டிக் குடியிருக்கின் றார்கள்.

பிரஜாபதிக்குமேல் நாபி இருக்கின்றது. அந்த நாபி இருக்குமிடத்தை "மணிபூரக" சக்ரமென்று சொல்லப் படும். அந்த மணிபூரக சக்ரத்தையே கோவிலுக்கு மூன்றாவது மதில்சுவராய்க் கட்டிக் காட்டினார்கள். அச்சு வற்றிற்குள்ளும், கடைகளும் வீடுகளும் இருக்கின்றன.

நாபிக்குமேல் இருதயம் (மார்பு) இருக்கின்றது. அந்த இருதயம் இருக்குமிடத்தை "அநாஹத" சக்ர மென்று சொல்லப்படும். அந்த அநாஹத சக்ரத்தையே கோவிலுக்கு நான்காவது மதில்சுவராய்க் கட்டிக் காட்டி னார்கள். அச்சுவற்றிற்குள்ளும், கடைகளும் வீடுகளும் இருக்கின்றன.

இருதயத்திற்கு மேல் நெஞ்சுக்குழி இருக்கின்றது. அந்த நெஞ்சுக்குழி இருக்குமிடத்தை "விசுத்தி" சக்ர மென்று சொல்லப்படும். அந்த விசுத்தி சக்ரத்தையே கோவிலுக்கு ஐந்தாவது மதில்சுவராய்க் கட்டிக் காட்டி னார்கள். அதிலும் கடைகள், வீடுகள் இருக்கின்றன.

நெஞ்சுக்குழிக்குமேல் புருவம் இருக்கின்றது. அந்தப் புருவம் இருக்குமிடத்தை "ஆஞ்ஞேய" சக்ரமென்று சொல்லப்படும். அந்த ஆஞ்ஞேய சக்ரத்தையே கோவி லுக்கு ஆறாவது மதில்சுவராய்க் கட்டிக் காட்டினார்கள். அதிலும் கடைகள் வீடுகள் இருக்கின்றன.

புருவத்திற்குமேல் மண்டைஓடு இருக்கின்றது. அம் மண்டை ஓட்டிற்குள் சிகப்பு, வெண்மை நிறமுடைய மூளை இருக்கின்றது. அம்மூளையானது மோதிரம்போல் ஆயிரம் வளைவுகளுடன் சுற்றிக்கொண்டிருக்கும், அதனால் அம் மூளைக்கு "ஸஹஸ்ரார" கமலமென்று பெயருண்டாயிற்று. ஸஹஸ்ரமென்றால் ஆயிரம்; மூளையானது ஆயிர தள கமலம்போல் இருக்கின்றது என்பதேயாம். இந்த மூளை மெல்லியதாகிய ஜவ்வினால் மூடப்பட்டிருக்கின்றது. இம் மூளைக்கும் மண்டை ஓட்டிற்கும் மத்தியில் இருளாகிய ஆகாயம் இருக்கின்றது. அந்த ஆகாயமே கடவுளின் சொரூபம். ஆதலால், நமக்குள்ளிருக்கும் ஏழாவது சக்ரமாகிய சஹஸ்ராரகமலத்தில் பரமாத்மாவாகிய கடவுள் ஆகாயரூபமாய் நிவசித்துக்கொண்டிருக்கின்றாரென்று ஜனங்களெல்லோரும் தெரிந்துகொள்வதற்காக 'ஸஹஸ்ராரகமலத்தை ஸ்ரீரங்கம்கோவிலுக்கு ஏழாவது மதில்சுவராய்க் கட்டி அம்மதில்சுவர்மத்தியில் மூலஸ்தான கோவில்கட்டி அக்கோவிலுக்குள் ஸ்ரீரங்கநாதர் பள்ளிகொண் டிருப்பதாய்க் காட்டியிருக்கின்றார்கள்.

இந்த ஸ்ரீரங்கத்திலுள்ள கோவிலைப் பெரியகோவில் என்று சொல்லுவார்கள். கலியுக ஆரம்பத்தில் முதல் இந்த விஷ்ணுகோவில் உண்டாயிற்று. அதன்பிறகு, மற்ற விஷ்ணுகோவில்கள் ஏற்பட்டன. ஆதலால், ஸ்ரீரங்கத்திலுள்ள விஷ்ணுகோவிலைப் பெரியகோவிலென்று சொல்லுவார்கள்.

இப்பொழுது ஸ்ரீரங்கத்திலுள்ள விஷ்ணுகோவிலின் ரஹஸ்யார்த்தம் சொன்னோம். இனி திருப்பதிமலை ரஹஸ்யார்த்தம் சொல்லப்போகின்றோம் கேளுங்கள்.

இந்தியாவில் சித்தூர்ஜில்லா இருக்கின்றது. அந்த ஜில்லாவில் திருப்பதி என்னும் க்ஷேத்திரம் இருக்கின்றது.

அந்த க்ஷேத்திரத்தில் மலையின்கீழ் இருப்பதற்குக் கீழ்த் திருப்பதி என்றும், மலைக்குமேல் இருப்பதற்கு மேல் திருப்பதி என்றும் சொல்லப்படும்.

மலைக்குமேலிருக்கும் பெருமாளுக்கு ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் என்று சொல்லுவார்கள். இந்த வேங்கடேசப் பெருமாளைத் தமிழ் தேசத்தி லுள்ளவர்க ளெல்லோரும் ஏழுமலையான் என்றும், தெலுங்கு தேசத்தி லுள்ளவர்க ளெல்லோரும் ஏடுகோண்டலவாடு என்றும் சொல்லுவது வழக்கம். மேற்படி பெருமாளானவர் ஏழாவது மலையின் மேல் நிவசிக்கவில்லை. ஏழுமலையான் என்று ஏன் பெயர் வந்ததோ அதை இனி சொல்லுகின்றோம் கேளுங்கள். மேல் திருப்பதி மலைமேல் ஏறும்பொழுது முதல் காலி கோபுரம் இருக்கின்றது. அதை ஏறும்பொழுது மிகவும் நெட்டாய் ஏறவேண்டும். அதற்குமேல் பெருமாள் இருக்கும் மேல்மட்டம் வரையில் உயரமாய் ஏறிக்கொண்டே போகவேண்டும். மிகவும் கஷ்டத்துடன் மேல்மட்டம் வரையில் ஏறிச்சென்றால் பிறகு பெருமாளை சேவிக்கலாம். இதன் உள் ரஹஸ்யார்த்தம் ஏதுவோ அதை இனி சொல்லப்போகின்றோம் கேளுங்கள்.


நமதுசரீரத்தில் ஏழு சக்ர மிருக்கின்றதென்றும் ஏழாவது சக்ரமாகிய ஸஹஸ்ரார கமலத்தில் பரமாத்மாவானவர் நிவசித்துக்கொண் டிருக்கின்றார் என்று தெரிவிப்பதற்காக இதுவரையில் ஸ்ரீரங்கத்தை திருஷ்டாந்தமாய்க் காட்டி, அதன் ரஹஸ்யங்களையெல்லாம் வெளியிட்டுச் சொன்னோம். இந்தத் திருப்பதியின் ரஹஸ்யார்த்தமும் அதுவேயாம். அதாவது மூலாதார, சுவாதிஷ்ட்டான, மணிபூரக, அநாஹத, விசுத்தி, ஆஞ்ஞேய, ஸஹஸ்ரார மென்று சொல்லப்பட்ட இந்த ஆறுசக்ரங்களும் குதஸ்த்

தானம்முதல், புருவம்வரையில் மேடையைப்போல் அடுக்கடுக்காய் உயர்ந்திருப்பதனால் இந்த ஆறு சக்ரங்களும் திருப்பதி ஆறு மலைகளாய்க் காட்டிப் பிறகு ஏழாவது சக்ரமாகிய ஸஹஸ்ராரகமலத்தை ஏழாவது மலையாய்க் காட்டி, அம்மலைமேல் ஸ்ரீ வேங்கடேசப்பெருமாள் நிவசித்துக்கொண் டிருக்கின்றாரென்று சொல்லுவார்கள்.

என்றால், சரீரத்திற்குமேலிருக்கும் மண்டை ஓட்டிற்குள் பரமாத்மாவாகிய கடவுள் ஆகாயரூபமாய் இருப்பதனால் சரீரத்திலிருக்கும் ஏழு சக்ரங்களையே ஏழு மலைகளாய் காட்டி, ஏழாவது மலைமேல் ஸ்ரீ வேங்கடேசப்பெருமாள் நிவசிப்பதாய் கலியுக ஜனங்களுக்குக் காட்டியிருக்கின்றார்கள். இதுவரையில் விஷ்ணுகோவில் ரஹஸ்யார்த்தம் சொன்னோம். இனி சிவன்கோவில் ரஹஸ்யம் சொல்லப் போகின்றோம் கேளுங்கள்.

சரீரத்தை சிவன்கோவிலாய்க் கட்டிக்காட்டுகின்றார்.

இதோ எதிரிலிருக்கும் சரீரகோவில் படத்தைப் பாருங்கள். பாதங்கள் இரண்டும் மேல் ஆகாயத்தைப் பார்க்கின்றன. ஆதலால், அந்தப் பாதங்களை கோவிலுக்கு எதிரில் கோபுரமாய்க் கட்டிக்காட்டினார்கள். பாதத்தின்மேல் பத்து விரல்கள் இருக்கின்றன. அந்தப் பத்து விரல்களையும் கோபுரத்தின்மேல் பத்துக் கலசங்களாய் வைத்துக் காட்டினார்கள். பிறகு,


శ్రీ పరమహంస సచ్చిదానందయోగీశ్వరులవారు తనశరీరమునే
దేవాలయముగా కట్టిచూపుచున్నారు.
ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரர் தன்ஸரீரத்தையே
தேவாலயமாய்க் கட்டிக் காட்டுகின்றார்.
தாராபாத்ரம்.
ధారా పాత్ర.
மண்டை ஓட்டிற்குள் ளிருக்கும் வெளியே
கடவுள். இதை லிங்கமாய்க் காட்டினார்கள்.
తలబుఱ్ఱలోనుండు బయలే దేవుడు
దీనిని లింగముగా జూపెట్టిరి.
பிரஜாபதியே
ప్రజాపతియే
துஜஸ்தம்பம்.
ధ్వజస్థంభము.
பாதவிரல்களே
கலசங்கள்.
పాదములయొక్క
వ్రేళ్లే కలసములు.
இருதயகமலமே நந்தி.
హృదయకమలమే నంది.
தொப்புளே பலிபீடம்.
బొడ్డే బలిపీఠము.
பாதங்களே கோபுரம்.
పాదములే గోపురము.
Drawn By.
Sathananthan & Co:
Choolai Madras.
19-5-1930

பாதகோபுரவழியாய்க் கோவிலுக்குள் செல்லும் பொழுது பிரஜாபதி இருக்கின்றது. அந்தப் பிரஜாபதி இருக்குமிடத்தில் துஜ ஸ்தம்பத்தை நிறுத்திக்காட்டினார்கள். பிறகு,

பிரஜாபதி இருக்குமிடத்திலிருந்து ஒருஜாண் தூலவில் தொப்புள் இருக்கின்றது. பிரஜாபதிக்குச் சமீபமாகவே தொப்புள் இருப்பதனால் துஜ ஸ்தம்பத்திற்குச் சமீபமாகவே தொப்புள் இறுக்குமிடத்தில் பலிபீடத்தை வைத்தார்கள். தொப்புள் எப்படி இருக்கின்றதென்றால் அரை ரூபாய்ப்போல் (ஒருஷிலிங்குபோல்) வட்டமாய் இருக்கின்றது. தொப்புள் அரைரூபாயைப்போல் வட்டமாயிருப்பதனால் அந்தத் தொப்புள்மேல் நிறுத்தும் பலிபீடத்தின் மேல்புரமும் அரைரூபாயைப்போல் வட்டமாய்ச்செதுக்கி, தொப்புள் இருக்கப்பட்ட இடத்தில் பலிபீடத்தை நிறுத்தினார்கள். இந்தப் பலிபீடத்தின் ரஹஸ்யார்த்தம் எதுவோ அதை இனிமேல் சொல்வோம்.

தொப்புளுக்குமேல் இருதயம் இருக்கின்றது. அந்த இருதய மிருக்குமிடத்தில் நந்தியை உட்காரவைத்தார்கள். பிறகு,

இருதயத்திற்குமேல் மண்டை ஓடு இருக்கின்றது. அந்த மண்டை ஓட்டிற்குப் பிரம்மகபாலமென்று சொல்லப்படும். மண்டை ஓட்டிற்குப் பிரம்மகபாலமென்று சொல்வதற்குக் காரணம் எதுவோ அதைச் சொல்லுகின்றோம் கேளுங்கள்.

நமது சரீரத்திற்குமேல் மண்டை ஓடு இருக்கின்றது. அம்மண்டைஓட்டின்கீழ் மூளையிருக்கின்றது. அம்மூளைக்கும் மண்டை ஓட்டிற்கும் மத்தியில் இருளாகிய ஆகாயம் இருக்கின்றது. அந்த ஆகாயத்திற்குப் பிரம்மமென்று

பெயர். அந்தப்பிரம்மம் மண்டை ஓட்டிற்குள் நிவசித்துக் கொண்டிருப்பதனால் அம் மண்டை ஓட்டிற்குப் பிரம்ம கபாலமென்னும் பெயருண்டாயிற்று.

இப்பொழுது சரீரத்தைக் கோவிலாய்க் கட்டிக்காட்டினோம். இக்கோவிலின் உள்ரஹஸ்யார்த்தம் இனி சொல்லப்போகின்றோம் கேளுங்கள்.

பாதங்களையே கோபுரமாகவும், பாதத்தின் நுனியிலிருக்கும் பத்து விரல்களையே கோபுரத்தின்மேல் பத்துக் கலசங்களாகவும், பிரஜாதிபதியை துஜஸ்த்தம்பமாகவும் நிறுத்திக் காட்டினதாய் இதுவரையில் சொல்லியிருந்தோம். பிரஜாதிபதியை துஜஸ்தம்பமாய் ஏன் நிறுத்திக் காட்டினார்களோ அதுவிஷயம் இனி சொல்லப்போகின்றோம் கவனியுங்கள்.

பிரஜாபதியென்றால், எல்லா பிரஜைகளையும் ஜீவராசிகளையும் உற்பத்தி செய்யப்பட்டதாதலால், இதற்குப் பிரஜாபதியென்னும் பெயருண்டாயிற்று. இந்தப் பிரஜாபதியை பாத கோபுரத்திற்கு எதிரில் துஜ ஸ்தம்பமாய் நிறுத்தி வைத்தார்கள்.

எல்லாஜாதி மனுஷ்யர்களுக்கும், மிருகங்களுக்கும், பக்ஷிகளுக்கும், நகர்ந்துசெல்லும் பாம்புகள், புழுக்கள் முதலானவைகளுக் கெல்லாம் பிரஜாபதி இருப்பதனால் அந்தந்த ஜிவராசிகள் வருஷாந்திரதோறும் பிறந்து அபிவிருத்தியாய்க்கொண்டே வருகின்றன. எல்லாஜாதி மனிதர்களுக்கும், மிருகங்களுக்கும், பக்ஷிகளுக்கும், நகர்ந்து செல்லும் புழுக்களுக்கும் பிரஜாபதி இல்லாமலிருக்கும் பக்ஷத்தில் எந்த ஜீவராசிகளும் வருஷாந்திரந்தோறும் உற்பத்தி யாகவேமாட்டா. உற்பத்திக்குக் காரணம் பிரஜாபதியா யிருப்பதனல் அந்தப் பிரஜாபதியைக் கோவிலுக்

கெதிரில் துஜ ஸத்தம்பமாய் நிறுத்திக் காட்டினார்க ளென்று அறியக்கடவீர்களாக.

பிரஜாபதிக்குமேல் ஒரு ஜாண் உயரத்தில் தொப்புள் இருக்கின்றது. அந்தத் தொப்புள் எப்படி இருக்கின்ற தென்றால், அரை ரூபாயைப்போல் வட்டமாயிருப்பதனால், அந்தந்தக் கோவிலுக்குத் தக்கபடி எட்டங்குலம் உயரம், பதினோரங்குலம் அகலம் முதல், ஒன்றேகால் அல்லது ஒன்றரை அல்லது இரண்டடி உயரமுள்ள ஓர்கல்லின் கீழ்ப் புரம் இரண்டங்குலம் உயரத்தில் பாதம்வெட்டி அந்தப் பாதத்தின்மேல் தாமரைக்கமல வடிவமாய்ப் பொளிந்து அக்கமலத்தின் மேல்பாகம் தொப்புள் எப்படி யிருக்கின் றதோ அதுபோல், வட்டமாய்ச்செதுக்கி அக்கல்லுக்குப் பலிபீடமென்று பெயரைத்தந்து, தொப்புள் இருக்குமிடத் தில் அந்தப் பலிபீடத்தை வைத்தார்கள். இந்தப் பலி பீடத்தின் ரஹஸ்யார்த்தம் எதுவோ அதை இனி சொல் லப் போகின்றோம் கேளுங்கள்.

பிரஜாபதிக்குமேல் ஒருஜாண் உயரத்தில் தொப்புள் இருக்கின்றதென்றும் இதுவரையில் சொல்லியிருக்கின் றோம். பிரஜாபதிக்கும் தொப்புளுக்கும் மத்தியில் இருக் கும் ஒருஜாண் நிகளத்தை சிற்ப சாஸ்திர கணக்குப்படி கோவில் அளவிற்கு அளவெடுத்துப் பார்க்கும்பொழுது, துஜஸ்த்தம்பம் இருக்குமிடத்திற்கும் பலிபீடம் இருக்கு மிடத்திற்கும் சுமார் நான்கு அல்லது ஐந்து முழம் தூரத்தில் பலிபீடம் இருக்கும். பலிபீடமென்றால், பலி கொடுங்கள் அதாவது கொன்றுவிடுங்கள் என்பதேயாம். பலிபீடத்தினிடம் எதைக் கொண்டுபோய்க் கொன்றுவிட வேண்டுமோ அதை இனி சொல்லப் போகின்றோம் கேளுங்கள்.

நமக்குள்ளிருக்கும் அநேக விதங்களாகிய ஆசாபாசங்களும், காமக் குரோதாதிகளும், அஹங்கார மமகாரங்களும் நம்முடன்கூடவே அநேக கோடானுகோடி ஜன்மங்களாய் வந்துகொண்டே இருக்கின்றன. ஆதலால், அந்த ஆசாபாசங்களையும், காமக் குரோதாதிகளையும், அஹங்கார மமகாரங்களையும் பலிபீடத்தினிடம் பலிகொடுத்துவிட்டுப் பிறகு பரிசுத்த மனதுடன் கோவில் மூலஸ்த்தானத்திற்குள் போகவேண்டும்.

மனதை பலிபீடத்தினிடம் எவ்வாறு பலி கொடுக்க வேண்டுமோ இனி அதைச் சொல்லப்போகின்றோம் கேளுங்கள். கோவில் கோபுர வாசற்படிக்குள் நுழைந்து தமது இடதுகைப்புரமாய்ச் சென்று துஜஸ்த்தம்பத்தைத் தாண்டிப் பலிபீடத்தினிடம்போய் நின்று, இரண்டு கைகளையும் குவித்துப் பலிபீடத்தின்மேல் வைத்து, குவித்து வைத்த கைகளின்மேல் முடியைச்சாய்த்துக் கும்பிட்டுக் கொண்டே, "எனக்குள்ளிருக்கும் ஆசாபாசாங்களையும், காமக்குரோதாதிகளையும், அஹங்கார மமகாரங்களையும் பலிபீடமாகிய உன்னிடம் பலிகொடுத்தேன். இனி எந்த ஆசாபாசங்களும், காமக்குரோதாதிகளும், அஹங்கார மமகாரங்களும் என்னிடத்தில் இல்லவேயில்லை, இப்பொழுது நான் மிகவும் பரிசுத்த மனதுடையவனுயிருந்து சந்நிதானத்திற்குள் போகின்றேன்" என்று தனக்குள் தான் மனதில் நினைத்துப் பிறகு மூலஸ்தானத்திற்குள் போகவேண்டும். "துள்ளுமரியா மனது பலிகொடுத்தேன் துட்ட கன்மதேவதைகளில்லை" என்று தாயுமான சுவாமிகள் பாடிய கருத்து இதுவேயாம். இவ்வாருக மனதை பலிபீடத்தினிடம் பலிகொடுத்துப் பிறகு, உள்ளே போகும்பொழுது, பலிபீடத்திற்கும் மூலஸ்தானத்திற்குள்ளிருக்கும் லிங்கத்திற்கும் மத்தியில் நந்தியார் உட்கார்ந்

திருக்கின்றார். லிங்கத்திற்கெதிரில் நந்தியார் ஏன் உட்கார்ந்திருக்கின்றாரோ அது விஷயம் இனி சொல்லுகின்றோம் கேளுங்கள்.

பிரபஞ்ச சிருஷ்டிகாலத்தில் சிவன்கோவில்களையும், விஷ்ணுகோவில்களையும் கட்டிவைத்தார்கள். அக்காலத்தில் காட்டில் தவம்செய்துகொண்டிருந்த தபோதனர்களாகிய மஹான்கள் சிவன்கோவிலைப் பார்ப்பதற்காக காட்டிலிருந்து ஊருக்குள்வந்து, சிவன் கோவிலுக்குள் பிரவேசித்து, லிங்கத்திற்கெதிரில் நின்றுலிங்கத்திற்குள் அடங்கியிருக்கும் ஈஸ்வரனைத் தமது யோகதிருஷ்டியில் பார்த்தார்கள். ஈஸ்வரனானவர் மஹா யோகியாதலால், யோகாக்னிஜுவாலையுடன் லிங்கத்திற்குள் அடங்கியிருப்பதை தபோதனர்களாகிய மஹான்கள் தவது யோகதிருஷ்டியில் தெரிந்துகொண்டார்கள். பிறகு, அந்த யோகாக்னிஜுவாலையைத் தணிக்கச்செய்ய என்ன செய்தார்களோ அதை இனி சொல்லப்போகின்றோம் கேளுங்கள்.

மேற்படி ஈஸ்வரரது யோகாக்னி ஜுவாலையைத் தணிக்கச்செய்ய தாராபாத்திரமென்னும் ஒன்றை மேற்சொல்லிய பெரியோர்கள் செய்வித்தார்கள். தாராபாத்திரமென்றால், ஒரு பாத்திரத்திலிருந்து எப்பொழுதும் தாரைதாரையாய் ஜலம் விழுந்துகொண்டிருக்கும் பாத்திரத்திற்குத் தாராபாத்திரமென்று சொல்லப்படும். அந்த தாராபாத்திரம் எவ்வாறிருக்குமென்றால், வாழைப்பூவின் மேற்புரம் அகலமாயும், அதன்தொப்பை விரிவாயும், நுனி மிகவும் கூராயும் இருக்கும். ஆதலால், இவ்வாழைப்பூவைப் போல் செம்பினால் பாத்திரம் ஒன்று செய்வித்து அதை லிங்கத்தின் சிரசிற்குமேல் தொங்கக்கட்டி அர்ச்சகரைப் பார்த்து "ஓய் அர்ச்சகரே! இந்த தாராபாத்திரத்தில் எப்பொழுதும் ஜலம்குறையாமலிருக்கும்படிவிட்டுக்கொண்டே

இரும்." என்று பெரியோர்கள் அர்ச்சகருக்கு ஆஞ்ஞா பித்துப் பிறகு அவர்கள் இருப்பிடமாகிய காட்டுக்குச் சென்றுவிட்டார்கள். பெரியோர்கள் சென்றவுடன் அர்ச்சகர் தாராபாத்திரத்தில் ஜலம் விட்டனர். ஜலம் விட்ட பிறகு, அந்த ஜலமானது மிகவும் சிறிதாய் தாரையைப் போல் லிங்கத்தின் சிரசின்மேல் விழுந்துகொண்டேயிருந் தது. பிறகு, அந்தஜலம் குறையக்குறைய அர்ச்சகர் அதில் ஜலம் விட்டுக்கொண்டேயிருப்பார். தாராபாத்திரத்தி லுள்ள ஜலம் லிங்கத்தின் சிரசின்மேல் விழுந்துகொண் டிருப்பதை சரீரகோவில் படத்தில் பாருங்கள்.

இந்தத் தாராபாத்திரத்தின் ரஹஸ்யமும், நந்தியார் லிங்கத்திற்கெதிரில் உட்கார்ந்திருக்கும் ரஹஸ்யமும் "ஸரீர தேவாலய ரஹஸ்யார்த்த பாரிஜாத" நூலைப்பார்த் துத் தெரிந்துகொள்ளுங்கள்.

ஆதியில் ஏற்பட்ட பழைய கோவில்களின் மூலஸ்தா னத்திற்குள் போகும்பொழுது, நந்தியார் இருக்குமிடத்தி லிருந்து சிறுகச்சிறுக இருள் அதிகரித்துக்கொண்டே மூலஸ்தானம் வரையில் இருளாயிருக்கும். மூலஸ்தா னத்திற்குள் போகப்பட்டவர்களுக்குக் காற்றும் வெளிச் சமும் இராததனால், அவர்களின் சரீரமெல்லாம் குமுங்கி வியர்த்துவிடும்.

லக்ஷக்கணக்காய்ப் பொருள் செலவுசெய்து கோவில் களைக் கட்டியபோதிலும் மூலஸ்தானத்திற்குள் போகும் பொழுது நந்தியார் இருக்குமிடத்திலிருந்தே மூலஸ்தா னம்வரையில் இருளாயிருக்கும்படி ஆதியிலிருந்த பெரி யோர்கள் கட்டிவைத்தார்கள். அப்படிப்பட்ட பழைய கோவில்களின் மூலஸ்தானங்களை யெல்லாம் இப்போதி ருக்கும் நாட்டுகோட்டைச் செட்டிகள் இடிப்பித்து, நல்ல வெளிச்சம் இருக்கும்படியாயும், காற்று வரும்படியாயும்

கட்டியிருக்கின்றார்கள். கோவில் மூலஸ்தானம் ரஹஸ்யார்த்தம் கோவில் தர்மகர்த்தர்களுக்கும் நாட்டுக்கோட்டைச் செட்டிகளுக்கும் தெரியாமலிருப்பதனால் ஐதீகத்துடன் நல்ல ஸ்திதியிலிருந்த பழைய கோவில்களை யெல்லாம் இடிப்பித்துப் புதியகோவில்களாய்க் கட்டினார்கள்.

நமது சரீரத்திற்கு மூலஸ்தானம் சிரசு என்றும், அந்தச் சிரசிற்குள் கடவுளானவர் வெட்டவெளியாய் இருக்கின்றாரென்றும், அதனால், கோவில் மூலஸ்தானங்களை இருளாயிருக்கும்படி முன்னுள்ள பெரியோர்கள் கட்டி வைத்தார்களென்றும் இதுவரையில் முன்னமே சொல்லியிருக்கின்றோம். இதுவே சரீரக்கோவிலின் ரஹஸ்யார்த்தமென்று அறியக்கடவீர்களாக. இது இப்படியிருக்க, கோவில் மூலஸ்தானத்திற்குள் ஸ்திரீ புருஷர்கள் சென்று, தேங்காய்களையும் கர்ப்பூரக்கட்டிகளையும் கோவில் அர்ச்சகனிடம் கொடுப்பார்கள். இத்தேங்காய்களினுடையவும் கர்ப்பூரக்கட்டிகளினுடையவும் ரஹஸ்யார்த்தம் எதுவோ அதை இனி சொல்லப்போகின்றோம் கேளுங்கள்.

தேங்காயானது பட்டையால் மூடப்பட்டிருக்கின்றது. அப்பட்டை பச்சைவர்ணமாயும், மினுமினுப்பாயும், பார்வைக்கு மிகவும் அழகாயும் இருக்கும். அப்பட்டைக்குள் நார் இருக்கின்றது. அந்நாரானது ஒன்றுடன் ஒன்று சேர்ந்து பின்னிக்கொண்டு விசேஷ சிக்குச்சிக்குகளான நாருகளுடன் கூடி இருக்கின்றன. தேங்காயின்மேல் மூடிக்கொண்டிருக்கும் பட்டையை உரிக்கும்பொழுது அது மிகவும் கஷ்டத்துடன் விசேஷ சிக்குச் சிக்குகளான நார்களுடன்கூடி பட்டை உரிந்து வந்துகொண்டேயிருக்கும். அப்பட்டைகளையெல்லாம் விடுவித்துத் தேங்காயை உடைத்துப் பார்க்கும்பொழுது உள்ளே வெண்மைநிறமாய்த் தேங்காய்க் காணப்படும். அத்தேங்காய்முடிகளைத்

தட்டில் வைத்துக் கடவுளுக்குக் காட்டுகின்றார்கள். அப்படிக் காட்டுவதற்குக் காரணமென்னவென்றால்,

அநேக சிக்குச் சிக்குகளான நார்களுடன் கூடிப் பின்னிக்கொண்டிருக்கும் இத்தேங்காயை உரிக்கும் பொழுது, இது எவ்வளவு கஷ்டத்துடன் உரிபட்டுவந்ததோ அதுபோல் ஸ்திரீ புருஷர்களாகிய எங்கள் சரீரத்தின்மேலிருக்கும் தோலானது, பார்வைக்குமாத்திரம் இத்தேங்காயின்மேலிருந்த பட்டையைப்போல் மினுமினுப்பாயும், மிகவும் அழகாயும் இருக்கின்றது. சரீரம்மாத்திரம் தேங்காயின்மேலிருக்கும் பட்டையைப்போல் மினுமினுப்பாயும், மிகவும் அழகாயும் இருந்தபோதிலும் எங்கள் சரீரத்திற்குள் அநேகவிதங்களாகிய ஆசாபாசங்களென்னும் சிக்குகள் ஒவ்வொரு ஜன்மத்திலும் சிறுகச்சிறுக சேர்ந்துவந்துகொண்டே யிருக்கின்றன. ஆதலால்,

எங்கள் சரீரத்திற்குள்ளிருக்கும் ஆசாபாசங்களென்னும் சிக்குகளையெல்லாம் விடுவித்துப் பார்க்கும்பொழுது, இத்தேங்காய்க்குள் வெண்மைநிறம் இருப்பதுபோல், எங்கள் சரீரத்திற்குள் மிகவும் பரிசுத்தமாகிய பரமாத்மசொரூபமிருக்கின்றது. அந்தப் பரமாத்ம சொரூபத்தை அநேக ஜன்மங்களிலிருந்து சிறிது சிறிதாய் மூடிக்கொண்டுவந்த ஆசாபாசங்களென்னும் சிக்குகளையெல்லாம் விடுவித்து, ஜீவாத்மசொரூபமாயிருக்கும் எங்களைப் பரமாத்மசொரூபமாயிருக்கும் உம்மில் ஐக்கியம் செய்துகொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்வதற்காகவே தேங்காய்களை உடைத்துத் தட்டில் வைத்துக் கடவுளுக்குக் காட்டுவதற்குக் காரணமாயிற்று. தேங்காய்மூடிகளை கடவுளுக்குக் காட்டியபிறகு அத்தட்டைக் கீழேவைத்து ஒரு பெரிய கர்ப்பூரக்கட்டியை ஏற்றிக் கடவுளுக்குக்காட்டி,

இதோ ! இக்கர்ப்பூரக்கட்டியானது எரிந்து நீராய்க்

கரைந்து சிறிதேனும் தங்காமல் கர்ப்பூரக்கட்டியெல்லாம் ஜோதி சொரூபத்தில் எப்படி ஐக்யமாய்விடுகின்றதோ அதுபோல், எங்கள் ஆசாபாசங்களென்னும் கர்மங்களை யெல்லாம் இக்கர்ப்பூரக்கட்டியைப்போல் நீராய்க் கரையும் படிச்செய்து பிறகு, எங்களுக்குள்ளிருக்கும் ஆத்மசொரூ பத்தைப் பரமாத்ம சொரூபமாயிருக்கும் உம்மில் ஐக்யம் செய்துகொள்ளவேண்டும் என்னும் கருத்தே கர்ப்பூரக் கட்டிகளைக் கொளுத்திக் கடவுளுக்குக் காட்டும் ரஹஸ் யார்த்தமென்று நன்ருய்த் தெரிந்து கொள்ளுங்கள்.

இவைகளின் ரஹஸ்யார்த்தம் இப்படியிருக்க, கோ வில் அர்ச்சகன் கர்ப்பூரக்கட்டிகளைக் கொளுத்திக் கடவு ளுக்கு ஆராதனைக் காட்டும்பொழுது, மூலஸ்தானத்திற் குள் நின்றிருக்கும் ஸ்திரீபுருஷர்க ளெல்லோரும் இரண்டுகைகளையும் குவித்துப் பெருமாளைப் பார்த்துக் கும்பிட்டுக்கொண்டே, கீழே சொல்லப்போகுமாறு வரங் களைக் கேழ்கின்ருர்கள்.

நான் புத்திரசந்தான மில்லாமலிருக்கின்றேன் எனக் குப் புத்திரசந்தானமுண்டானுல், இரண்டாயிரம்ரூபாயில் ரத்னகிரீடப் செய்து உமதுசிரசில் தரிக்கின்றேனென்று ஒருவனும், மற்ருெருவன் எனக்கு நல்ல கன்னிகையாய்ப் பார்த்து சீக்கிரம் விவாகம் செய்விப்பாயாகில் ஆயிரம் ரூபாயில் ரத்தினங்களிழைத்த மாலையைச் செய்வித்து உமது கழுத்தில் தரிக்கின்றேனென்றும், இன்னெருவன் யான் B. A. (பீ. ஏ.) பாஸ் செய்வேனேயாகில் ஐந்நூறு ரூபாயில் லக்ஷ்மியைச் செய்வித்து உமது மார்பில் வைக் கின்றேனென்றும், வேருெரு ஸ்திரீ, என்புருஷனது வியாதி சௌக்கியமானுல் என்சரீரத்தில் அணிந்துகொண் டிருக்கும் ஆபரணங்களை யெல்லாம் உமது உண்டியில் போடுவேனென்று இவ்வாருக மூலஸ்தானத்திற்குள் எத்

தனைபேர் ஸ்திரீபுருஷர்கள் நின்றிருக்கின்றார்களோ அவர்களெல்லோரும் அவரவர்களுக்கு வேண்டும் வரங்களைக் கேட்கின்றார்கள். அப்பொழுது, இதோ இதனடியில் கல் உருவமாய் நின்றிருக்கும், ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாளானவர் என்ன காட்டுகின்றாரென்றால்,




ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள்.

ஒருகையில் சங்கும், இன்னொரு கையில் சக்கரமும், வேறொரு கையால் தன் பாதத்தைக்காட்டி "என்பாதத்தின்மேல் திருஷ்டியை நிறுத்தி சும்மாயிருங்கள். நான்

கல் உருவமாய் நின்றிருப்பதனால் சும்மாயிருங்களென்று சொல்ல வாயில்லாமலிருக்கின்றேன். ஆதலால், எந்த பலத்தையும் விரும்பாமலும், எதையும் நினையாமலும் சும்மாயிருங்களென்று இதோ எனது வலதுகையால் சைகை காட்டுகின்றேன் பாருங்கள்.

நான் எவ்வாறு கல்உருவமாய் நின்றிருக்கின்றேனோ அதுபோல் நீங்களும் உங்கள் மனதைக் கல்லைப்போல் செய்து விடுங்கள். நீங்கள் உங்கள் மனதை அங்குமிங்கும் ஓடவிடாமல் கல்லைப்போல் செய்துவிடுவீர்களாகில் அப்பொழுது இராக்ஷதர்களைச் சம்மரித்த சக்கரம் இதோ எனது வலதுகையில் இருக்கின்றது பாருங்கள். இச்சக்கரத்தினால் உங்கள் மனதைக் கண்டித்துப் பிறகு, உங்களை நான் என்னில் ஐக்யம் செய்துகொள்வேன். உங்களை நான் என்னில் ஐக்யம் செய்துகொண்டபின், இக்கலியுகத்தில் சிலஜீவர்கள் இன்று என்னில்வந்து ஐக்யமானார்களென்று மிகவும் சந்தோஷித்து, என் இடதுகையிலிருக்கும் சங்கை வாயில்வைத்துப் 'பம் பம்' என்று பூரிப்பேன்'' என்னும் பாவனையாய் முன்னுள்ள பெரியோர்கள் நான்கு கைகளையும் நான்கு விதங்களாய்க் கற்களினாலும், மரங்களினாலும் விக்கிரகங்களைச் செய்வித்து, கோவில் மூலஸ்தானத்திற்குள் வைத்துக் காட்டினார்கள். மஹாவிஷ்ணுவாகிய பெருமாளானவர் நான்கு கைகளையும் நான்கு விதங்களாய் ஏன் காட்டினாரோ அதன் ரஹஸ்யார்த்தம் சொன்னோம்.

ஒருமுகக் கடவுளை ஆறுமுகக் கடவுளாய்க் கல்லினாலும், மரங்களிலும் செய்வித்து அக்கடவுளுக்கு "ஷண்முகன்" என்றும் "சுப்ரமண்யன்" என்றும் பெரியோர்கள் ஏன் பெயர்வைத்தார்களோ அதுவிஷயம் இனி சொல்லப் போகின்றோம்.



ஸஹஸ்ராரம் (பிரம்மகபாலம்)
அதிதேவதை (பரமாத்மா)

ஆஞ்ஞேயம் (புருவமத்தியம்.)
அதிதேவதை ஈஸ்வரன்.

விசுத்தி (கண்டம்.)
அதிதேவதை ஜீவன்.

அனாஹதம் (இருதயம்.)
அதிதேவதை ருத்திரன்.

மணிபூரகம் (தொப்புள்.)
அதிதேவதை விஷ்ணு.

சுவாதிஷ்ட்டானம்
(லிங்கஸ்த்தானம்.)
அதிதேவதை பிரமன்.

மூலதாரம் (குதஸ்த்தானம்)
அதிதேவதை கணபதி.

ஏழு சக்ரங்களிலும்
மூச்சு நடக்கும் படம்

ஆறுமுகக்கடவுளின் ரஹஸ்யார்த்தம் வெளியிடுதல்.

நமது சரீரத்தில் மூலாதார, சுவாதிஷ்ட்டான மணிபூரக, அநாஹத, விசுத்தி, ஆஞ்ஞேய, ஸஹஸ்ராரமென்று ஏழு சக்கரங்கள் இருக்கின்றன.

இந்த ஏழுசக்கரங்களிலும், ஒரேகடவுளானவர் ஆறுகடவுள்களின் ரூபங்கொண்டு சரீரத்திற்குள் நிவசித்துக்கொண்டிருக்கின்றார். அந்த ஆறுகடவுள்களையும் ☞ எதிரிலிருக்கும் படத்தில் காட்டப்பட்டிருக்கின்றது பாருங்கள்.

ஏழுசக்கரங்களிலும் மூச்சுநடப்பது.

ஒரேகடவுளானவர் ஆறுகடவுள்களின் பெயருடன் கூடி நமது சரீரத்தில் நிவசித்துக்கொண்டிருந்து எதைத் தினந்தோறும் ஆஹாரமாய்ச் சாப்பிட்டுவருகின்றார்களோ அது விஷயம் இனி சொல்லப்போகின்றோம் கேளுங்கள்.

நமது சரீரத்திலிருக்கும் மூலாதார, சுவாதிஷ்ட்டான, மணிபூரக, அநாஹத, விசுத்தி, ஆஞ்ஞேய, ஸஹஸ்ரார மென்னும் இந்த ஏழுசக்கரங்களிலும், ஆறுசக்கரங்கள் மாத்திரம் ஸ்ரீரங்கத்திலுள்ள ஸ்ரீரங்கநாதர் கோவிலுக்கு மதில்சுவர்களாய்க் கட்டிக்காட்டினார்களென்றும், ஏழாவது சக்கரமாகிய ஸஹஸ்ராரகமலத்தை ஏழாவது பிராகாரமாய்க்கட்டி அதன் மத்தியில் ஸ்ரீரங்கநாதர் பள்ளிகொண்டிருப்பதாயும் அதுபோல், நமக்குள்ளிருக்கும் ஆறுசக்கரங்களை திருப்பதியிலுள்ள ஆறுமலைகளாகவும், ஏழாவது சக்கரமாகிய ஸஹஸ்ராரகமலமே ஏழாவதுமலை

யாய்க்காட்டி அதில் ஸ்ரீ வேங்கடேசப்பெருமாள் நிவசிப்பதாயும் இதுவரையில் சொல்லியிருந்தோம். மேற்சொல்லிய ஏழுசக்கரங்களுக்கும் அதிதேவதைகள் யார் என்பதையும், அவர்கள் எதை ஆஹாரமாய் உட்கொள்ளுகின்றார்களென்பதையும் இனி சொல்லப்போகின்றோம்.

1. குதஸ்தானம். இதற்கு மூலாதாரசக்கரமென்று சொல்லப்படும். இந்த மூலாதாரத்திற்கு அதிதேவதை யாரென்றால் கணபதி. கணபதி யென்றால் எல்லா கணங்களுக்கும் அதிபதியாய் இருக்கப்பட்டவராதலால் இவருக்குக் கணபதியென்னும் பெயருண்டாயிற்று. இதன்றியும், விக்நேஸ்வரன் என்றும் சொல்லுவார்கள். இவ்வாறு சொல்வதற்குக் காரணமென்னவென்றால், எந்த கார்யங்களைச் செய்தபோதிலும் முதல் விக்நேஸ்வரனைப் பூஜித்துப் பிறகு அக்கார்யங்களை நடத்திவருவாராகில் அது விக்னமாகாமல் நடைபெற்றுவருவதனால், இவருக்கு விக்நேஸ்வரன் என்னும் பெயர் உண்டாயிற்று.

சரீரகோவிலுக்கெதிரில் முதல் குதஸ்தானம் இருக்கின்றது. அந்த குதஸ்தானத்திற்கு மூலாதாரச்சக்கரமென்று சொல்லப்படும். கணபதியானவர் சரீரத்திலிருக்கும் ஆறுகடவுள்களுக்கும் முதற்கடவுளாய் மூலாதார சக்கரத்தினிடம் துவாரபாலகரைப்போல் காத்து நின்றிருக்கின்றார். குதத்தினிடமிருக்கும் கணபதி ரூபம் எப்படி இருக்கின்றதோ இனி அதைச் சொல்லுகின்றோம் கேளுங்கள்.

கணபதியின் சரீரம் பாதம்முதல் கழுத்துவரையில் மானிட சரீரம்போலவும், கண்டத்திற்குமேல் யானைசிரசைப்போன்ற உருவம்போல் குதத்திற்குள் ஏற்பட்டிருக்கின்றது. அந்த உருவத்தை மானவஜனங்களுக்கு யானை முகமுடைய சரீரமாய்க்காட்டி அந்த சரீரத்திற்கு விக்நேஸ்

வரன் என்னும் பெயர்வைத்து உலகத்தில் அவரைப் பூஜித்துவரும்படி பெரியோர்கள் ஏற்படுத்திவைத்தார்கள். ஆறுமுகக்கடவுளின் முகத்தில், முதல்முகம் கணபதியினது முகமென்று நினைத்துக்கொள்ளுங்கள். இந்த கணபதிக்கு காலை 6-மணிமுதல் 6-40, நிமிஷங்கள்வரையில் 600 (அறுநூறு) மூச்சுகள் நடக்கும். அப்போது, இந்த 600 (அறுநூறு) மூச்சுகளும் **'கணபதி'**யின் பசியைத் தணிக்கச் செய்து பிறகு, அந்த மூச்சானது,

2. சுவாதிஷ்ட்டான சக்கரத்தில் பிரவேசிக்கும். அதாவது பிரஜாபதி இருக்குமிடத்திற்குப் பிரவேசிக்கும். இந்தப்பிரஜாபதிக்கு அதிதேவதை யாரென்றால் பிரமதேவர். இவர் பிரஜாபதியிடமிருந்து எல்லா ஜீவராசிகளையும் உற்பத்தி செய்துகொண் டிருப்பவராதலால், இந்தப் பிரமதேவர் கடவுளில் சேர்ந்தவரல்ல. இவருக்குக் கோவிலுமில்லை; நரர்கள் இவரைப் பூஜிப்பதுமில்லை. ஆதலால், பிரமதேவர் முகத்தை சுப்ரமண்யருக் கிருக்கும் ஆறுமுகத்துடன் சேர்க்கவில்லை. இந்தப் பிகமதேவரது பசியைத் தணிப்பதற்காக மூச்சானது, காலை 6-மணி 41-நிமிஷங்கள் முதல் பகல், 1-மணி 20-நிமிஷங்கள் வரையில் 6,000 (ஆறாயிரம்) மூச்சுகள் நடக்கும். அப்பொழுது "பிரமதேவ"ருடைய பசி ஆறிவிடும். பிறகு அவ்விடமிருந்து,

2. மணிபூரக சக்கரத்தில் பிரவேசிக்கும். அதாவது, தொப்புள் இருக்குமிடத்திற்குப் பிரவேசிக்கும். தொப்புள் இருக்குமிடத்தில் ஜலம் இருக்கின்றது. மஹாவிஷ்ணுவானவர் எப்படிப்பட்டவரென்றால், மிகவும் குளிர்ச்சியுடன் இருக்கப்பட்டவர். ஆதலால், தொப்புள் இருக்கப்பட்ட இடத்தில் ஜலம் இருப்பதனால் அந்த ஜலத்தினிடம் மஹாவிஷ்ணுவானவர் அதிதேவதையா யிருக்கின்றார். இந்த மஹாவிஷ்ணுவின் முகம் ஆறுமுகக்கடவுளின் முகத்

துடன் சேர்க்கப்பட்டது. ஆகமுகம் இரண்டுமுகங்கள் ஏற்பட்டன. இம்மஹாவிஷ்ணுவின் பசியைத் தணிப்பதற்காக பகல், 1-மணி 21-நிமிஷங்கள் முதல் இரவு, 8-மணி வரையில் 6,000 (ஆறுயிரம்) மூச்சுகள் நடக்கும். அப்பொழுது 'மஹாவிஷ்ணு'வின் பசி ஆறிவிடும். பிறகு அவ்விடமிருந்து,

4. அநாஹத சக்கரத்தில் பிரவேசிக்கும். அதாவது, இருதயகமலத்தில் பிரவேசிக்கும். எல்லாவற்றையும் பஸ்மம் செய்யப்பட்ட ருத்திரன் இருதயகமலத்தில் அதிதேவதையாயிருக்கின்றார். இந்த ருத்திரர்முகம் ஆறுமுகக் கடவுளின் முகத்துடன் சேர்க்கப்பட்டது. ஆகமுகம் மூன்றுமுகங்கள் ஆறுமுகக்கடவுளுக்கு ஏற்பட்டன. இந்த ருத்திரன் பசியைத்தணிப்பதற்காக இரவு, 8-மணி 1-நிமிஷம் முதல் இரவு, 2-மணி 40-நிமிஷங்கள்வரையில், 6,000 (ஆறுயிரம்) மூச்சுகள் நடக்கும். அப்பொழுது 'ருத்ர'ருடைய பசி ஆறிவிடும். பிறகு, அவ்விடமிருந்து,

5. விசுத்தி சக்கரத்திற்கு அதாவது, நெஞ்சுக்குழிக்குப் பிரவேசிக்கும். இந்த நெஞ்சுக்குழிக்கு அதிதேவதை யாரென்றால் ஜீவன். இந்த ஜீவனது முகமும் ஆறுமுகக் கடவுளின் முகத்துடன் சேர்க்கப்பட்டது. ஆகமுகம் நான்குமுகங்கள் ஆறுமுகக்கடவுளுக்கு ஏற்பட்டன. இந்த ஜீவன் பசியைத்தணிப்பதற்காக இரவு, 2-மணி 41-நிமிஷங்கள்முதல் காலை 3-மணி 46-நிமிஷங்கள் வரையில், 1,000 (ஆயிரம்) மூச்சுகள் நடக்கும். அப்பொழுது 'ஜீவன்' பசி ஆறிவிடும். பிறகு, அவ்விடமிருந்து,

6. ஆஞ்ஞேய சக்கரத்திற்கு அதாவது, புருவமத்தியில் பிரவேசிக்கும். இந்தப் புருவத்திற்கு அதிதேவதை யாரென்றால் ஈஸ்வரன். இந்த ஈஸ்வரரது முகமும் ஆறுமுகக்கடவுளின் முகத்துடன்சேர்க்கப்பட்டது. ஆகமுகம்

ஐந்துமுகங்கள் ஆறுமுகக்கடவுளுக்கு ஏற்பட்டன. இந்த ஈஸ்வரன் பசியைத் தணிப்பதற்காக இரவு 3-மணி 47-நிமிஷங்கள் முதல் காலை 4-மணி 53-நிமிஷங்கள்வரையில், 1,000 (ஆயிரம்) மூச்சுகள் நடக்கும். அப்பொழுது 'ஈஸ்வர'ருடைய, பசி ஆறிவிடும். பிறகு,

7. ஸஹஸ்ரார சக்கரத்திற்கு அதாவது, பிரம்ம கபாலத்திற்குப் பிரவேசிக்கும். பிரம்மகபாலத்திற்கு அதிதேவதை பரமாத்மா. இந்தப் பரமாத்மாவின் முகமும் ஆறுமுகக்கடவுளின் முகத்துடன்சேர்க்கப்பட்டது. மேற்சொல்லிய தேவதைகளினுடைய முகங்கள் ஆறும் ஒன்றாய்ச்சேர்ந்து ஒரேமுகமாய்விட்டபடியால் அவருக்கு ஆறுமுகக் கடவுளென்றும், இவ்வாறுமுகங்களும் சுயம்பிரகாசமாயிருப்பதனால் சுப்ர மண்யனென்றும், ஆறுலக்கத்திற்கு சமுஸ்க்ருதபாஷையில் ஸஷ்டியென்று சொல்லப்படும். ஆதலால், ஆறுமுகக்கடவுளுக்கு ஷண்முகனென்றும் பெயருண்டாயிற்று.

ஆறுமுகமுடைய கடவுளின் முகத்திற்கு முதல்முகம் விநாயகரது முகமென்று இதுவரையில் முன்னமே சொல்லியிருக்கின்றோம். இதனாலும், எல்லா கடவுளுக்கும் முதல் கடவுளாய் குதத்தினிடம் துவாரபாலகரைப்போல் நின்றிருப்பதனால், இவ்விநாயகரை சுப்ரமண்யருக்குத் தமயனென்று சொல்லுவார்கள். பெரியோர்கள் இந்த ரஹஸ்யத்தை வெளியிடாமல், விநாயகரை சுப்ரமண்யர் தமயன் என்று சொல்லிவிட்டபடியால் உலகத்திலுள்ள மானவஜனங்களெல்லோரும் விநாயகரை சுப்ரமண்யர் தமயன் என்று சொல்லுவார்கள். ஆதலால், விநாயகருடைய ரஹஸ்யார்த்தமும், ஆறுமுகக்கடவுளின் ரஹஸ்யார்த்தமும் இப்பொழுது உங்களுக்கு இந்நூலில் வெளியிட்டுச் சொன்னோம். மூலாதாரமாகிய குதத்திற்குள் விக்நேஸ்

வரன் உருவம்போல் இருக்கின்றது. அந்த உருவத்தை யெடுத்துக் கற்களில்செதுக்கி, அதைக்கும்பிடும்படி பெரியோர்கள் ஏற்படுத்திவைத்தார்கள். பிறகு,

பிரம்மகபாலத்திலிருக்கும் பரமாத்மாவின் பசியைத் தணிப்பதற்காககாலை 4-மணி 54-நிமிஷங்கள்முதல் 6-மணி வரையில் 1,000 (ஆயிரம்) மூச்சுகள் நடக்கும். அப்பொழுது 'பரமாத்மா'வின் பசி ஆறிவிடும். பரமாத்மாவின் பசி ஆறியபிறகு, குதத்தினிடமிருக்கும் கணபதியினது பசியைத் தணிக்கச்செய்வதற்காக மூச்சானது மறுபடியும் மறுநாட்காலை 6-மணிக்கு குதத்தினிடமிருக்கும் கணபதியினிடம்வரும். இதற்கு சுருதிப்பிரமாணம் என்னவென்றால்,

"షట్ శతం గణనాథస్య షట్ సహస్రం ప్రజాపతే
షట్ సహస్రం మహావిష్ణో షట్ సహస్రం మహేశ్వరః
సహస్రంజీవరూపస్య సహస్రం ఈశ్వరాత్మనః
సహస్రం గురురూపస్య ఏకంబుధ్యా ప్రకల్పయేత్."

"ஷட்ஸதம் கணநாதஸ்ய ஷட்ஸஹஸ்ரம் ப்ரஜாபதே
ஷட்ஸஹஸ்ரம் மஹாவிஷ்ணோ ஷட்ஸஹஸ்ரம் மஹேஸ்வர:
ஸஹஸ்ரம் ஜீவரூபஸ்ய ஸஹஸ்ரம் ஈஸ்வராத்மந:
ஸஹஸ்ரம் குருரூபஸ்ய ஏகம்புத்யா ப்ரகல்பயேத்"

மூச்சானது தினந்தோறும் காலை 6-மணிமுதல், மறுநாள்காலை 6-மணிவரையில் இருபத்துநான்கு மணிநேரத்திற்குள் இருபத்து ஓராயிரத்து அறுநூறு மூச்சுகள் நடந்து, சரீரத்தில் இருக்கப்பட்ட ஏழுசக்கரங்களுக்கும் அதிதேவதைகளாகிய கணபதி, பிரமன், விஷ்ணு, ருத்திரன், ஜீவன், ஈஸ்வரன், பரமாத்மா இவ்வேழுபேர்களின் பசியைத் தணிக்கச்செய்துகொண்டும், ஜீவர்களின் ஆயுற்பாகத்தை மூச்சானது காட்டிக்கொண்டும், தினந்தோறும்

நடந்து வருகின்றன. இதுவிஷயம் இன்னும் விரிவாய்த் தெரிந்துகொள்ள வேண்டுமானால் "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்ய" நூலை வாசித்துத் தெரிந்துகொள்ளலாம்.

பரமாத்மாவாகிய கடவுள் நமது சரீர இருதயகமலத்தில் நிவசித்துக்கொண்டிருக்கின்றார் என்பதை இனி சொல்லப்போகின்றோம் கேளுங்கள்.

பரமாத்மாவாகிய கடவுள் சகல ஜீவராசிகளின் சரீர இருதயகமலத்தில் நிவாசித்துக் கொண்டிருப்பது.

மாமிசத்துடன் சேர்ந்து நரம்புகளுடன்கூடி சிகப்பு வெண்மை நிறமுடைய தாமரைக் கமலம்போன்ற கமலமொன்று இருதயத்தில் (மார்பினிடம்) தலைகீழாய்த் தொங்கிக்கொண்டிருக்கும். அந்தக் கமலத்தில் மிகவும் சிறிய ரந்திர மொன்றுண்டு. அந்த ரந்திரம் மத்தியில் ஒரு அங்குலப்பிரமாணம் துவாரமுண்டு அந்தத் துவாரம் நிறையவெளி அதாவது, ஆகாயம் இருக்கின்றது. அந்த ஆகாயத்தில் சமுத்திரம்போல் ஜலம் நிறைந்திருக்கும். அந்த ஜல மத்தியில் பரமாத்மாவானவர் எவ்வாறு நிவசித்துக்கொண் டிருக்கின்றாரென்றால், நெல்லின் நுனியிலுள்ள சிறிய முள்ளைப்போலவும், கறுத்த மேகங்களின் மத்தியில் தோன்றும் மின்னலைப்போலவும், அதற்குச் சமானமானது மற்றொன்று இல்லாததாயும், பச்சை நிறமுடைய காந்தியுடையதாயும் அதற்குச் சமானமானது வேறொன்று இல்லாததாயும் இருந்து, சகல ஜீவராசிகளின் இருதயகமலத்தில் நிவசித்துக்கொண்டிருக்கின்

ருர். இவ்வாருக சகல ஜீவராசிகளின் இருதயகமலத்தி லிருந்துகொண்டு அந்தந்த ஜீவராசிகள் புசிக்கும் ஆஹா ரங்களை ஜீர்ணிக்கும்படிச் செய்விக்கும் என்று, "தைத்ரீ யோபநிஷத்திலும், சுபாலோபநிஷத்திலும்" சொல்லப் பட்டிருக்கின்றது. இதற்கு, ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம் 15-சுலோகம் 14-பிரமாணம் என்னவென்ருல்,

"அஹம்வைஸ்யா நரோபூத்வா ப்ராணிநாம் தேஹமாஸ்ரிதঃ
ப்ராணுபாந ஸமாயுக்தঃ பசாம்யந்நம் சதுர்விதம்."

நான் பிராணிகளினுடைய சரீரத்தில் அக்நி சொரூப மாயிருந்து அந்த அக்நியை ஜொலிக்கச் செய்வதற்காக பிராண, அபான வாயுக்களுடன்கூடி அவர்கள் சாப்பிடும் சாதம், பலகாரங்கள், லேக்யம் முதலாகிய ஆஹாரங்களை ஜீர்ணிக்கும்படிச் செய்வேன். இதன்றியும் இன்னும் எப் படி இருப்பேனென்ருல், கீதை அத்யாயம், 15-சுலோகம் 15-பிரமாணம்,

"ஸர்வஸ்யசாஹம் ஹ்ருதிஸந்நிவிஷ்ணோ மத்தஸ்ம்ருதிர்
ஞான மபோஹநஞ்ச
வேதைஸ்ச்சஸர்வை ரஹமேவவேத்யோ வேதாந்தக்ருத்
வேதவி தேவசாஹம்."

பிரம்மாதி தேவர்கள் முதல் சகல பிராணிகளினுடைய இருதயகமலத்தில் நான் ஆத்மாவாய் நிவசித்துக்கொண் டிருக்கின்றேன். என்னுலேயே நினைப்பு மறப்புகள் உண் டாகின்றன. நான்கு வேதங்களையும் சிருஷ்டி செய்தவன் நானே. இதன்றியும் எல்லா வேதங்களையும் போதிக்கப் பட்ட குருவும் நானுகவே இருக்கின்றேன். இப்படியாயிருக் கும் என்னை ஸ்திரீ புருஷர்களுக்கிருக்கும் ஆசாபாசங்க ளும், காமக்குரோதாதிகளும் மூடிக்கொண்டிருப்பதனுல், நான் அவர்களுக்குக் காணப்படுவதில்லை. எல்லா ஆசை

களையும் ஒழித்த மஹானுபாவர்களுக்கே நான் காணப் படுவேன். ஆதலால்,

"ஹ்ருதாகாஸே சிதாபாநு ஸதாபாஸதிபாஸதே
நசோதேதி நாஸ்திமேதி கதாஸந்த்யா முபாஸ்மஹோ."

இருதயகமல ஆகாசத்தில் சிதாபாசன் என்றால், 'சித்' என்னும் பரமாத்மாவாகிய கடவுள் நிவசித்துக் கொண்டு பகலென்றும், இரவென்றும் இராமல், எப்பொழுதும் ஒரே பிரகாசமாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கும் ஹரியை தரிசித்த யோகிகளுக்குச் சந்தியா வந்தனுதி முதலாகிய கர்ம கிரிகைகளில் யாதொரு பிரயோஜனமும் இல்லை. இவைகளை யெல்லாம் தெரிந்துகொள்ளாதவர்களே சந்தியா வந்தனுதி முதலாகிய கர்ம கிரிகைகளைச் செய்துவரவேண்டும்.

சகல ஜீவராசிகளின் இருதயகமலத்தில் நிவசித்துக் கொண்டிருக்கும் ஆத்மாவானவர் எப்பொழுதும் ஜலத்துடன் சம்பந்தப்பட் டிருப்பாரேயொழிய ஜல சம்பந்தமில்லாமலிரார். ஆதலால், இந்த ஆத்மாவிற்கு நாராயணன் என்னும் பெயருண்டாயிற்று. அதாவகி, 'நார' என்றால் ஜலம். 'அயன' என்றால் ஸ்தானம். என்றால், ஜலத்திற்கு ஸ்தானமாயிருக்கப்பட்டவ ராதலால், அந்த ஆத்மாவிற்கு நாராயணன் என்னும் நாமமுண்டாயிற்று. ஆத்மா இருதயகமலத்திலிருக்கும் ஜலத்துடன் சம்பந்தப்பட்டிருக்கின்றதென்பதற்குச் சில திருஷ்டாந்தங்களைச் சொல்லுகின்றோம் கேளுங்கள்.

எல்லோருக்கும் வாயில் எப்பொழுதும் நாக்கின்கீழ் ஜலம் ஊற்றைப்போல் சுரந்துகொண்டேயிருக்கும். அந்த ஊற்று ஜலத்திற்கு எச்சிலென்று சொல்லுவார்கள். இந்த எச்சில் ஊற்று எவ்விடமிருந்து சுரந்து வாய்க்குள் வந்து

அந்த எச்சில் ஊற்றை விழுங்குகின்றேமோ அதை இனி சொல்லப்போகின்றேம் கேளுங்கள்.

நமது மார்பினிடமிருக்கும் இருதயகமலத்திலுள்ள ஆகாயத்தில் ஒரு மயிரிழை பிரமாணமும் குறையாமல் சமுத்திரம்போல் ஜலம் பூர்த்தியாய் நிறைந்திருக்கும், அந்த ஜலமத்தியில் ஆத்மாவாகிய கடவுள் நிவசித்துக் கொண்டிருக்கின்றார். மேற்படி ஆத்மாவாகிய கடவுள் நிவசித்துக்கொண்டிருக்கும் ஜலத்திலிருந்து ஊற்று சுரந்து சிறிய நாடியின்வழியாய் மேலே ஏறி நாக்கின்கீழ் சுரந்து, வாய்க்குள் எச்சிலாய் வரும். பிறகு, அந்த எச்சிலை விழுங்குவார்கள். எச்சிலை விழுங்கிக்கொண்டே வர வர இருதயகமலத்திலிருக்கும் ஜலத்திலிருந்து ஊற்றானது அதிகமாய்ச் சுரந்துகொண்டேவரும். இவ்வூற்று சுரப்பது எப்படியிருக்கின்றதென்றால்,

ஆற்றில் ஊற்றெடுத்து அதில் சுரந்துவரும் ஜலத்தைக் கையால் இறைத்துக்கொண்டேவந்தால் நான்கு பக்கங்களிலுமிருந்து ஊற்றுஜலம் அதிவேகமாய்ச் சுரந்து கொண்டே வரும். ஜலம் இறைப்பதை நிறுத்திவிட்டால் ஊற்றுஜலம் சுரக்காமல் நின்றுவிடும். மறுபடியும் இறைத்தால் மறுபடியும் ஊற்றுஜலம் சுரக்கும். அதுபோல் எச்சிலை விழுங்கிக்கொண்டேயிருந்தால், மார்பினிடமுள்ள கமலத்திலிருக்கும் ஜலத்திலிருந்து ஊற்றானது சுரந்து வாய்க்குள் வந்துகொண்டேயிருக்கும். இரவில் தூங்கும் பொழுது எச்சிலை விழுங்குவதில்லை. அக்காலத்தில் இருதய கமலத்திலிருந்து ஊற்று சுரந்து எச்சிலாய் வாய்க்குள் வருவதில்லை. மறுபடியும் காலையில் எழுந்தவுடன் எச்சிலை விழுங்குவார்கள். அப்பொழுது மறுபடியும் இருதயகமலத்திலிருந்த ஊற்று சுரந்துகொண்டேவரும்.

ஆத்மாவாகிய கடவுள் நிவசித்துக்கொண் டிருக்கும் இருதயகமலத்திலுள்ள ஜலத்திலிருந்து ஊற்றுன து சுரந்து வாய்க்குள் வருவதனுல் அதை எச்சிலென்று சொல்லலா காது. அந்த எச்சிலே தேவாமிருதமென்றே சொல்லலாம். இதற்குச் சில திருஷ்டாந்தங்களைச் சொல்லுகின்ருேம். கேளுங்கள்.

மனிதர்களின் சரீரத்தின்மேல் நமுட்டுச்சிரங்கு, கட்டிகள், அநேகவிதங்களாகிய படைகள், தேம்பல்கள் இன்னும் பலவித வியாதிகள் வருவதுண்டு. ஆனுல், வாய்க் குள் நாக்கிலாவது உட் தாடையிலாவது, தொண்டைக் குள்ளாவது சிரங்குகள், கட்டிகள் முதலாகிய எந்தவியாதி களும் வருவதில்லை. எப்பொழுதாகிலும் ஒவ்வொரு சமயங் களில் ரத்தம்வரும்படி நாக்கைக் கடித்துக்கொண்ட போதிலும் எந்த மருந்துகளும் போடாமலேயே நாக்கின் ரணம் உடனே ஆறிவிடும்.

வாய்க்குள் எந்த புண்ணுகளும், ரணங்களும் வராம லிருப்பதற்குக் காரணம் என்னவென்ருல், இருதயகமலத் திலிருக்கும் ஜலத்தில் பரமாத்மாவானவர் நிவசித்துக் கொண்டிருப்பதனுல் அந்தப் பரமாத்மாவின் சம்பந்த மான ஜலம் நாக்கின்கீழ் ஊற்ருய்ச் சுரந்து, வாய்க்குள் எச்சிலாய் வருவதனுல் அப்படிப்பட்ட வாய்க்குள் எந்த புண்ணுகளும், ரணங்களும் உண்டாகவேமாட்டா.

இதன்றியும் நாய்கள், பூனைகள், புலிகள், எருதுகள் மற்றுமுள்ள மிருகங்களின் சரீரத்தின்மேல் ரணம் உண் டானுல் அந்த ரணத்தை அவைகள் நாக்கினுல் நக்கிக் கொண்டேவரும். அவ்வாறு நக்குவதனுல் அந்தரணம் தானுகவே ஆறிவிடும். இவ்வாறு ஆறுவதற்குக் காரண மென்னவென்ருல், பரமாத்மா நிவசித்துக்கொண்டிருக்

கும் ஜலத்திலிருந்து உண்டாகும் எச்சில் ஊற்று ஜலத்தால் நக்குவதனல் எல்லாரணங்களும் ஆறிவிடும்.

எல்லா ஜீவராசிகளின் இருதயகமலத்திலிருக்கும் ஜலத்தில் ஆத்மாவானவர் நிவசித்துக் கொண்டிருந்து, பிறகு அந்த சரீரத்தைவிட்டுக் கிளம்பும்பொழுது இருதயகமலத்திலிருக்கும் ஜலமானது குறையும். இருதயகமலத்திலிருக்கும் ஜலம் மயிரளவு பிரமாணம் குறைந்தபோதிலும்சரி, நாக்கின்கீழ் சுரந்துகொண்டிருந்த ஊற்ருனது சுரக்காமல் நின்றுவிடும். பிராணன் போகப்பட்டவர்களுக்கெல்லாம் வாயில் ஜலமிராது. ஏனென்ருல், ஆத்மாவாகிய கடவுள் ஜலத்துடன் சம்பந்தப்பட்டிருப்பதனுல், அப்படிப்பட்ட ஆத்மா சரீரத்தைவிட்டுக் கிளம்பும்பொழுது, இருதயகமலத்திலிருக்கும் ஜலம் குறையும். ஜலம் குறைந்தவுடன் நாக்கின்கீழ் சுரந்துகொண்டிருந்த ஊற்றிற்கு ஜலம் எட்டாமல் போகும். நாக்கின்கீழ் ஜலம் எட்டாமல் போவதனுல் அப்படிப்பட்டசமயத்தில் வாயில் சிறிதேனும் ஜலமிராது. பிராணன் போகப்பட்டவர்களின் வாயில் விரலைவைத்துத் தடவிப்பார்த்தால், கொஞ்சமேனும் ஜலமில்லாமல் வாயெல்லாம் வரண்டு, நாக்கு முள்ளுபோல் காணப்பட்டு மிகவும் கடினமாயும், பிருசாயும் இருக்கும். பிராணன் போகப்பட்டவர்களின் நாக்கைத் தொட்டுப்பார்த்து, நா வரண்டுபோயிற்று நாக்கில் ஜலமில்லையென்றும், இனிபிழைக்கமாட்டானென்றும் இது ஒரு குறியாய்ச் சொல்லுவார்களேயொழிய, இதன் ரஹஸ்யார்த்தமெல்லாம் அவர்களுக்குத்தெரியவராது. பிராணன் போகும்பொழுது இருதயகமலத்திலிருக்கும் ஜலமெல்லாம் வற்றிக்கொண்டேவந்து கடைசியில் பிராணன் சரீரத்தை விட்டுக் கிளம்பி மற்ருெரு தாயின்கர்ப்பத்தில் புதியதாய்ச் சிருஷ்டிசெய்து வைத்திருக்கும் சிசுவினுடைய இருதய

கமலத்திலுள்ள ஜலத்தில் போய்ச்சேரும். உயிருடனிருக்கும் ஜீவர்களுக்குமாத்திரம் இருதயகமலத்தில் ஜலமிருக்கும். பிராணன் சரீரத்தைவிட்டுச் சென்றுவிட்டால இருதயகமலத்தில் ஜலமிராது. இருதயகமலத்தில் ஜலமிருப்பதைக் கண்டுபிடிக்க ஒருவராலும் சாத்தியப்படமாட்டா. பிராணன் சரீரத்தைவிட்டுப் போகும்பொழுது எப்படி போய்விடுகின்றதோ அதுவிஷயம் இனி சொல்லப்போகின்றோம் கேளுங்கள்.

பாதப் பெருவிரல்முதல் உச்சிவரையில் சரீரமெல்லாம் பிராணன் நிறைந்திருக்கின்றது. மரணகாலத்தில் அவரவர்களின் கர்மத்திற்குத் தக்கபடி வரவேண்டிய வியாதிகள்வந்து, படுத்த படுக்கையிலேயே இருந்து, பிராணனை விடும்பொழுது அவனுக்கு ஆயுற்பாகமாயிருந்த மூச்சுகளெல்லாம் செலவழிந்துபோய்ப் பிறகு மிகுதியாயிருக்கும் சொல்ப மூச்சுகளெல்லாம் கடைசியில் வெளிவரும்பொழுது பெருமூச்சாய் வரும். அப்பொழுது பிராணன் பாதப் பெருவிரலில் இருந்து விடுபட்டு மேலே முழங்கால்வரையில் ஏறிவரும். அச்சமயத்தில் முழங்கால் வரையில் தொட்டுப்பார்த்தால் மிகவும் கடினமாயும், பிருசாயும், சீதளமாயும் இருக்கும். அப்போது முழங்கால் வரையில் ஒன்றும் சத்தில்லாத பிணமாய்விட்டதென்று தெரிந்துகொள்ளுங்கள். அச்சமயம் பாதப் பெருவிரல் முதல் முழங்கால்வரையில் அறுத்தும், துண்டு துண்டாய் வெட்டிப் பார்த்தபோதிலும் முழங்கால்வரையில் பிராணனில்லாத கட்டையாயும், பிணமாயும் போனபடியால் அதுவரையில் ரத்தமும் இராது. நோயும் இராது. இதுபோல் பிராணன் சிறுகச்சிறுக பாதப் பெருவிரல்முதல், முழங்கால் தொடை இடை மார்பு உச்சி நெற்றிவரையில் விடுபட்டுக்கொண்டேவந்து, கடைசியில் மூக்குத்துவாரங்க

ளின்வழியாய்ச் சரீரத்தைவிட்டு ஓடிவிடும். பிறகு மூக்குத் துவாரத்தில் மூச்சு ஆடாமல் நின்றுவிடும். மூச்சானது நின்றவுடன் செத்துபோனான் என்று சொல்லுவார்கள். செத்து என்பது எதிலிருந்து உண்டாயிற்றோ அதைச் சொல்லுகின்றோம்கேளுங்கள். சரீரத்தில் இருந்த சத்தெல்லாம் கிளம்பி வெளியே சென்றுவிட்டபடியால் சத்து என்னும் சப்தத்திலிருந்து செத்துப்போனான் என்னும் சப்தமுண்டாயிற்று. இப்படியாய் வீட்டிலிருந்து சாகாமல் இருந்தாப்போலிருந்து அகஸ்மாத்தாய் ரெயிலின் கீழும், மோட்டார்காரின் கீழும், பஸ்ஸின் கீழும், வண்டியின் கீழும், குளத்திலும் விழுந்து சாகின்றார்களல்லவா? அது எதனால் அவ்வாறாக சாகின்றார்களோ அவைகளையெல்லாம் "தத்துவ பரிசோதனை அன்னதானபலன்" என்னும் நூலில் எழுதப்பட்டிருக்கின்றது. அந்நூலை வரவழைத்து வாசித்துப்பார்த்து எல்லா ரகஸ்யங்களும் தெரிந்து கொள்ளுங்கள்.

ஆத்மாவாகிய கடவுள் சகல ஜீவராசிகளின் இருதய கமலத்தில் எவ்வாறாக நிவசித்துக்கொண் டிருக்கின்றாரோ இனி அதைச் சொல்லுகின்றோம் கேளுங்கள்.

"புஷ்ப்பமத்யே யதாகாந்தா பயோமத்யே யாதாக்ருதம்
திலமத்யே யதாதைலம் பாஷாணே ஷ்விவகாஞ்சநம்
ஹ்ருதிஸ்த்தாநேஸ்த்திதம்பத்மம்தஸ்யவக்த்ர மதோமுகம்
ஊர்த்வநாள மதோபிந்து தஸ்யமத்தே ஸ்த்திதம் ப்ரஹ்ம."

என்றால், புஷ்ப்பமத்தியிலிருக்கும் வாசனையைப் போலவும், பால்மத்தியிலிருக்கும் நெய்யைப்போலவும், எள்மத்தியிலிருக்கும் எண்ணெயைப்போலவும், கல்மத்தியிலிருக்கும் தங்கம்போலவும் பரமாத்மாவானவர் இருதய கமலத்திலிருக்கும் ஜலமத்தியில் நிவசித்துக்கொண்டிருக்கின்றார்.

இந்த இருதயகமலம் எவ்வாறிருக்கின்றதென்றால் லிங்கவடிவமாய் இருக்கின்றது. இந்த லிங்கத்திற்குள் ஆத்மாவானவர் நிவசித்துக்கொண்டிருப்பதனால் இதற்கு ஆத்மலிங்கமென்று சொல்லப்படும். ஆதலால், லிங்கதாரிகளெல்லோரும் தமது கழுத்தில்கட்டும் லிங்கங்களை எவ்வாறு கட்டவேண்டுமோ அதை இனி சொல்லுகின்றோம் கேளுங்கள்.

தங்கத்தினாலாவது, பொன்னினாலாவது, அல்லது வெள்ளியினாலாவது ஒரு கவசம்செய்து, அந்தந்த கவசத்திற்குள், ஆவுடையாருடன் இருக்கும் ஒரு சிறிய லிங்கத்தைவைத்து, அந்த லிங்கம் எப்பொழுதும் இருதயகமலத்திலிருக்கும் ஆத்மலிங்கத்தில் பட்டுக்கொண்டிருக்கும்படி இரண்டு ஸ்தனங்களுக்கும் மத்தியில் கட்டவேண்டுமேயொழிய, மலமூத்திரங்கள் தங்கியிருக்கப்பட்ட வயிறுவரையில் லிங்கம் தொங்கிக்கொண்டிருக்கும்படிக் கட்டலாகாது.

சில லிங்கதாரிகள் லிங்கத்தைச் சிறிய பட்டுகுட்டையால் சுற்றி வலது நடுக்கையில் கட்டிக்கொள்வார்கள். லிங்கம் கட்டவேண்டிய ஐதீகம் இவர்களுக்குத் தெரியாததனால் கையில் கட்டிக்கொள்ளுகின்றார்கள். இவ்வாறாக லிங்கத்தைக் கட்டிக்கொள்வது அறியாத்தன்மையேயாம். இந்நூலை வாசிக்கும் லிங்கதாரிகளெல்லோரும் இனிமேல் என்னசெய்யவேண்டுமென்றால், லிங்கமிருக்கும் கவசத்தை இரண்டு ஸ்தனங்களுக்கு மத்தியிலிருக்கும்படித் தொங்கக் கட்டவேண்டும். லிங்கதாரிகள் கழுத்தில் லிங்கம் கட்டவேண்டிய ஐதீகம் இதுவேயாம். இனி மனதின் சொரூபத்தைத் தெரிவித்து அம்மனதை நிறுத்த உபதேசிக்கின்றார்.

மனதின் சொரூபத்தைத் தெரிவித்து மனதை நிறுத்த உபதேசிக்கின்றார்.

ஐயா!

எல்லா ஜீவராசிகளின் உந்திக்கமலத்திலிருந்து அதாவது, தொப்புளிலிருந்து மூச்சானது புறப்பட்டு மூக்குத் துவாரங்களின் வழியாய் வெளியில் வருகின்றது. அம்மூச்சுடன்கூடவே மனது யென்று சொல்லப்பட்ட எண்ணங்களும் பிறந்து பிறகு, மூச்சும் மனதுயென்று சொல்லப்பட்ட எண்ணங்கள் இவ்விரண்டும் வவளியில்வந்து இறந்துவிடும். இவ்வாறாக ஒவ்வொரு மூச்சிலும் ஒவ்வொரு எண்ணங்கள் பிறந்துபிறந்து இறந்துகொண்டே வருவதனால் நாம் தினந்தோறும் நூற்றுக்கணக்காய் எண்ணும் எண்ணங்களெல்லாம் ஞாபகம் இராது. ஆனால், இந்த எண்ணங்களில் எது முக்யமான விஷயமோ அதில் இரண்டு அல்லது, மூன்று விஷயங்கள்மாத்திரமே ஞாபகம் இருக்கும். அதற்குமேல் ஞாபகம் வைக்கவேண்டுமானால் டைரி (Diary)யில் குறிப்பு யெழுதி வைத்துப் பார்த்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு மூச்சிலும் ஒவ்வொரு எண்ணங்கள் உதித்து உடனுக்குடனே நசித்துவிடுவது எப்படியிருக்கின்ற தென்றால், ஜலத்திலிருந்து நீர்க்குமிழிகளானது அடிக்கடிப் பிறந்து உடனுக்குடனே எப்படி நசித்துப் போகின்றதுகளோ அதுபோல், நாபியிலிருந்து புறப்பட்டு வரும் மூச்சுடன்கூடவே மனதும் புறப்பட்டு, கடைசியில் மூச்சும், மனதும் இவ்விரண்டும் வெளியில் வந்து இறந்துவிடும். இதன்றியும் இம்மனம் இன்னும் எப்படிப்பட்டதென்றால், பக்ஷிகள் எவ்வளவு சீக்கிரமாய் சிறகுகளை ஆட்டிக்கொண்டே போகின்றதுகளோ அதுபோலவும், காற்

றுக்காலங்களில் சமுத்திரத்தில் அலைகள் ஒன்றின்பின் ஒன்ருய் அதிசீக்கிரமாய்க் கிளம்பி அவ்வலைகளிலிருந்து நுரைகள், திவலைகள், குமிழிகள் முதலானவைகள் அநேகம் பிறந்துபிறந்து அவைகளெல்லாம் அலையில் அடங்கி பிறகு அவ்வலைகள் சமுத்திரத்தில் மறைந்துவிடும். அது போல், மூச்சு என்னும் காற்றில் மனது என்னும் அலைகளும், அம்மனது என்னும் அலையிலிருந்து எண்ணங்களென்னும் குமிழிகளும் அநேகம் பிறந்து பிறந்து பிறகு, எண்ணங்களென்னும் குமிழிகள் மனது என்னும் அலையிலடங்கி, அம்மனது என்னும் அலை மூச்சு என்னும் காற்றில் அடங்கிப் பிறகு மூச்சும், எண்ணங்களென்னும் மனமும் இவ்விரண்டும் வெளியில்வந்து இறந்துவிடும். இம்மனமானது, ஓர் விஷயத்தை நினைத்துப் பிறகு மற்றொரு விஷயத்தை நினைப்பதற்காகத் தாவி அதிசீக்கிரமாய் ஓடும். இவ்வாருக அதிசீக்கிரமாய்த் தாவி பக்ஷிகளைப்போல் ஓடிக்கொண்டிருக்கும் மனதை ஓடவிடாமல் நிறுத்த உபாயம் சொல்லப்போகின்ருேம். அதுபோல் செய்வீர்களாகில் அப்போது உங்கள் மன்மானது வெளி வியவகாரங்களில் எங்கும் ஓடாமல் நின்றுவிடும். இப்படிக்குச்செய்யாமல் அம்மனதின் இஷ்டம்போல் விட்டுவிடுவீர்களாகில், அம்மனம் சாந்தியை யடைந்து சும்மாயிராது. மனதை வெளி வியவகாரங்களில் ஓடவிடாமல்செய்ய இனி உபாயம் சொல்லப்போகின்ருேமாதலால், அதுபோல் செய்வீர்களாகில் உங்கள்மனம் சாந்தமாகும். அப்படிக்குச் செய்யாமல் அம்மனதின் இஷ்டம்போல் விட்டுவிடுவீர்களாகில் அம்மனம் சாந்தியை அடையமாட்டாது. மனதை வெளி வியவகாரங்களில் ஓடவிடாமல் செய்ய இனி உபாயம் சொல்லப்போகின்ருேமாதலால், அதுபோல் எல்லா ஸ்திரீபுருஷர்களும் செய்துவரவேண்டும்.

அதாவது, எந்த நினைவு முதல் உண்டாகின்றதோ அந்நினைவின் முதல் எழுத்தை வெளிவரவிடாமல் அடக்கி விடவேண்டும். நினைவின் முதல் எழுத்தை அடக்கிவிட்டால், அப்போது அதன்பிறகு வரும் நினைவுகளெல்லாம் வெளிவராமல் நின்றுவிடும். இந்த நினைவுகளுக்கே எண்ணங்களென்று சொல்லப்படும். இந்த எண்ணங்களையே மனது என்று சொல்லுவார்கள். அப்படிப்பட்ட மனம் இறந்தால், அவ்விடம் ஒன்றுமில்லாத வெறும் பாழ் வெளி இருக்குமே யொழிய மற்றொன்றுமிராது. இதற்கு மஹோபநிஷத்துபிரமாணம் சொல்லுகின்றோம் கேளுங்கள்.

"தேஸா ஸோந்தரம் ப்ராப்தௌ ஸம்விதோ மத்யமேவ யத்
நிமேஷேண சிதாகாஸம் தத்வ்ருத்தி முனிபுங்கவா."

"ஒருபொருளைநீத்து ஒருபொருளைப்பற்றி
இருபொரு ளும்போக்கி
இடையேயொரு பொருளுமற்றநிலையாதோ
அதுவே உனதுநிலை."

என்றால், மனமானது ஓரிடமிருந்து மற்றோரிடத்திற்கு ஓடிக்கொண்டிருக்கும். அப்படி ஓரிடமிருந்து மற்றோரிடத்திற்கு ஓடும்பொழுது இவ்விரண்டின் மத்தியில் இமைக்கொட்டுமவ்வளவு நேரம் எது வெளியாயிருக்கின்றதோ அந்தவெளியே சிதாகாசமென்று சொல்லப்படும். சிதாகாசமென்றால், சிறிய ஆகாசம். இந்த சிதாகாசமே 'நீ' அதுவே 'நான்' அதுவே 'ஆத்மா'. அந்த ஆத்மாவே 'பிரம்மம்' ஆதலால், எப்பொழுதும் சிதாகாசமாகவே இருக்க சாதனம் செய்துவந்தால் அந்த சாதனையினால் மனம் வசமாகும். மனம் வசமான பிறகு, அதனுக்கு உலகத்தில் ஆகவேண்டியது ஒன்றுமேயில்லை. அப்போது அவன் மனதை ஜயித்தவனாகின்றான்.

மூச்சிலேயே மனது என்று சொல்லப்பட்ட எண்ணங்

கள் உண்டாகின்றனவென்று இதுவரையில் முன்பே சொல்லியிருக்கின்றோம். அப்படிப்பட்ட மூச்சை உள்ளுக்கிழுத்து அதை வெளிவிடாமல் நிறுத்தி ஏதாகிலும் ஓர் எண்ணத்தை, நினைத்துப்பாருங்கள். அப்போது எந்த நினைவும் உங்களுக்கு உண்டாகவேமாட்டா. மூச்சை உள்ளுக்கிழுத்து நிறுத்தியபின் நினைவுகள் ஏன் உண்டாவதில்லையென்றால் மூச்சு என்னும் காற்றும், நினைவு என்று சொல்லப்பட்ட மனதின் காற்றும் ஒரேரூபமாயிருப்பதனால் மூச்சு நின்றவிடத்தில் மனம் நிற்கும். மனம் நின்றவிடத்தில் மூச்சுநிற்கும். மூச்சும் மனமும் ஒரே உருவமாயிருப்பதனால் "மனமனமெங்குண்டு வாயுவங்குண்டு. மனமனமெங்கில்லை வாயுவங்கில்லை" என்று முன்னுள்ள பெரியோர்கள் சொல்லியிருக்கின்றார்கள். இம்மனமானது† வாசியோகசாதனையினால் வசமாகுமேயொழிய மற்ற எந்தக் கடவுளின் பூஜைகளினாலும், மந்திர ஜபங்களினாலும் வசமாகமாட்டாது. மிகவும் கீழ்ப்படியிலிருக்கப்பட்ட சாதுக்களும், பண்டிதர்களும், படிப்பாளிகளும் என்னசொல்லுவார்களென்றால், வாசியோக சாதனையில்லாமலே பக்தியினாலும், மந்திர ஜபங்களினாலும் ஞான மடையலாமென்று சொல்லுவார்கள். இவர்கள் சொல்வது எப்படியிருக்கின்றதென்றால், பூர்க்காமலே பிஞ்சு விடுகின்றது என்று சொல்வதுபோல் இருக்கின்றது. சரிகை, கிரிகை, யோக, ஞானம் அதாவது அரும்பு, மலர், காய், கனி என்று சொல்லப்பட்ட நான்குபடிகளில் மூன்றாவதுபடியாகிய வாசியோகம் இல்லாமலே அதற்குமேல் இருக்கப்பட்ட நான்காவதுபடியாகிய ஞானபடியை எப்படி அடையக்கூடும்.

மேல் மெத்தையின்மேல் ஏறிப்போகவேண்டுமானால்

---

† வாசியோகசாதனையென்றால், மூச்சை உள்ளுக்கிழுத்து நிறுத்தும்சாதனை.

ஒவ்வொரு படியாயல்லவோ ஏறிப்போகவேண்டும். அப்படிக்கல்லாமல் முதல்படியில் பாதம்வைக்காமல் இரண்டாவது படியின்மேல் பாதம்வைத்து ஏறமுடியுமோ. அதுபோல் யோகமென்கிற படியைச் சாதனம்செய்யாவிட்டால் ஞானமென்கிற படியை எப்படி அடைவார்கள்? யோகசாதனையினுல் மனம் இறந்துவிடும். மனம் இறந்த பிறகு தான்தானுய் அசையாமல் நின்றெரியும் தீபம் போல் நின்றுவிடுவான். இவ்வாருக கண்கள், மூக்கு, வாய், செவிகள், சரீரத்தின்மேலிருக்கும் தோல் இந்த ஐந்து இந்திரியங்களிலும் மனம் சேராமல் நின்றிருப்பதே ஞானமாகும்.

யோகசித்திபெற்று ஞானமடையும்சமயத்தில் மரணமடைவானேயாகில் அப்படிப்பட்டவன் மறுஜன்மத்தில் ஞானியாகவே பிறப்பான். அந்த ஜன்மத்தில் அவன் யோகசாதனை செய்யவேண்டியதில்லை. ஏனென்ருல், முன் ஜன்மத்திலேயே அவன் யோகசாதனைசெய்து பழமாய்ப் பழுத்துவிட்டவனுதலால், அப்படிப்பட்டவன் மறுபடியும் யோகசாதனைசெய்யாமலே ஞானவீட்டைப் போய் அடைவான். இதற்குச் சான்று ஜனகமஹாராஜர். இந்த ஜனகர் பிறக்கும்பொழுதே ஞானியாய்ப் பிறப்பதற்குக் காரணம் என்னவென்ருல், முன்ஜன்மத்திலேயே ஜனகர் யோக சித்திபெற்றவராதலால், பிறக்கும்பொழுதே ஞானியாய்ப் பிறந்தார். ஆதலால், யோகத்தின்மஹிமை இன்னதென்று அறியாத பாமரஜனங்கள் சொல்லுவார்களேயொழிய மற்றவர்கள் சொல்லமாட்டார்கள். இவர்கள் கேவல அரும்புக்குச் சமானமான மிகவும் கீழ்ப்படியில் இருக்கப்பட்டவர்களாதலால் இப்படிப்பட்டவர்களுக்கு செங்காய்க்குச் சமானமாயிருக்கப்பட்ட யோகத்தின்மஹிமை அரும்புக்குச்சமானமாயிருக்கும் சாதாரணமான மனிதர்களுக்கு

என்னதெரியவரும். இப்படிப்பட்டவர்கள் அநேக ஜன்மங்களெடுத்து சரிகை, கிரிகை, படிகளைக் கடந்தபின் யோகத்தின் நிலையைச்சொன்னால் அந்த ஜன்மத்தில் கிரஹிப்பார்களேயொழிய இப்பொழுது கீழ்ப்படியிலிருக்கப்பட்ட இவர்களுக்கு, யோகப்படியை போதித்தால் அவர்களுக்கு வேம்பைப்போல் இருக்குமென்று அறியக்கடவீர்களாக.

ஒவ்வொரு ஸ்திரீபுருஷர்களினுடைய ஆயுற்பாகம் அவர்களின் மூக்குத்துவாரங்களில் நடந்துகொண்டிருக்கும் மூச்சேயொழிய வருஷங்களல்ல. ஒவ்வொரு ஸ்திரீ புருஷர்களுக்கும் தினந்தோறும் இருபத்து ஓராயிரத்து அறுநூறு மூச்சுகள் நடக்கின்றன. இந்த இருபத்து ஓராயிரத்து அறுநூறு மூச்சுகளையும் நடக்கவிடாமல் குறைவாய் நடத்திவந்தால் அப்போது ஆயுற்பாகம் விருத்தியாகும்.

தினந்தோறும் இருபத்து ஓராயிரத்து அறுநூறு மூச்சுகள் எவ்விதமாய் நடக்கின்றனவோ அதுவிஷயம் இனி சொல்லப்போகின்றோம் கேளுங்கள். நிமிஷத்திற்கு பதினைந்து மூச்சுகள் நடக்கின்றன. நிமிஷத்திற்கு பதினைந்து மூச்சுகள் நடந்தால் ஒருமணிக்கு அறுபது நிமிஷங்கள் இருக்கின்றன. ஆதலால், பதினைந்து மூச்சுகளையும், அறுபது நிமிஷங்களையும் பெருக்கினால் அப்போது ஒரு மணிநேரத்தில் $(15 \times 60 = 900)$ தொளாயிரம் (900) மூச்சுகள் நடக்கின்றன. மணிக்குத் தொளாயிரம் மூச்சுகள் நடந்தால் நாள்ஒன்றுக்கு இருபத்துநான்கு மணிநேரமிருக்கின்றது. ஆதலால், தொளாயிரம் மூச்சுகளையும், இருபத்து நான்கு மணியையும் பெருக்கினால் இருபத்துஓராயிரத்து அறுநூறு மூச்சுகளாகின்றன. இவ்வாறாகவே தினந்தோ

றும் ஒவ்வொரு ஸ்திரீபுருஷர்களுக்கும் இருபத்து ஓராயிரத்து அறுநூறு மூச்சுகள் நடந்துகொண்டே வருகின்றன.

இந்த இருபத்து ஓராயிரத்து அறுநூறு மூச்சுகளேயும் செலவுசெய்யாமல் அவைகளே எவ்விதமாய்க் குறைத்து சேகரித்துக் கொள்ளவேண்டுமோ இனி அதை சொல்லப் போகின்றோம் கேளுங்கள்.

மூச்சை உள்ளுக்கிழுக்கும்போது அந்தமூச்சுடன் கூடவோ 'ஸோ' என்னும் மந்திரத்தைச்சேர்த்து உள்ளுக்கிழுத்து அதை வெளிவிடாமல் நிறுத்திப் பூமியைப் பார்த்துக்கொண்டே ஐந்தடிதூரம் நடந்து பிறகு, மூச்சை வெளிவிடும்பொழுது அந்த மூச்சுடன்கூடவே 'ஹம், என்னும் மந்திரத்தைச்சேர்த்து வெளியில்விட்டு மறுபடியும் மூச்சை உள்ளுக்கிழுக்கும்போது அந்தமூச்சுடன்கூடவே 'ஸோ' என்னும் மந்திரத்தைச்சேர்த்து உள்ளுக்கிழுத்து அதை வெளிவிடாமல் நிறுத்திப் பூமியைப்பார்த்துக் கொண்டே ஐந்தடிதூரம் நடந்து பிறகு மூச்சை வெளிவிடும்பொழுது அந்த மூச்சுடன்கூடவே 'ஹம்' என்னும் மந்திரத்தைச்சேர்த்து வெளியில்விட்டு, இவ்வாருகவே தான் எவ்வளவுதூரம் நடந்துபோகவேண்டுமோ அவ்வளவு தூரமும் மேற்சொல்லியதுபோல் மூச்சைநிறுத்திப் பூமியைப் பார்த்துக்கொண்டே நடந்துபோகவேண்டும்.

அப்படிக்கு நடந்துபோகாமல் மோடார்கார், அல்லது பஸ், அல்லது வண்டிகளின்மேல் ஏறிப் போகப்பட்டவர்களெல்லோரும் மேற்சொல்லியதுபோல் மூச்சை 'ஸோ' என்னும் மந்திரத்துடன் சேர்த்து உள்ளுக்கிழுத்து சுமார் ஐந்து ஸகிண்டுவரையில் நிறுத்திப் பிறகு மூச்சை வெளிவிடும்பொழுது அந்தமூச்சுடன்கூடவவ 'ஹம்' என்னும் மந்திரத்தைச்சேர்த்து வெளியில்விட்டு இவ்வாரு

கவே மோடார், பஸ், அல்லது வண்டிகளிலும் செல்ல வேண்டும். இப்படியாய் ஒவ்வொரு மூச்சிலும் சிலமூச்சு களைச் சேகரித்துக்கொண்டே வந்தால் அப்போது அவர் களின் ஆயுற்பாகம் விருத்தியடையும். இதன்றியும் மூச்சை வெளிவிடாமல் நிறுத்திவைத்திருக்கும் சமயங்களில் மனது என்று சொல்லப்பட்ட எண்ணங்கள் எதுவும் உதிக்காமலே இருக்கும். இதற்கோர் திருஷ்டாந்தம் சொல்லுகின்றோம் கேளுங்கள்.

இரும்புப்பெட்டியில் ஆயிரம்பவுன்களை வைத்து அப் பவுன்களை எடுத்துச் செலவு செய்யாமல் அப்பெட்டியை 'சீல்' செய்துவிட்டால் எத்தனை வருஷங்களானபோதிலும், அப்பவுன்கள் இரும்புப்பெட்டியிலேயே இருக்கும். அப் படிக்கல்லாமல் தினந்தோறும், 10-20-30 பவுன்களாய் எடுத்துச் செலவு செய்துகொண்டே வந்தால், சில மாதங் களுக்குள் பவுன்களெல்லாம் செலவழிந்து கடைசியில் இரும்புப்பெட்டியில் ஒன்றுமில்லாமல் போய்விடும்.

அதுபோல் நம் எல்லோருக்கும் நாள் ஒன்றுக்கு இருபத்து ஓராயிரத்து அறுநூறு மூச்சுகள் விகிதம், நாபி யென்று சொல்லப்பட்ட தொப்புகள் என்னும் இரும்புப் பெட்டியில் ஈஸ்வரனானவர் அடக்கம்செய்து வைத்திருக் கின்றார். இப்படியிருக்க, இதன் ரஹஸ்யம் தெரிந்துகொள் ளாத ஸ்திரீபுருஷர்களெல்லோரும் நாபிக்குள் அடங்கி யிருக்கும் மூலதனமாகிய மூச்சை எவ்விதமாய்ச் செலவு செய்துவிடுகின்றார்களோ அதை இனி சொல்லப்போகின் றோம் கேளுங்கள்.

தினந்தோறும் காலைமாலைகளில் புட்பால், டெனில், க்ரிகெட்டு, ப்யாட்மெண்டன், போலோ, ஹார்ஸ்ரேஸ், ரன்னிங் முதலாகிய ஆட்டங்களையெல்லாம் ஆடிக்கொண்டு

வருகின்றார்கள். இப்படிப்பட்ட ஆட்டங்களை ஆடும்பொழுது அந்தந்த ஆட்டங்களுக்குத் தக்கபடி மூச்சானது அதிகமாய்ச் செலவழிந்துவிடும். அதெப்படியென்றால்,

தினந்தோறும் இவர்களுக்கிருக்கும் மூச்சோ, இருபத்து ஓராயிரத்து அறுநூறு மூச்சுகள். அப்படியிருக்க, இவர்கள் மேற்சொல்லிய ஆட்டங்களினால் ஒவ்வொருவரும் தினந்தோறும் இருபத்து ஐயாயிரம், இருபத்து எண்ணாயிரம் அல்லது முப்பதினாயிரம் மூச்சுகள் விகிதம் செலவு செய்கின்றார்கள். கடவுளானவர் நூறு வருஷத்திற்கு வேண்டும் மூச்சை நமக்கு ஆயுற்பாகமாய்க்கொடுத்திருந்த போதிலும், தினந்தோறும் ஏற்பட்டிருக்கும் கணக்குக்கு மேல் மூச்சை அதிகமாய்ச் செலவுசெய்வதனால் நூறு வயதிலிருந்து குறைந்து எழுபத்தைந்து, எண்பது, அல்லது எண்பத்தைந்து வருஷங்களுக்குள் மரணமடைகின்றார்கள். என்றால், தினந்தோறும் தமக்கிருக்கும் இருபத்து ஓராயிரத்து அறுநூறு மூச்சுகளைவிட அதிகமாச் செலவு செய்வதனால் நூறு வயதிலிருந்து குறைந்து எண்பது வயதிற்குள் மரணமடைகின்றார்கள்.

யோகிகளோ அப்படியல்ல; யோகசாதனையினால் மூச்சை நிறுத்துகின்றார்கள். அதனால் அவர்கள் அநேக காலம் ஜீவித்திருக்கின்றார்கள். இதற்கோர் திருஷ்டாந்திரம் சொல்லப்போகின்றோம் கேளுங்கள். ஓர் மலையடிவாரத்திலுள்ள காட்டில் மிகவும் பெரியயோகிகள் இரண்டுபேர் நிவசித்திருந்தார்கள். இவர்களிருவம் எப்போதாகிலும் ஒவ்வொரு சமயங்களில் கலந்து பேசுவது வழக்கம். இப்படியிருக்க, இவர்களிருவரும் ஒருநாள் கலந்து பேசிக்கொண்டிருக்கும் சமயத்தில் பேசப்பட்டவரின் மூச்சை, பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்த யோகி

யானவர் கவனித்து, இதோ இப்போது வெளிவரப்போகிற மூச்சானது சரீரத்தைவிட்டு ஓடிப் போகப்போகின்றது. ஆதலால், அதை ஓடாமலிருக்க ஜாக்கிரதை செய்யவும் என்று சொல்லினர். அப்பொழுது பேசிக்கொண்டிருந்த யோகியானவர் உடனே கண்களைமூடி, கடைசியாய்வரப் போகும் மூச்சை வெளிவரவிடாமல் உள்ளுக்கிழுத்து கும்பகத்தில் நிறுத்தி அவ்விடமே யோகசமாதியில் நின்றுவிட்டனர். இவ்வாறாக அநேககாலம் யோகசமாதியிலிருந்து பிறகு அந்த ஒருமூச்சையும் வெளியில்விட்டு, பிரம்மத்துடன் பிரம்மமாய்க் கலந்துவிட்டாரென்று அடியேனுடைய யோககுருவானவர் அடியேனுக்குச்சொன்னதை இப்பொழும் உங்களுக்கு வெளியிட்டுச் சொன்னேம்சொன்னேம்.

எங்கும் பரிபூரணமாய் நிறைந்து பரப்பிரம்மமாயிருக்கும் கடவுளின் அம்சத்திலிருந்து சிறிதுசிறிதாய் அணு சொரூபமாய்க்கிளம்பி, உலகத்திலுள்ள எண்பத்துநான்கு லக்ஷ ஜீவராசிகளிலும் வியாபித்திருப்பதனுல் இவருக்கு ஜீவாத்மா என்னும் பெயருண்டாயிற்று. ஜீவாத்மாவில் வியாபித்ததுபோக மிகுதியாயிருக்கும் கடவுளுக்கு பரமாத்மாவென்று சொல்லப்படும். எல்லாஜீவராசிகளிலும் வியாபித்திருக்கும் கடவுளாகிய ஆத்மாவானவர் தினந்தோறும் அந்தந்த ஜீவர்கள் செய்துவரும் புண்ணியபாபங்களையெல்லாம் பார்த்துக்கொண்டுவந்து அந்தந்த புண்ணிய பாபங்களுக்குத் தக்கபடி உயர்வு தாழ்வான ஜன்மங்களைக் கொடுத்துக்கொண்டும், அந்தந்த பாபத்திற்குத் தக்கபடி வியாதிகளை அனுபவிக்க தண்டனையை விதித்துக் கொண்டும் வருகின்ருர்.

மண்ணுசைப், பெண்ணுசைப், பொருளாசை என்கிற இம்மூன்று ஆசைகளால் உலகத்திலுள்ள ஜனங்களெல்

லோரும் மூழ்கியிருக்கின்றார்கள். செம்புபாத்திரத்தில் பச்சைவர்ணமாய்க் களிம்பு எவ்விதமாய்ப் பிடிக்கின்றதோ அதுபோல் மேற்சொல்லிய ஆத்மாவாகிய கடவுளை மேற் சொல்லிய மூன்று ஆசைகளும் களிம்பைப்போல் பிடித் துக்கொண்டே இருக்கின்றன. இந்த ஆசைகள் இருக்கும் வரையில் ஜன்மங்கள் வந்துகொண்டேயிருக்கும். எந்த ஜன்மத்தில் அந்த ஆசைகளெல்லாம் ஒழிந்துவிடுகின்ற னவோ அப்பொழுது அந்த ஜீவனானது மிகவும் பரிசுத்த மான ஜீவாத்மாவாய்விடுகின்றது. அதன்பிறகு, அந்த ஜீவாத்மாவானது தனது நிஜசொரூபமாகிய பரமாத்மா வுடன்போய்ச் சேரும். என்றால், ஆசைகளென்னும் அழுக் குகளுடன் கூடியிருக்கும் ஜீவனது ஆசைகளெல்லாம் ஒழிந்தால் அப்போது அந்த ஜீவன் மிகவும் பரிசுத்தமாய் தனது நிஜசொரூபமாகிய பரமாத்மாவுடன் போய்க் கலக் கும். அது எப்படியென்றால்,

"யாதா ஜலேஜலம் க்ஷிப்தம் க்ஷீரம்க்ஷீரரே க்ருதம்க்ருதே
அவிஸேஷோ பவேதத்வத் ஜீவாத்மா பரமாத்மநோஹோ."

ஜலத்தில் ஜலமும், பாலில் பாலும், நெய்யில் நெய்யும் கலந்து ஏகமாவதுபோல், ஜீவாத்மாவிற்கு களிம்பைப் போல் பற்றியிருந்த எல்லா ஆசைகளும் நீங்கினால் அப் பொழுது அந்த ஜீவாத்மாவானது மிகரும் பரிசுத்தமாம் தனது நிஜ சொரூபமாகிய பரமாத்மாவுடன் போய்ச் சேர்ந்துவிடும். இதுவே வேதாந்தத்தினுடைய மிகவும் கோப்யமான ரஹஸ்யமென்று தெரிந்துகொள்ளுங்கள். மஹாவிஷ்ணுவானவர் நரகாசுரனை ஏன் சம்மரித்தாரோ அதன் ரஹஸ்யம் இனி சொல்லப்போகின்றோம்.

மஹாவிஷ்ணுவானவர் நரகாசூரனை ஏன் சம்ஹாரம் செய்யவேண்டும்.

ஐயா!

தேவலோகத்திலுள்ள தேவர்களெல்லோரும் வரிசைக் கிரமப்படி தினந்தோறும் ஒவ்வொருவரும் அதிகாலையில் எழுந்து ஸ்நானம் செய்து தேவர்களுக்கரசனை தேவேந்திரனுடைய நந்தவனத்திற்குள் சென்று மிகவும் பயபக்தியுடன் பாரிஜாதம், மல்லிகை, முல்லை, இருவாக்ஷி, சண்பகம் இன்னும் மற்றுமுள்ள புஷ்பங்களை எடுத்து அவைகளை மாலையாய்க்கட்டி அம்மாலையைப் பெருமாள் சந்நிதிக்குக் கொண்டுபோய்க் கொடுத்து சாற்றுவது வழக்கம்.

இவ்வாருக நடந்துவருங் காலத்தில் ஒருநாள் காலை தேவதாசியானவள் மேற்சொல்லிய நந்தவனத்திற்குச் சென்றிருந்தாள். அப்போது புஷ்ப மெடுத்துக்கொண்டிருந்த தேவதா புருஷன் அந்த தாசியின் ரூபலாவண்யத்தைப்பார்த்து அவள்மீது மிகவும் மோகங்கொண்டு, அந்த மோகத்தினல் தான் அனுபவித்திருந்த பேரின்ப சுகத்தை மறந்து சிற்றின்ப ஞாபகமுண்டாய் அவளுடன் கூடி, சிற்றின்பசுகத்தை அனுபவித்து, ஸ்நானம் செய்யாமல் அசுசியுடனிருந்து புஷ்பமாலையைக்கட்டி அம்மாலையைக்கொண்டு போய்ப் பெருமாளுக்குச் சாற்றக் கொடுத்தனன். அப்போது சர்வ பரிபூரணனுயிருக்கும் பெருமாளானவர் தேவதா புருஷனைப் பார்த்து,

"ஹே தேவதாபுருஷனே! நீ தேவதாசியை மோஹித்து அவளுடன் சேர்ந்துப் பிறகு ஸ்நானம் செய்யாமல் அசுசியுடனிருந்து மாலையைக் கட்டிக்கொண்டு வந்து எனக்கு சமர்ப்பிக்கக் கொடுத்தாய். காமியாயிருந்து காம

போகத்தைத் தீர்த்துக்கொண்டு அசுசியுடனிருந்து மாலையைக் கட்டிக்கொண்டுவந்து கொடுத்தபடியால் நீ நரலோகத்தில் போய்ப் பிறந்து, நரர்களுக்கெல்லாம் சூரனயிருந்து, நரகாசூரன் என்னும் பெயரைவஹித்து, உன் காம இச்சையைத் தீர்த்துக்கொண்டு என்னுடன் ஒவ்வொரு ஜன்மத்திலும் சினேகபாவமாயிருந்து என்னைப் பூஜித்து, அநேக ஜன்மங்கள் கடந்தபின் மறுபடியும் நரஜன்மத்தை விட்டு தேவதாசரீரமெடுத்து தேவருலகத்திற்கு வரக் கடவாய்.

அப்படிக்கு என்னுடன் சினேகபாகமாயிருந்து அநேக ஜன்மங்களை யெடுத்து மறுபடியும் தேவலோகம்வர உனக்குச் சம்மதமில்லாம லிருக்கும்பக்ஷத்தில், எனக்கு நேர்விரோதியாயிருந்து என் பக்தர்களை எல்லாம் தூஷித்து அவர்களை இம்சை செய்துவரக் கடவாய். அப்பொழுது அவர்கள்வந்து என்னிடம் முறையிடுவார்கள். அச்சமயத்தில் நான் உன்னிடம்வந்து யுத்தம்செய்து உன்னைக்கொல்வேன். அப்போது நரகாசூரன் சரீரத்தைவிட்டு முன்போல் தேவதாசரீரம் தரித்து தேவலோகத்திற்கு வரக்கடாய். இவ்விரண்டு வாரங்களில் எந்தவரம் உனக்கு வேண்டும்.'' என்று ஸ்ரீ பெருமாளானவர் தேவதாபுருஷனைக் கேட்டனர். அப்பொழுது தேவதாபுருஷன் திடுக்கிட்டு நடுநடுங்கி தாரைதாரையாய்க் கண்ணீர்ப் பெருக அழுது, இருகைகளையும் குவித்துநின்று,

"அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகா, ஆதிமத்யாந்தரஹிதா, அநாதரக்ஷகா, ஆபத்பாந்தவா, தேவதேவோத்தமா, தேவகிநாதா, அடியேன் அறியாத்தன்மையினல் செய்த குற்றங்களையெல்லாம் மன்னிக்கக்கடவீராக. உம்மிடம் சினேகபாவமாயிருந்து அநேக ஜன்மங்களெடுத்து மறுபடியும் தேவலோகம் வருவதைவிட உமக்கு

விரோதியாயிருந்து உம்முடன் யுத்தம்செய்து மறுபடியும் சீக்கிரமாய்த் தேவலோகத்திற்கு வந்து உமது பாத சேவையை சேவித்துக்கொண்டிருப்பதற்கே எனக்கு அதிக பிரீதியாயிருப்பதனால் தேவரீருக்கு விரோதியா யிருக்கப் பட்ட ஜன்மத்தையே தருவீர்களாக" என்று தேவதா புருஷன் கேட்டனன்.

அப்போது லோகரக்ஷகராகிய மஹாவிஷ்ணுவான வர் தேவபுருஷனைப்பார்த்து "ஓ தேவதாபுருஷனே! நீ நர லோகத்திற்குச்சென்று நரர்களுக்கெல்லாம் சூரனாயிருந்து நரகாசூரனென்னும் பெயரைவஹித்து மஹாவிஷ்ணுவா கிய என்னை துதிசெய்யப்பட்டவர்களையெல்லாம் துதிசெய் யவிடாமல் தடுக்கக்கடவாய். அதன்பிறகு அவர்களெல் லோரும் என்னிடத்தில்வந்து முறையிடுவார்கள். அச்சம யம் நான்வந்து உன்னுடன் யுத்தம் செய்யும்பொழுது நீ என்கையால் மரணமடைந்து நரகாசூரன் சரீரத்தைவிட்டு மறுபடியும் தேவதாசரீரம்தரித்து தேவலோகம் வரக்கட வாய்" என்று சாபமளித்தனர். மஹாவிஷ்ணுவானவர் சாபமளித்தவுடன் தேவதாபுருஷன் தேவதாசரீரத்தை விட்டு பூலோகத்தில்வந்து, அரசன்வம்சத்தில் பிறந்து நரர் களுக்கெல்லாம் புத்தரங்கத்தில் மிகவும் சூரனாயிருந்தபடி யால், 'நரகாசூரன்' என்னும் பெயரை வஹித்து, விஷ்ணு பக்தர்களாகிய பாகவதோத்தமர்களை யெல்லாம் இம்சை செய்துவந்தான். அப்பொழுது பாகவதோத்தமர்களெல் லோரும் ஸ்ரீ பெருமாள் சந்நிதிக்குச்சென்று தம்மை நரகா சூரன் வதைசெய்வதை யெல்லாம் சொல்லினார்கள். அப் போது பெருமாளானவர் பாகவதோத்தமர்களைப் பார்த்து 'நீங்கள் பயப்படாதீர்கள். நான் இப்போதே சென்று, அவனைச் சம்மரித்து வருகின்றேன்." என்று அவர்களுக்கு அபய அஸ்த்தம்தந்து, நரகாசூரனிடம்சென்று அவனுடன்

வெகுநேரம்வரையில் யுத்தம்செய்து, பிறகு கடைசியில் நாராயணாஸ்திரத்தைப் பிரயோகம் செய்தனர். அந்த அஸ்திரத்தை நரகாசூரன் பார்த்தவுடன் "ஓஹோ! இவர் மஹாவிஷ்ணு" வென்றறிந்து இருகைகளையும் குவித்து,

"பரந்தாமா! பரமபுருஷா! பராத்பரா! பரமபாவனா! புராணபுருஷா! புண்டரீகநயனா! தாரகநாமா! ராவணமர்த்தநா! ஜாநகிநாதா! ஜகதிராமா! சர்வகாருண்யா! ஜகத்பிரசித்தா! தேவதேவோத்தமா! தேவதாஸார்வபௌமா! யான் சதுர்த்தசியாகிய இன்றையதினம் உமது நாராயணாஸ்திரத்தினால் பிராணனை விடப்போகின்றேன். ஆதலால், இக்கலியுகம் உள்ளநாள்வரையில் பிரதிவருஷம் அர்ப்பிசிமாதத்தில் வரும் சதுர்த்தசி திதியில் நான் இறப்பதனால் அந்தத்திதியில் அப்பியங்கஸ்நானம்செய்து கருமாதிதினத்தில் புதிய வஸ்திரங்களைத் தரிப்பதுபோல் எனக்காக எல்லோரும் புதிய வஸ்திரங்களைத் தரித்து பண்டுபலகாரங்களைப் படைத்து என்பெயரைச்சொல்லிச் சாப்பிட்டு, அந்நாள்முழுமையும் என்னை உலகத்தார் கொண்டாடும்படி வரம் பிரசாதிக்கவேண்டு" மென்று கேட்டுக்கொண்டனன். அப்போது நரகாசூரன் கேட்டது போல் பெருமாளாவர் வரம் தந்தனர். பெருமாள் வரந் தந்தவுடன் நரகாசூரன் பிராணனைவிட்டு தேவதாசரீரம் தரித்து தேவலோகம்போய்ச் சேர்ந்தான்.

கலியுகஜனங்கள் இதன் ரஹஸ்யார்த்தம் அறியாமல் சதுர்த்தசியாகிய திபாவளிதினத்தில் கோழிகளையும் ஆடுகளையும் அறுத்துச் சமைத்து அப்யங்கஸ்நானம்செய்து புதியவஸ்திரங்களைத்தரித்து நரகாசூரனுக்குப்படைத்துச் சாப்பிட்டு மறுநாள் கேதாரிவிருத நோன்பு அனுஷ்டிப்பார்கள். நோன்பென்பது !கொன்றுதின்னாமையேயாம். இது இப்படியிருக்க கோழிகளையும் ஆடுகளையும் அறுக்கும்

பொழுது அவைகள் தம்தம்பாஷையால் என்ன சொல்லி துக்கப்படுகின்றனவென்றால்,

"உங்கள்மக்களும் நீங்களும் நோய்கொள
எங்கள்மக்களும் நாங்களு மென்செய்தோம்
பொங்கலிட்டுப் பலியுங்கொடுக்கிறீர்
எங்கள் முறையினை யீசனுர் கேளாரோ.

அம்மா வென்றலர ஆருயிரைக் கொன்றருந்தி
இம்மா னுடரெல்லாம் மின்புற்றிருக்கின்றாரே
அம்மா வென்னுஞ்சத்தங் கேட்டகன்ற மாதவர்க்கும்
பொய்மா நிரையமென்றாற் புசித்தவருக் கென்
சொல்வதே."

உங்கள் குழந்தைகளுக்கும், உங்களுக்கும் நோயுண்டானல், நாங்களும் எங்கள் குழந்தைகளும் உங்களுக்கு என்ன தீங்குசெய்தோம். அம்மனுக்குப் பொங்கலிட்டு அந்த அம்மனெதிரில் எங்களைப் பலிகொடுக்கின்றீர்கள். நாங்கள் உங்களால் மரணமடையும் துன்பத்திற்குத்தக்க தண்டனை ஈஸ்வரனனவர் உங்களைத் தண்டிக்காரோ.

நாங்கள் பிராணனைவிடும்சமயத்தில் அம்மாவென்று அலரி கூச்சலிடும் சப்தம் யார்காதில் விழுகின்றதோ அந்த சப்தம் கேட்டவர்களெல்லோரும் நரகத்தை அனுபவிக்க வேண்டியதாயிருக்க, எங்கள் மாமிசத்தைச் சாப்பிடப் பட்டவர்களெல்லோரும் எப்படிப்பட்ட நரகத்தில் போய் விழுவார்களோ தெரியவரமாட்டா.

"கங்கையிற் படிந்திட்டாலும் கடவுளைப் பூசித்தாலும்
மங்குபோற் கோடிதானம் வள்ளலாய் வழங்கினுலும்
சங்கையில் லாதஞான தத்துவமுணர்ந்திட்டாலும்
பொங்குறுபுலால் புசிப்போன் போய்நர கடைவானென்றே."

அதாவது கங்கா; யமுநா, ஸரஸ்வதீ, நர்மதா, சிந்து, காவேரி, துங்கபத்ரா, கோதாவரி, குமரி முதலாகிய

ஒன்பதுமஹாதீர்த்தங்களில் ஸ்நானம்செய்து, வாய்த்தாள் போட்டு, அந்தத் தீர்த்தங்களைக் காவடியில்கட்டி மிகவும் நேமநிஷ்டைகளுடன் அத்தீர்த்தங்களைக் கொண்டு போய்க் காசி ராமேஸ்வரங்களிலுள்ள மஹா லிங்கங் களுக்கு அபிஷேகம்செய்து, ஆங்காங்குள்ள பெரியோர் களுக்கு மேகம் வருஷிப்பதுபோல் கோதான, பூதான, சொர்ண தான, கன்னிகாதான, அன்னதான, வஸ்திரதான முதலாகிய முப்பத்திரண்டு தானங்களைச்செய்து, ஆங்காங் குள்ள பெரியோர்களின் திருவாக்கால் ஞானார்த்தங்களைக் கேட்டுச் சந்தேக விபரீத பரதத்துவ விசாரணைகளைச் செய்து உண்மைப்பொருளை அறிந்தவனாயிருந்தபோதி லும், ஜீவராசிகளின் உயிர்களைப்போக்கி அவற்றின் மாமி சங்களைத்தின்று தன்சரீரத்தை வளர்ப்பானாகில் நரகத் தையே யடைந்து துக்கமடையவேண்டியதாய் நேரிடும் என்பதே இப்பாடலின் கருத்தாகும். ஆதலால், இது வரையில் நீங்கள் தெரியாத்தன்மையினால் மாமிசங்களைத் தின்றிருந்தபோதிலும் சரி இப்பொழுது இந்நூலைவாசித்த ஸ்திரீ புருஷர்களாகிய நீங்களெல்லோரும் இனியாகிலும் மாமிசங்களைப் புசிக்காமலிருப்பீர்களாகில் சீக்கிரமாய் உங்களுக்கு ஈஸ்வரர் அனுக்கிரஹம் உண்டாகும். அவ் வனுக்கிரஹத்தினால் மோக்ஷ சாம்ராஜ்ய பதவியைத் தப்பாமல் அடைவீர்கள்.

முற்றிற்று.

ஜனனமரணங்களைப்பற்றி ஸ்ரீ யோகீஸ்வரர் தெரிவிக்கின்றார்.

அன்புடையீர் !

கலியுகம் பிறந்து, 5038-வருஷங்களாகின்றன. இந்த ஐயாயிரத்து முப்பத்து எட்டு வருஷங்களுக்குள் இப்பொழுதிருக்கும் ஸ்திரீ புருஷர்கள் யெல்லோரும், ஆதியில் என்றால், கலியுக ஆரம்பத்தில் குழந்தையாய்ப் பிறந்தார்கள். அவற்றில் சில குழந்தைகளுக்கு மூச்சு தொப்புளில் இல்லாவிட்டால் இறந்த குழந்தைகளாய் வந்து பிறக்கும். சில குழந்தைகள் காலை 6-மணிக்குப் பிறந்து, 12-மணிக்கு இறந்துவிடும். அவ்வாறு இறப்பதற்குக் காரணம் என்னவென்றால், அக்குழந்தைகளுக்கு ஐயாயிரத்து, நானூறு மூச்சுகள் மாத்திரம் தொப்புளில் இருந்தபடியால் அவைகளெல்லாம், 6-மணி நேரத்திற்குள் மூக்குத் துவாரங்களின் வழியாய் நடந்து, நடந்து அம்மூச்சுகளெல்லாம் சிலவழிந்து கடைசியாய் வரும் மூச்சானது அந்த சரீரத்தை விட்டு வெளிவந்தவுடன் அக்குழந்தை இறந்துவிடும். அதன்பிறகு, அக்குழந்தை மூக்கிலிருந்து கடைசியாய் வெளிவந்த மூச்சானது எங்குபோய்ச்சேருகிறதோ அதை இனி சொல்லப்போகிறோம்.

குழந்தையாய்ப் பிறந்து, ஆறுமணிநேரம் ஜீவித்திருந்த சிசுவின் இருதய கமலத்தில் நிவசித்துக்கொண்டிருந்த ஆத்மாவாகிய கடவுள் என்ன செய்தாரென்றால், ஆறுமணிநேரம் ஜீவித்திருந்து இறந்துவிட்ட சிசுவை மறுபடியும் எந்த வீட்டில் சிருஷ்டி செய்யவேண்டுமோ அந்த வீட்டிலுள்ள ஸ்திரீ கர்ப்பத்தில் ஓர் சிசுவை ஆத்மாவாகிய தான் முன்னதாகவே சிருஷ்ட்டி செய்து, அக்குழந்தை எவ்வளவுகாலம் ஜீவித்திருக்கவேண்டுமோ அவ்வளவு

காலத்திற்கு வேண்டும் மூச்சை அக்குழந்தையின் தொப்புளில் சுருணையாய்ச் சுற்றிவைத்து, அதன்பிறகு அந்த மூச்சி நுனியில், முன் பழய சரீரத்திலிருந்து கடைசியாய் வெளிவந்த மூச்சை ஆத்மாவாகிய தான் கொண்டுபோய்ச் சேர்ப்பிக்கும். அதன் பிறகு, அச்சிசு தாயின் கர்ப்பத்திலிருந்து வெளிவந்தவுடன் பழைய சரீரந்திலிருந்து இக்குழந்தையின் புதிய சரீரத்தில் வந்துசேர்ந்த மூச்சானது முதல் மூச்சாய் வெளிவரும். அதன்பிறகு, அச்சிசுவிற்கு ஆயுள் பிரமாணமாய் ஏற்படுத்தியிருக்கும் மூச்சுகளெல்லாம் இரண்டு மூக்குத் துவாரங்களின் வழியாய் தினந்தோறும் இராப்பகலாய் நடந்து நடந்து, கடைசியில் பிராணனை விடும்பொழுது அவ்ரவர்களின் கர்மானுசாரமாய் எந்த வியாதி வரவேண்டுமோ அந்த வியாதிவந்து அதன் பிறகு, அந்த சரீரத்தில் கடைசியாய் இருந்த மூச்சானது மூக்குத் துவாரங்களின் வழியாய் வெளிவந்து இன்னொரு சிசு தொப்புளில் சுருணையாய்ச் சுற்றிவைத்திருக்கும் மூச்சியில் போய்ச்சேர்ந்துகொள்ளும். இவ்வாறாக கலியுகம் பிறந்தநாள் முதல் ஒவ்வொரு ஸ்திரீ புருஷர்களும் ஒரு ஜன்மத்தில் குழந்தையாய்ப் பிறந்தவுடன் இறந்திருக்கலாம். ஒரு ஜன்மத்தில் ஆறுமாதம் ஜீவித்திருந்து இறந்திருக்கலாம். ஒரு ஜன்மத்தில் ஒரு வருஷம், இன்னொரு ஜன்மத்தில் ஐந்து வருஷம், இதுபோல், 8-10-15-20-30-40-50-60, வருஷங்கள் வரையில் இவ்வாறாக ஒவ்வொரு ஜன்மத்திலும் ஜீவித்திருந்து இறந்துகொண்டே வருகின்றார்கள். ஜீவராசிகளின், ஆயுள் பிரமாணம் மூச்சேயொழிய சூர்ய சந்திரர்கள் நடக்கும் நாட்களல்ல. ஸ்திரீபுருஷர்களுக்கெல்லாம் ஆசையென்பது எவ்வாறு தொடர்ந்து வருகிறதோ அதுவிஷயம் இனி சொல்லப்போகிறோம்.

ஆசைகளும், நல்லகெட்ட குணங்களும் ஸ்திரீ புருஷர்களை எவ்வாறு தொடர்ந்து வருகிறதோ அதை வெளியிடுகிறார்.

பரப்பிரம்மமாகிய கடவுள் ஆதியில் என்றால், முதல் ஜன்மத்தில் ஸ்திரீ புருஷர்களை சிருஷ்ட்டிசெய்து அவர்களுக்கு மனைவி, மக்களையும், வீடு, தோட்டம், துரவுகளையும், பொருளையும் அவரவர்களின் கர்மத்திற்குத் தக்கபடி உயர்வு தாழ்வான ஜன்மங்களைக் கொடுத்தார். அந்த ஜன்மத்தில் மனைவி மக்கள்மீதும், தனதான்யாதி ஐஸ்வரியங்களின்மீதும் சில வருஷங்கள்வரையில் ஆசையாய் இருந்து பிறகு பிராணனைவிட்டார்கள். இவர்கள் பிராணனை விடும் பொழுது அந்த ஜன்மத்தில் அவர்களுக்கிருந்த எல்லா ஆசைகளும் அவர்களுடன் கூடவே தொடர்ந்து இன்னொரு ஜன்மத்தில் புதிதாய் வந்த சரீரத்தில் போய்ச் சேர்ந்தது. அங்குபோய்ச்சேர்ந்த பிறகு, மறுபடியும் அந்த ஜன்மத்தில் வேறு மனைவி மக்களும் தனதான்யாதி ஐஸ்வர்யங்களும் புதிதாய் வருகின்றன. அப்பொழுது முன் ஜன்மத்தில் தன்னுடன் கூடவே தொடர்ந்துவந்த ஆசைகள், மறு ஜன்மத்தில் புதியதாய் வந்த ஆசைகள் இவ்விரண்டு ஆசைகளும் ஒன்றாய்ச் சேர்ந்து அபிவிருத்தியாயிற்று. இதுபோல் ஒவ்வொரு ஜன்மத்திலும் வரும் ஆசைகள் எல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து அபிவிருத்தியாய்க்கொண்டே வருவதனால் இந்த ஜன்மத்தில் வந்த மனைவி மக்கள் மீதும், தனதான்யாதி ஐஸ்வர்களின்மீதும் விசேஷ ஆசையாய் இருக்கின்றார்கள். ஒவ்வொரு ஸ்திரீ புருஷர்களுக்கும் இருக்கும் ஆசைகளும், நல்ல கெட்ட குணங்களும் ஆதியில் இருந்து அவர்களுடன் கூடவே தொடர்ந்து வருகிறதே யொழிய இப்பொழுது

புதியதாய் இந்த ஜன்மத்தில் வந்த ஆசைகள் அல்ல. இதையே பூர்வஜன்ம வாசனை யென்று சொல்லப்படும்.

நம்முடைய ஆயுள் பிரமாணம் மூக்குத்துவாரங்களில் நடக்கும் மூச்சே யொழிய ஜாதகத்தில் குறிப்பிடும் வருஷங்களல்ல. கலியுகம் பிறந்ததுமுதல் ஒவ்வொரு ஸ்திரீ புருஷர்களும் இதுவரையில் ஏறக்குறைய சுமார் நூறு ஜன்மங்களை எடுத்திருக்கலாம். இந்த ஜன்மத்திலிருக்கும் மனைவிமக்களும் பந்துக்கள் முதலானவர்கள் எல்லோரும் இறந்தபின் மறுபடியும் ஒருவர்க்கொருவர் சம்பந்த மில்லாமல் எங்கெந்த தேசத்திலோ, எங்கெந்த பாஷைபேசும் வீட்டிலோபோய் பிறப்பார்களோ தெரியவராது. இவர்கள் ஒரு ஜன்மத்தில் சிகப்பு நிரமாயும், ஒருஜன்மத்தில் மாநிரமாயும், ஒரு ஜன்மத்தில் கருப்புநிரமாயும், முகம் வேறு வேறு ரூபமாயும் மாறுபட்டு வந்துகொண் டிருப்பார்களே யொழிய ஒரு ஜன்மத்தில் வந்த நிரம்போலவும், ரூபம் போலவும்இன்னொரு ஜன்மத்தில் வரமாட்டார்கள். ஆனால், சரீரத்திற்குள்ளிருக்கும் ஜீவன்மாத்திரம் எந்த ஜன்மத்திலும் மாறுபடாமல் ஒரேவிதமாய் வந்துகொண்டிருக்கும். இவர்கள் எல்லோரும் இறந்து எங்கெங்கோபோய்ப்பிறந்த பிறகு மறுபடியும் இவர்களுக்கும் முன் ஜன்மத்தில் இருந்தவர்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இராது.

இந்த மரணம் எப்படி இருக்கிறதென்றால், இரவு படுத்துத் தூங்கும்பொழுது வீடு, மனைவி, மக்கள், தோட்டம், துரவுகள், வஸ்த்து, வாகனங்கள், பந்துக்கள் முதலானவர்களையும் தன் சரீரத்தையும் மறந்து எப்படித் தூங்குகின்றார்களோ அதுபோல் பிராண பிரயாணகாலத்தில் தன் குடும்பத்தாரையும் எல்லா ஆஸ்திகளையும் தூக்கத்தில் மறந்தவனைப்போல் மறந்து எதன்மேல் விசேஷ ஆசை வைத்திருந்தார்களோ, அதை மாத்திரம் நினைத்துக்

கொண்டே பிராணனை விட்டு அவர்களின் புண்ணிய பாவங்களுக்குத் தக்கபடி அரசன் வீட்டிலோ, தனவான் களின் வீட்டிலோ, ஏழைகளின் வீட்டிலோ, அல்லது பிச்சை எடுக்கப்பட்டவர்களின் வீட்டிலோ போய்க் குழந்தையாய்ப் பிறப்பார்கள்.

நெல், கேழ்வரகு, கம்பு, சோளம் முதலானவைகளுக் கெல்லாம் விதை எப்படி இருக்கிறதோ அதுபோல், மானவ சரீரம் வருவதற்கும் விதை யொன்றுண்டு. அது என்ன விதை யென்றால் எண்ணங்களென்னும் விதையேயாம். இந்த எண்ணங்களென்னும் விதையினால் தாம் ஓர் வீட்டில் குழந்தையாய்ப் போய்ப் பிறக்கின்றார்கள். அங்குபோய்க் குழந்தையாய்ப் பிறந்தபின் சிறுகச் சிறுக வளர்ந்து வரு வார்கள். அதன் பிறகு தம்மைப்பெற்ற தாய்த் தந்தை களின் மீதும், சகோதர சகோதரிகளின் மீதும் ஆசையாய் இருப்பார்கள். அவர்கள் பெரியவர்களாய் வளர்ந்த பின் அவர்களுக்கு மனைவிமார்கள் வருகின்றார்கள். அதன்பிறகு, அவர்களுக்குக் குழந்தைகள் உண்டானால் அப்பொழுது தன் மனைவியின் மீதும் மக்கள் மீதும் விசேஷ ஆசையாய் இருப்பார்கள். இதுபோல் ஒவ்வொரு ஜன்மத்திலும் வரும் மனைவி, புத்திரர்கள், புத்திரிகைகள், பேரன் பேத்திமார் களின் மீது விசேஷ ஆசையுடையவர்களாயிருந்து கடைசி யில் ஏதோ ஓர் வியாதி வந்து பிராணனை விடும்பொழுது அவர்களின் குடும்பத்தாரையெல்லாம் பூர்த்தியாய் மறந்து பிறகு பிராணனை விட்டுவிடுவார்கள்.

ஒரு குடும்பத்தில் இருப்பவர்களில் யாருக்காகிலும் ஒருவருக்கு ஏதோ ஒரு வியாதிகண்டு இறந்துவிட்டால் அவரைப்பார்த்து அக்குடும்பத்தி லுள்ளவர்கள் எல்லோ ரும் அழுது துக்கப்படுவார்கள். அவர் இன்று இறந்தால் அவ்வீட்டில் இருப்பவர்களும் சில வருஷங்கள் வரையில்

ஜீவித்திருந்து பிறகு அவரைப்போல் இவர்களும் இறக்கப் பட்டவர்களேயொழிய அதே வீட்டில் சாஸ்வதமாய் இருக் கப்பட்டவர்களல்ல. ஒரு குடும்பத்தில் அநேகர்கள் வந்து சேர்ந்து மறுபடியும் அவர்கள் எல்லோரும் ஒவ்வொருவ ராய் இறப்பது எப்படியிருக்கிறதென்றால், சந்தையில்வந்து சேரும் கூட்டம்போல் இருக்கிறது. அது எப்படி என்றால்,

எங்கெங்கிருந்தோ ஜனங்கள் சந்தையில் வந்து சேர்ந்து அவரவர்களுக்கு வேண்டும் சாமான்களை வாங்கிக் கொண்டு மாலை வீடுபோய்ச் சேருவார்கள். அதுபோல், ஸ்திரீ புருஷககள் எல்லோரும் எங்கெந்த தேசத்திலோ இறந்து ஓர் குடும்பத்தில் மனைவியாகவும், பிள்ளைகளாகவும், பெண்களாகவும், பேரன், பேத்திமார்களாகவும், பந்துக்க ளாகவும் சந்தையில் வந்துசேரும் கூட்டம்போல் வந்து சேர்ந்து அக்குடும்பத்தி லுள்ளவர்களின்மேல் விசேஷ ஆசையாய் இருப்பார்கள். பிறகு அவர்களின் ஆயுள் பிரமாணம் தீர்ந்தவுடன் அவ்விடம் இறந்து மறுபடியும் எங் கெந்த தேசத்திலோ எங்கெந்த பாஷைபேசும் வீட்டிலோ போய்ப் பிறந்து பிறகு, அவ்விடம் இருப்பவர்களின்மேல் ஆசையாய் இருப்பார்களேயொழிய அவர்களின்முன்ஜன்ம குடும்பத்தார் விஷயம் ஒன்றும் அவர்களுக்குத் தெரிய வராது. பிறகு, தான் புதிதாய்ப்போய்ச் சேர்ந்த குடும் பத்தில் சிலவருஷங்கள்வரையில் மாத்திரமே ஜீவித்திருந்து மறுபடியும் அவ்விடமும் இறந்து மற்றோர் குடும்பத்தில் போய்ப் பிறப்பார்கள். இதுபோல், ஒவ்வொரு ஸ்திரீ புருஷர்களும் இதுவரையில் எத்தனையோ ஜாதியில் பிறந்து எத்தனையோ ஜன்மங்களை எடுத்திருக்கின்றார்கள். இந்த கலியுகம் முடிவதற்குள் இன்னும் கணக்கில்லாத எத் தனையோ ஜன்மங்களை இப்பொழுதிருக்கும் ஸ்திரீபுருஷர் கள் இனி எடுக்கப்போகிறார்கள். இந்த இறப்பு பிறப்பு

எப்படி இருக்கிறதென்றால், தூங்கி எழுந்திருப்பவனைப் போல் இருக்கிறது. அதாவது, ஓர் வீட்டில் இறப்பதே தூக்கம். இறந்தவன் மற்றோர்வீட்டில் போய்ப் பிறப்பதே தூங்கி எழுந்திருப்பவன். இப்பொழுதிருக்கும் மானவ ஜனங்களெல்லோரும் மனைவிமக்களையும், பந்துஜனங்களை யும், சினேகிதர்களையும், பார்த்துக்கொண்டும், உத்யோக வியாபாரங்களைச் செய்து எல்லா விஷயங்களிலும் விசேஷ ஆசையுடையவர்களாய் இருக்கின்றார்கள். இவ்வாறாக எல்லா ஆசைகளுடன் எத்தனை வருஷங்கள் இருப்பார்க ளென்றால், பத்து, இருபது, முப்பது, அல்லது நாற்பது வருஷங்கள் வரையில் மாத்திரம் ஜீவித்திருப்பார்களே யொழிய அதற்குமேல் இராமல் அவர்கள் பிராணனை விடும்பொழுது மேற்சொல்லிய ஆசைகளையெல்லாம் மறந்து பிராணனைவிட்டு அதன்பிறகு, மற்றொரு தாயின் கர்ப்பத் தில் போய்க் குழந்தையாய்ப் பிறக்கின்றார்கள். அங்கு போய்க் குழந்தைகளாய்ப் பிறந்தபின் அக்குழந்தைக ளுக்கு, எந்த ஆசைகளும், பொய், மோச குணங்கள், சூது, பொறாமை, உள்ளொன்றுவைத்துப் புறமொன்று பேசுதல் இப்படிப்பட்ட இன்னுமுள்ள அனேக துர்க்குணங்களெல் லாம் அக்குழந்தைகளுக்கு இராது. பிறகு, அக்குழந்தைக ளெல்லாம் வளர்ந்து பெரியவர்களான பிறகு, மேற்சொல் லிய குணங்களையெல்லாம் ஒருவரும் கற்றுக்கொடுக்காமலே பூர்வஜன்ம வாசனையினால் அவர்களுக்குத் தனக்குத்தா னாகவே உண்டாகிறது. இந்த ஆசைகளும், நல்ல கெட்ட குணங்களும் முன்ஜன்மங்களில் இருந்தபடியால், அவைக ளெல்லாம் தம்முடன்கூடவே தொடர்ந்து வருகின்றன. இந்த குணங்களெல்லாம் தம்மை எப்படித் தொடர்ந்து வருகின்றனவோ அதை இனி சொல்லுகிறோம்.

ஒருவன் தான் குடியிருக்கும் வீட்டைவிட்டு இன்

ஒரு வீட்டிற்குக் குடிபோகும்பொழுது அவ்வீட்டிலுள்ள தன் சாமான்களையெல்லாம் எடுத்துக்கொண்டுபோவதுமே யல்லாமல் அவ்வீட்டு சுவர்களில் அடித்திருக்கும் ஆணிகளை யெல்லாம் பிடுங்கி எடுத்துக்கொண்டு பிறகு, கிழிந்த முறமும், கட்டைத் துடைப்பமும் அவ்வீட்டில் இருந்தால் தாம் குடிபோகும் வீட்டிற்கு இவையாவும் உதவுமென்று எண்ணி ஒன்றையும் விடாமல் எடுத்துக்கொண்டு இன்னும் ஏதாகிலும் அவ்வீட்டில் இருக்கின்றதா என்ன வென்று அவ்வீட்டையெல்லாம் நன்ருய்ச் சோதித்து ஒன்றுமில்லை யென்று தெரிந்தபின் அவ்வீட்டைவிட்டுப் போவார்கள். அதுபோல், எவரெவர்களுக்கு என்னென்ன பூஜைகள், ஜபங்கள், யோகங்கள், நல்லகெட்ட குணங்கள் இருக்கின்றனவோ அவைகளெல்லாம் அந்த பழைய சரீரத்தில் இராமல் தன்னுடன்கூடவே தொடர்ந்து வருகின்றன. அப்படி வருவதற்குக் காரணம் என்னவென்ருல், தான் குடியிருந்த பழைய சரீரத்தை தகனம்செய்யப்போகிறபடியால் அக்குணங்கள் எதுவும் பழைய சரீரத்தில் இராமல் அந்த ஜீவனுடன்கூடவே தொடர்ந்து வெளிவரும். அதன்பிறகு, மறுபடியும் அந்த ஜீவன் வேறு சரீரத்தில் குடி இருப்பதற்காக எந்த ஸ்திரீ கர்ப்பத்தில், ஆத்மாவாகிய கடவுள் சிசுவை சிருஷ்டிசெய்து வைத்திருக்கின்ருரோ அந்த சிசு சரீரத்தில், இதுவரையில் சொல்லிய ஷை ஜீவனையும், அந்த ஜீவனைப்பற்றியிருந்த எல்லா ஆசாபாசங்களையும், நல்ல கெட்ட குணங்களையும், மனம், புத்தி, சித்த, அஹங்கார மென்று சொல்லப்பட்ட நான்கு அந்தக்கரணங்கள் இவற்றை யெல்லாம் அந்த ஜீவன் மூச்சியென்னும் பிராணனில் ஒன்ருய்ச் சேர்த்துக்கட்டி அதன்பிறகு, ஆத்மாவாகிய கடவுள் அழைத்துக்கொண்டு தான் இந்த ஜீவனுக்காக புதிதாய் சிருஷ்ட்டிசெய்து வைத்திருக்கும் சிசுவின்

தாயினிடம் சென்று அவள் மூச்சை உள்ளுக்கு இழுக்கும் பொழுது அந்த மூச்சியில், அங்கிருந்து அழைத்துவந்த ஜீவன் மூச்சை சேர்ப்பித்து ஆத்மாவாகிய தானும் அந்த மூச்சுடன் சேர்ந்து சிசுவின் பிரம்ம கபாலத்தின் வழியாய் உள்ளேசென்று அங்கிருந்து அழைத்துவந்த மனம், புத்தி சித்த அஹங்காரங்களை அந்த சிசு சரீரத்தில் எங்கெங்கு வைக்கவேண்டுமோ அந்தந்த ஸ்தானத்தில் நிறுத்தி அதன் பிறகு, ஆத்மாவாகிய தான் நிவசிப்பதற்காக சிருஷ்ட்டி செய்து வைத்திருக்கும் சிசுவின் இருதயகமலத்திலுள்ள ஜலத்தில் போய்ச்சேர்ந்து நிவசிப்பார். இதற்கு ஸ்ரீ பகவத்கீதை அ-15, சு-8, பிரமாணம் என்னவென்றால்,

ஸரீரம் யதவாப்நோதி யச்சாப்யுத் க்ராமதீஸ்வரஹ
க்ருஹீ த்வைதாநி ஸம்யாதி வாயுர்கந்தாநிவாஸயாத்.

அந்தந்த ஜீவர்கள் அந்தந்த சரீரத்தைவிட்டுப் போகும்பொழுது அந்தந்த ஜீவர்களுக்கெல்லாம் சாக்ஷி மாத்ரனையும், சுவாமியாயும் இருக்கும் ஆத்மாவாகிய கடவுளானவர் என்னசெய்கிறரென்றல், புஷ்பத்தில் இருக்கும் வாசனையை காற்றானது எவ்வாறு இழுத்துக்கொண்டு செல்லுகிறதோ அதுபோல் முன்சொல்லிய சுவாமியாகிய ஆத்மாவானவர் என்னசெய்கிறரென்றல், அந்தந்த ஜீவனையும், அந்தந்த ஜீவனைப் பற்றியிருந்த எல்லா ஆசாபாசங்களையும், நல்லகெட்ட குணங்களையெல்லாம் அந்தந்த ஜீவர்களின் மூச்சியென்னும் பிராணனில் ஒன்றாய்ச் சேர்த்துக்கட்டி ஆத்மதவாகிய தானும் அந்த ஜீவனுடன் கூடவே சேர்ந்து பழைய சரீரத்தைவிட்டு வெளிவரும். வெளிவந்தபின், ஆம்மாவாகிய தான் வேறு ஸ்திரீ கர்ப்பத்தில் புதிதாய் சிருஷ்ட்டிசெய்து வைத்திருக்கும் சிசுவின் சரீரத்தில் மேற்சொல்லிய ஜீவனைக் கொண்டுபோய் சேர்ப்

பித்துத் தானும் அந்த ஜீவனுடன்கூடவே இருப்பார். இவ்வாருக ஆத்மாவாகிய தான் அந்த ஜீவனுடன் கூடவே இருப்பதற்குக் காரணமென்னவென்ருல், அந்த ஜன்மத்தி லும் அந்த ஜீவன் செய்யும் புண்ணியபாவ கர்மங்களை எல் லாம் பார்ப்பதற்காகவே ஜீவனுடன்கூட ஆத்மாவாகிய கடவுள் தொடர்ந்துகொண்டே வருகிருர். இந்த ஜீவர்கள் மோக்ஷ மென்னும் வீட்டை அடையும்வரையில் ஆத்மாவா கிய தான் ஜீவனுடன் கூடவே ஒவ்வொரு ஜன்மத்திலும் தொடர்ந்துவருவர். பரப்பிரம்மம், ஆத்மா, ஜீவாத்மா, பரமாத்மா, மஹாத்மாக்களுக்கு உள்ள பேதங்களை இனி தெரிவிக்கப்போகிருேம்.

பரப்பிரம்மம், ஆத்மா, ஜீவாத்மா, பரமாத்மா, மஹாத்மாக்களுக்கு உள்ள பேதங்கள்.

"நட்டக்கல்லும் பேசுமோ நாதனுள்ளிருக்கையில்" என்று சிவவாக்கியர் பாடலாய்ப் பாடிவிட்டாரே யொழிய நட்டக்கல் என்பது எது, நாதன் என்பது யார். அந்த நாதன் சரீரத்தில் எந்த இடத்திலிருந்து என்னவேலை செய்கிருர் என்று இது முதலான ரகஸ்யங்களை யெல்லாம் சிவவாக்கியர் சொல்லவில்லை. ஆதலால்,

நாதனென்பது யார்? அவருக்கு இன்னும் எத்தனை பெயர்களுண்டு. அவர் சரீரத்திற்குள் எந்த இடத்திலிருந்து என்னென்ன வேலைகளைச் செய்கின்ருரோ அதன் ரகஸ்யங் களை யெல்லாம் இனி இதனடியில் சொல்லப்போகிருேம்.

உலகத்திலுள்ள மானவ ஜனங்களெல்லோரும் கட வுள், கடவுள் என்று சொல்லுகிருர்களல்லவா? அக்கடவு ளானவர், நமக்கெதிரிலும், மற்ற எல்லா இடங்களிலும்

காணப்படும் வெளிக்குள் வெளியாய் அடங்கியிருக்கின்ருரே யொழிய நமது கண்களுக்கு எதிரில் காணப்படும் வெளி கடவுளல்ல, கடவுள் வெளிக்குள் வெளியாய் எவ்வாறு அடங்கியிருக்கின்ருரோ அதுவிஷயம் இனி சொல்லப் போகிருேம். வெளிக்குள் காற்று அடங்கியிருக்கிறது. அக்காற்ருனது என்னசெய்கிறதென்ருல். எவனுகிலும் ஒருவன் மல்லிகை முல்லை முதலான புஷ்பங்களைக் கொண்டுவந்தால் அதிலுள்ள வாசனையை அந்த புஷ்ப சமீபமாயிருக்கும் காற்ருனது இழுத்துக்கொண்டு அந்த வாசனையை சிலதூரத்திலிருக்கும் தன்சம்பந்தமான காற்றினிடம் அனுப்புகிறது. அப்பொழுது அங்குள்ள மனிதர்கள் தாம் புஷப்பத்தை பார்க்காவிட்டாலும், புஷ்ப வாசனை அடங்கியிருக்கும் காற்றை மூக்குத் துவாரங்களின் வழியாய் உள்ளுக்கிழுத்து புஷ்ப வாசனையை அறிகிருர்கள். வெளிக்குள் காற்றும், அக்காற்றுக்குள் புஷ்பவாசனையும், எவ்வாறு அடங்கியிருக்கிறதோ அதுபோல் கடவுளும் பெறும் வெளிக்குள் வெளியாய் அடங்கியிருக்கின்ருர். இந்த வெறும் வெளிக்குப் பரப்பிரம்மமென்று ஒரு பெயரை வைத்தார்களே யொழிய அந்த வெளிக்கு எந்த பெயரும், ரூபமும், எந்த நிரமும் இல்லவேயில்லை. இந்த வெட்ட வெளியிலிருந்து கணக்கில்லாத அனேகம் சிறிது சிறிதாய் அணு சொரூபமாய்ப் புரப்பட்டு வெளிவந்தன. இந்த சிறியசிறிய அணுக்களுக்கு ஆத்மாக்கள் என்று இன்னொரு பெயர் வைத்தார்கள். இந்த ஆத்மாக்கள் பரப்பிரம்மத்திலிருந்து ஏன் புரப்பட்டு வந்தனவோ அது விஷயம் இனி சொல்லப்போகிருேம்.

இந்தியாவில் ஏறக்குறைய 40-கோடி ஸ்திரீ புருஷர்கள் இருக்கின்ருர்கள். சைனுவில் 43-கோடி, ஜப்பானில் 9-கோடி ஸ்திரீ புருஷர்கள் இருக்கின்ருர்கள். இதுபோல்,

ஆப்ரிகா, அமெரிகா, ஐரோப்பா, டிபெட்டு, ஜர்மனி, ரஷ்யா, அரப்பியா, பர்மா, சிலோன், பிணங்கு, சிங்கப்பூர் இன்னும் இப்படிப்பட்ட அனேக தேசங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு தேசத்திலும் எத்தனையோ கோடானு கோடி ஸ்திரீபுருஷர்களும், அதுபோல் ஜீவராசிகளும் இருக்கின்றன. இந்த ஸ்திரீ புருஷர்கள் எல்லோரும் தினந்தோறும் செய்துவரும் புண்ய பாவங்களையெல்லாம் கடவுளானவர் எந்த இடத்திலிருந்து பார்ப்பார். அவரால் பார்க்க முடியாததனுல்பரப்பிரம்மமாகிய தான் என்னசெய்தாரோ அதை இனி சொல்லப்போகிறோம்.

பரப்பிரம்மமென்பது மிகவும் பரிசுத்தமானது. இந்த பரப்பிரம்மமே கடவுள். அதிலிருந்து அணு சொரூபமாயும் சிறிது சிறிதாயும் அனேகம் புறப்பட்டு வந்ததுகள். இவைகளுக்கு ஆத்மா என்று பெயர் வைத்தார்கள். பரப்பிரம்மமென்பது எப்படி பரிசுத்தமானதோ அதுபோல் இந்த ஆத்மாக்களும் பரிசுத்தமானவைகளேயாம். உலகத்தில் எத்தனை கோடானுகோடி ஸ்திரீ புருஷர்களும், அதுபோல் ஜீவராசிகளும் இருக்கின்றனவோ அந்தந்த ஜீவராசிகளுக்குத் தக்கபடி பெரிதாயும், சிறிதாயும், அங்குல பிரமாண ஆகாசம் அந்தந்த ஜீவர்களின் இருதய கமலத்தில் இருக்கின்றன. அந்த இருதயகமலத்தில் மயிர் கனம் அவ்வளவும் குறையாமல் சமுத்திரம்போல் ஜலம் நிறைந்திருக்கும். அந்த ஜலத்தில் ஆத்மாவானவர் போய்ச் சேர்ந்தார். எல்லா ஜீவர்களின் இருதயகமலத்திலிருக்கும் ஜலத்தில் ஆத்மாபோய்ச் சேர்ந்ததனுல் அந்த ஆத்மாவிற்கு ஜீவாத்மா என்று மற்றொரு பெயருண்டாயிற்று. பரப்பிரம்மமாகிய ஓர் வஸ்துவிற்கே ஆத்மா வென்றும், ஜீவாத்மாவென்றும், பரமாத்மாவென்றும், மஹாத்மாவென்றும் இத்தனை பெயர்கள் உண்டாயிற்று. பர என்ருல், இதரர்கள்;

ஆத்மா என்றால், எல்லா ஜீவராசிகளின் இருதயகமலத்தில் நிறைந்திருக்கப்பட்டது. ஆதலால், இதற்குப் பரமாத்மா என்று பெயருண்டாயிற்று.

இந்த ஆத்மாவானவர் இருதயகமலத்திலிருக்கும் ஜலத்தில் போய்ச் சேர்ந்ததனால் அவருக்கு "நாராயணன்" என்று பெயருண்டாயிற்று. அதாவது, நார என்றால் ஜலம். அயன என்றால், ஸ்தானம். ஜலத்தில் ஸ்தானமாய் நிவசித்துக்கொண்டிருப்பதனால், அவருக்கு நாராயணன் என்று பெயருண்டாயிற்று. இதன்றியும் ஆலிலை மேல் பள்ளி கொண்டான் என்றும் சொல்வார்கள். அவ்வாறு சொல்வதற்குக் காரணமென்னவென்றால், இருதயகமலத்தை இரு பிளப்பாய்ப் பிளந்து பார்க்கும்பொழுது அது ஆலிலை போல் இருக்கும். அந்த இலைமேல் ஆத்மா என்னும் கடவுள் ஸயனித்துக்கொண்டிருப்பதனால் அந்த ஆத்மாவிற்கு ஆலிலைமேல் பள்ளிகொண்டான் என்று பெயருண்டாயிற்று. இந்த ஆத்மாவின் விஷயம் இன்னும் சொல்லுகிறோம் கேளுங்கள்.

எல்லா ஜீவராசிகளின் நாக்கின் கீழ் இருந்து எச்சில் ஊற்று சுரந்து வாயிற்குள் வரும். பிறகு அந்த எச்சிலை விழுங்குவார்கள். நாக்கின் கீழ் எச்சில் ஊற்று ஜலம் எவ்விடமிருந்து வருகிறதோ அதை இனி சொல்லப்போகின்றோம். இருதய கமலத்திலிருக்கும் ஜலத்தில் ஆத்மா என்னும் கடவுள் நிவசித்துக்கொண்டிருப்பதனால் அந்த ஜலத்திலிருந்து ஊற்று கிளம்பி நாக்கின் கீழ்வந்து அதன் பிறகு வாயிற்குள் வரும். அப்பொழுது எச்சிலென்கிற ஜலத்தை அடிக்கடி விழுங்கிக்கொண்டே இருப்பதனால், இருதயகமலத்திலிருக்கும் ஜலத்திலிருந்து ஊற்று எப்பொழுதும் சுரந்துகொண்டே இருக்கும். இரவில் தூங்கும்பொழுது எச்சிலை விழுங்குவதில்லை. அப்பொழுது இருதய கமலத்தி

லிருக்கும் ஜலத்திலிருந்து ஊற்று சுரப்பதில்லை. பிறகு காலையில் எழுந்தவுடன் எச்சிலை விழுங்குவார்கள். அதுமுதல் மறுபடியும் இருதயகமலத்திலிருந்து ஊற்று சுரந்து கொண்டே இருக்கும். இதற்குத் திருஷ்ட்டாந்தம் என்னவென்றால், ஆற்றில் குழியெடுத்து ஜலத்தைக் கைகளால் எப்பொழுதும் இரைத்துக்கொண்டே இருந்தால் அந்த பள்ளத்திலிருந்து விசேஷமாய் ஊற்று ஜலம் வந்து கொண்டே யிருக்கும். இரைப்பதை நிறுத்திவிட்டால் ஊற்று ஜலம் வராமல் நின்றுவிடும். அதுபோல், எச்சிலை விழுங்கிக்கொண்டே இருந்தால் இருதயகமலத்தில் ஆத்மா நிவசித்துக்கொண்டிருக்கும் ஜலத்திலிருந்து ஊற்று சுரந்து கொண்டேயிருக்கும். இருதயகமலத்திலிருக்கும் ஜலத்தின் மகிமையை இன்னும் சொல்லுகிறோம் கேளுங்கள்.

சரீரத்தின்மேல் சிரங்கு, கட்டி, ரணம், படைகள் இன்னும் இப்படிப்பட்ட அனேக விதங்களாகிய சர்ம வியாதிகள் வருகின்றன. ஆனால், வாய் உள் தவடைகளிலும், நாக்கிலும் எந்தகாலத்திலும் கட்டி சிரங்கு முதலாகிய எந்த வியாதிகளும் வருவதில்லை. ஏதாகிலும் ஒரு சமயம் ரத்தம் வரும்படி நாக்கைக் கடித்துக்கொண்டால் எந்த மருந்துகளும் நாக்கிற்குத் தடவாமலே உடனே ஆறிவிடும். இதற்குக் காரணம் என்னவென்றால், எச்சிலென்பது ஆத்மாவாகிய கடவுள் நிவசித்துக் கொண்டிருக்கும் ஜலத்திலிருந்து ஊற்றாய் சுரந்து வாயில்வந்து எப்பொழுதும் வாயெல்லாம் அந்த எச்சில் ஜலம் நிறைந்திருப்பதனால் வாயிற்குள் எந்த சிரங்குகளும், எந்த கட்டிகளும் வருவதில்லை. இதற்கு இன்னொரு திருஷ்ட்டாந்தம் சொல்லுகிறோம் கேளுங்கள்.

நாய், பூனை, பசு, எருது இன்னுமுள்ள மிருகங்களுக்கு, சரீரத்தின்மேல் அங்கங்கு ரணம் கண்டால் அந்த ரணத்தை

அவைகள் அடிக்கடி நாக்கினல் நக்கிக்கொண்டேயிருக்கும். அப்படி நக்குவதனல், அதி சீக்கிரமாய் அந்த ரணம் ஆறி விடும். அப்படி ஆறுவதற்குக் காரணம் என்னவென்றல், இருதய கமலத்திலிருக்கும் ஜலத்தில் ஆத்மாவாகிய நாரா யணன் நிவசித்துக்கொண்டிருக்கின்றர். அவர் சம்பந்த மான நீர், ஊற்றய்ச் சுரந்து வாயிற்குள் வருவதனல் வாய் உள் தவடையிலும், நாக்கிலும் எந்த சிரங்குகளும், கட்டி களும் வருவதில்லை. இப்படிப்பட்ட மஹா தீர்த்தமாகிய எச்சிலை நாய், பூனை, பசு முதலாகிய மிருகங்கள் நாக்கினல் நக்கிக்கொண்டே இருப்பதனல், அந்த எச்சில் ஜலம் பட்ட வுடன் அவைகளுக்கு உண்டாயிருக்கும் ரணங்களெல்லாம் ஆறிவிடும். இதன்றியும் இந்த எச்சில் ஜலத்தின் ரகஸ்யம் இன்னும் சொல்லுகிறேம் கேளுங்கள்.

பிராணன் சரீரத்தைவிட்டுப் போகும்பொழுது இரு தய கமலத்தில் சமுத்திரம்போல் நிறைந்திருந்த ஜலம் சிறு கச்சிறுக வற்றிக்கொண்டே வருவதனல் அந்த சமயத்தில் இருதயகமலத்திலிருக்கும் ஜலத்தில் ஊற்று சுரப்பதில்லை. ஊற்று இருதயகமலத்தில் சுரக்காததனல் எப்பொழுதும் வாயில் ஊரிக்கொண்டிருந்த எச்சில் ஜலம் சுரக்காமல் நின்றுவிடும். அப்பொழுது வாயில் கையை வைத்துப் பார்த்தால் நாக்கில் கொஞ்சமாகிலும் ஜலம் இராமல் நாக்கு மிகவும் பிருசாயும், நாக்கின்மேல் சொர சொரப் பாயும் முள்ளுபோல் காணப்படும். அப்பொழுது இனி பிழைக்கமாட்டார் என்று சொல்லிவிடுவார்கள். ஆத்மா இருதய கமலத்திலிருந்து கிளம்பிப் போகும்பொழுது இருதய கமலத்திலிருக்கும் ஜலமெல்லாம் பூர்த்தியாய் இல் லாமல் வற்றிவிடும். அதன் பிறகு இந்த ஜீவன் குடியிருப் பதற்காக மறுபடியும் வேறு சிசுவு சரீரத்தை எந்த வீட்டி லிருக்கும் ஸ்திரீ கர்ப்பத்தில் ஆத்மாவாகியதான் புதிதாய்

சிருஷ்ட்டி செய்துவைத்தாரோ அந்த இடத்திற்கு இந்த ஜீவனைக் கொண்டுபோய் அந்த சிசுவு சரீரத்தில் ஆத்மாவாகிய தான் சேர்ப்பித்துப் பிறகு, தான் நிவசிப்பதற்காக அச்சிசு இருதயகமலத்தில் சிருஷ்ட்டி செய்து வைத்திருக்கும் ஜலத்தில் ஆத்மாவானவர் போய்ச் சேருவார். இதுபோல் ஒவ்வொரு ஜன்மத்திலும் ஆத்மாவாகிய கடவுள் ஜீவனுடன் கூடவேசென்று என்னென்ன வேலைகளை செய்து வருகிறாரோ அவற்றையெல்லாம் இனி சொல்லப்போகிறோம்.

உலகத்திலுள்ள எல்லா ஸ்திரீ புருஷர்களுக்கும் தலைநோய், சுரம், கட்டி, சிரங்கு, வயிற்றுவலி, மூலவியாதி, பார்சவாயுவு, தேம்பல், படைகள், குஷ்ட்ட வியாதி, இன்னும் இப்படிப்பட்ட அனேக விதங்களாகிய வியாதிகள் வந்து அவஸ்தைப்படுவதை நாமெல்லோரும் பிரத்யக்ஷமாய் தினந்தோறும் பார்த்துவருகிறோம். இவர்களை அல்லாமல் மற்றுஞ் சிலர் கூன், குருடு, நொண்டி இன்னும் இப்படிப்பட்ட அனேக விதங்களாகிய அங்க யீன சரீரமுடையவர்களும் இருக்கின்றார்கள். இவர்களுக்கெல்லாம் மேற்சொல்லிய வியாதிகளும், இப்படிப்பட்ட அங்கயீன சரீரமும் வருவதற்குக் காரணம் எதுவோ அதை இனி சொல்லப்போகிறோம்.

ஒருவன் மிகவும் சொற்ப குற்றம் செய்தால் கோர்ட்டு கலையும் வரையில் மேஜஸ்ரேட்டு அவனுக்கு தண்டனையை விதிப்பார், அதற்குமேல் இன்னும் சிறிதுகுற்றம் அதிகமாய்ச்செய்தால் பதினைந்து தினங்கள் தண்டனைவிதிப்பார். இதுபோல் அந்தந்த குற்றங்களுக்குத் தக்கபடி ஒருமாதம் இரண்டு மாதம், மூன்று நான்கு மாதம், ஒன்று, இரண்டு, மூன்று, ஐந்து, பத்து பதினைந்து வருஷங்கள் இவ்வாறாக அந்தந்த குற்றங்களுக்குத் தக்கபடி கோர்ட்டார் ஒரே

விதமாகிய சிக்ஷையை விதிப்பாரே யொழிய இதற்குமேல் சிக்ஷையை விதிக்க கோர்ட்டாரால் முடியாது. அந்தந்த குற்றங்களுக்குத் தக்கபடி அவரவர்களின் இருதயகமலத்தி லிருக்கும் ஆத்மாவாகிய கடவுள் எத்தனை விதங்களாகிய சிக்ஷகளை விதிக்கின்றாரோ அதுவிஷயம் இனி தெரிவிக் கப்போகிறோம்.

அந்தந்த ஸ்திரீ புருஷர்களின் இருதய கமலத்தில் சாக்ஷிமாத்ரனாய் நிவசித்துக் கொண்டிருக்கும் ஆத்மா என்னும் கடவுளானவர் என்ன செய்கிறாரென்றால், அந் தந்த ஸ்திரீ புருஷர்கள் எதையெதை மனதில் நினைக்கின் றார்களோ அவற்றையெல்லாம் உடனுக்குடனே அவரவர் களில் இருக்கும் ஆத்மா யென்னும் கடவுள் அறிகின்றார். கடவுள் எவ்விடமோ தூரத்தில் இருந்தால் அவரவர்கள் தினந்தோறும் செய்யும் புண்ணிய பாவ கர்மங்களையெல் லாம் எப்படிப் பார்ப்பார். எவ்வளவேனும் அவரால் பார்க்கமுடியாது. ஆதலால், எல்லா ஜீவராசிகளினுடைய இருதய கமலத்தில் ஆத்மா என்னும் கடவுள் வந்துசேர்ந்து அவரவர்கள் தினந்தோறும் செய்யும் புண்ணிய பாவ கர் மங்களை உடனுக்குடனே அறிந்து அந்தந்த புண்ய பாவங் களுக்குத் தக்கபடி எப்படிப்பட்ட சிக்ஷகளை ஆத்மா விதிக்கின்றாரோ அதை இனி சொல்லப்போகிறோம்.

ஸ்திரீபுருஷர்கள் எல்லோரும் முன் ஜன்மத்தில் செய்த புண்ணிய பாவ கர்மங்களுக்குத் தக்கபடி அதன் பலனை இந்த ஜன்மத்தில் அனுபவிக்கின்றார்களே யொழிய இந்த ஜன்மத்தில் செய்த புண்ணிய பாவ கர்மங்களினால் உண் டானதல்ல. இந்த ஜன்மத்தில் செய்யும் புண்ணிய பாவ கர்மங்களின் பலத்தை இனி எடுக்கப்போகும் ஜன்மத்தில் அனுபவிக்கப் போகின்றார்கள். இந்த ஜன்மத்தில் செய்யும் பாவகர்மத்திற்காக இனி எடுக்கப்போகும் ஜன்மத்தில்

அவனுக்கு எப்படிப்பட்ட வியாதிகளை ஆத்மாவாகிய கடவுள் சிக்ஷையாய் விதிக்கப்போகின்றாரோ அதை இனி சொல்லப்போகிறோம்.

யாராகிலும் ஒருவன் மிகவும் சொல்ப பாவம் செய்தால் அதை அவனது இருதய கமலத்திலிருக்கும் ஆத்மா என்னும் கடவுள் உடனே அறிகிறார். அவ்வாறு ஆத்மா அறிந்தபின், அவன் இனி எடுக்கப்போகும் ஜன்மத்தில் இன்னவருஷம் இன்ன மாதம் இந்ததேதி இத்தனை மணிக்குச் சொல்ப சுரம் வந்து இத்தனை தினங்கள்வரையில் அந்த சுரத்தினால் கஷ்டம் அனுபவிக்க வேண்டுமென்று அந்த பாவ கர்மத்திற்காக சொல்ப சுரத்தை ஆத்மா சிக்ஷையாய் விதிக்கின்றார். இதுபோல், அப்போதைக்கப் போது அனேகமுறை செய்துவரும் பாவ கர்மத்திற்காக அனேகமுறை அந்தந்த பாவகர்மங்களுக்குத் தக்கபடி சொல்ப சுரம், விசேஷ சுரம், அதுபோல் சிறிய தலைவலி, விசேஷ தலைவலி, அதுபோல் சிறிய வயற்றுவலி, விசேஷ வயற்றுவலி இவ்வாறாக அவரவர்களின் இருதய கமலத்திலிருக்கும் ஆத்மா என்னும் கடவுள் அந்தந்த பாவத்திற்குத் தக்கபடி வியாதியை உண்டாக்குவார்.

இதைவிட பாவம் அதிகமாய்ச் செய்தால் மூலவியாதி, பார்சவாய்வு, கபத்துடன்பெருமூச்சு உண்டாவது, அனேக விதங்களாகிய படைகள், காமாலைகள், குன்மவியாதி, வெள்ளைகுஷ்டம், கைகால்கள் குறைந்து அதிலிருந்து சீழ், ரத்தம் வந்து அவனும், இதரர்களும் சகிக்கக்கூடாத கெட்ட நாற்றத்தை உண்டாக்கும். இதற்கு குஷ்ட்ட வியாதி யென்று சொல்லப்படும். ஆத்மா என்னும் கடவுள் குஷ்ட்ட வியாதியுடையவனது இருதயகமலத்தில் இருந்த போதிலும் அவனுக்கிருக்கும் கெட்ட நாற்றம் அவனுக்குள்ளிருக்கும் ஆத்மா யென்னும் கடவுளைப் பற்றாது.

அதெப்படியென்றால், சூர்யனது கிரணங்கள் துர்கந்தத்தி லும், சுகந்தத்திலும் வியாபித் திருந்தபோதிலும் அந்த துர்க்கந்தம், சுகந்தம் அதாவது, கெட்ட வாசனை, நல்ல வாசனையில் சூர்யனது கிரணங்கள் வியாபித் திருந்த போதிலும் அந்த கெட்ட வாசனை, நல்ல வாசனை சூர்யனை எப்படிப் பற்றாதோ அதுபோல் அந்தந்த ஜீவர்கள் செய் யும் புண்ணிய பாவ கர்மங்களும், அந்தந்த ஜீவர்களுக் கிருக்கும் கெட்ட நாற்றங்கள் எதுவும் அவர்களின் இருதய கமலத்திலிருக்கும் ஆத்மாவைப் பற்றாது.

ஆத்மா என்னும் கடவுள் எல்லா ஜீவராசிகளினுடைய இருதய கமலத்தில் நிவசித்துக்கொண்டு அவரவர்கள் தினந் தோறும் செய்துவரும் புண்ணிய பாவங்களையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்து அந்தந்த புண்ணிய பாவங்களுக் குத் தக்கபடி சுக துக்கங்களைக் கொடுக்கின்றாரென்று அனேக மானவ ஜனங்களுக்குத் தெரியவராது கோவில் களில் இருக்கும் விக்கிரகங்களே கடவுள் என்று ஜனங்கள் நம்பி அந்த விக்ரகங்களைப் பார்த்துக் கும்பிட்டுத் தங்க ளுக்கு வேண்டும் வரத்தை மனதில் நினைப்பார்கள். கல் விக்ரகங்களைப் பார்த்து அவர்களுக்கு வேண்டும் வரத்தை மனதில் நினைத்தவுடனே அவர்களின் இருதய கமலத்தி லிருக்கும் ஆத்மாவானவர் உடனே அறிந்து அவர்கள் கேட்ட வரங்களை அந்த ஜன்மத்தில் ஆத்மாவாகிய தான் கொடாமல் மறு ஜன்மத்தில் கொடுப்பார்.

"நட்டகல்லும் பேசுமோ நாதனுள்ளிருக்கையில்"

என்று சிவவாக்கியர் சொன்னதாய் முன் சொல்லியிருக் கின்றோமல்லவா? நட்டக்கல் என்பது கோவில்களில் இருக்கும் விக்ரகங்கள். ஜனங்கள் தமக்கு வேண்டுவதை மனதில் நினைத்து அந்த விக்ரகங்களைக் கேழ்ப்பார்கள். அவ் விக்ரகங்கள் கல்லாயிருப்பதனால் ஜனங்கள் கேழ்ப்

பதை தெரிந்துகொள்ள அக்கல்லாகிய விக்ரகங்களுக்குச் சக்தியிராது. "நாதனுள்ளிருக்கையில்" நாதனென்பது எதுவென்றால், இதுவரையில் சொல்லிவந்த ஆத்மா வென்னும் கடவுளேயொழிய இதைவிட "நாதன்" வேறொருவரு மில்லை. இந்த ஆத்மா யென்னும் நாதனாகிய கடவுள் எல்லா ஜீவராசிகளின் இருதய கமலத்திலிருந்து அவரவர்கள் தினந்தோறும் செய்துவரும் புண்ணிய பாவங்களை யெல்லாம் பார்த்துக்கொண்டிருந்து அந்தந்த புண்ணிய பாவங்களுக்குத் தக்கபடி சுகதுக்கங்களை ஆத்மாவானவர் கொடுத்து வருகிறார். அந்தந்த பாவத்திற்குத் தக்கபடி ஆத்மாவானவர் வியாதிகளையும் கொடுக்கிறார் என்று இது வரையில் சொன்னோம். வியாதிகள் எதுவும் இல்லாத வர்கள் அநேகர் இருக்கின்றார்கள். அப்படி இருப்பதற்குக் காரணம் என்னவென்றால், முன் ஜன்மத்தில் அவர்கள் எந்த பாவ கர்மங்களையும் செய்தவர்களல்ல. அதனால் அவர்களுக்கு எந்த வியாதியும் இந்தஜன்மத்தில் வரவில்லை. இதைவிட பெருத்த பாவங்களைச் செய்தவர்களுக்கு இன்னும் எப்படிப்பட்ட அங்கயீனமுள்ள வியாதிகள் வருகின்றனவோ அதை இனி சொல்லப்போகிறோம்.

சிலர் அஹங்காரத்தினால் விசேஷ துர்மார்க்க கார்யங்களைச் செய்து அநேகர்களின் மனதை நோகும்படிச் செய்தவர்களும் இருக்கின்றார்கள். இவர்கள் விசேஷ துர்மார்க்க காரியங்களைச் செய்ததையெல்லாம் அவரவர்களின் இருதய கமலத்திலிருக்கும் ஆத்மா யென்னும் கடவுள் பார்த்துக்கொண் டிருந்ததனால், இவனுக்குத் தக்க சிக்ஷையை விதிக்கவேண்டுமென்று அந்தந்த சரீரத்தி லிருக்கும் ஆத்மாவாகிய கடவுள் நினைத்து ஒருவன் செய்த பாவகர்மத்திற்காக அவன் கர்மானுசாரமாய் இனி எடுக்கப் போகும் ஜன்மத்தில் அவனுக்காக நொண்டி சிசுவை ஓர்

ஸ்திரீ கர்ப்பத்தில் சிருஷ்ட்டிசெய்து அதன்பிறகு அவனைக் கொண்டுபோய் அந்த நொண்டி சரீரத்தில் போட்டுத் தானும் அவனுடன் கூடவே அந்த நொண்டி சரீரத்தில் இருப்பார். அப்படி இருப்பதற்குக் காரணம் என்ன வென்றால் அந்த நொண்டி ஜன்மத்தில் அவன் என்ன புண்ய பாவங்களைச் செய்கின்றானோ அதைப் பார்த்திருந்து அந்த புண்ணிய பாவத்திற்குத் தக்கபடி அதற்கு முன் எடுக்கப்போகும் ஜன்மத்தில் சுக துக்கங்களைக் கொடுப்ப தற்காக பிரவேசிக்கின்றார். அந்தந்த ஜீவர்கள் தம் சொந்த வீடாகிய மோக்ஷமென்னும் வீட்டை அடையும் வரையில் அந்தந்த ஆத்மாக்கள் அவர்களுடன் கூடவே தொடர்ந்து வந்துகொண்டே யிருப்பார். மற்றொருவன் சரீரத்திலிருக் கும் ஆத்மாவானவர் அவன் செய்த பாவகர்மத்திற்குத் தக்கபடி அவனை விசேஷ செவிடனாய்ப் பிறப்பித்துத் தானும் அவனுடன் கூடவே அந்த செவிட்டு சரீரத்தில் செல்வார். வேறொருவன் சரீரத்திலிருக்கும் ஆத்மாவான வர் அவன் செய்த பாவத்திற்காக அவனை குருடனாய்ப் பிறப்பித்துத் தானும் அவனுடன் கூடவே அந்த குருட்டுச் சரீரத்தில் போய்ச் சேருவார். இவ்வாறாக அந்தந்த ஜீவர் களில் இருக்கும் ஆத்மாக்கள் உயர்வு, தாழ்வான சிக்ஷை களை விதித்து ஆத்மாக்களாகிய தாமும், அவர்களுடன் கூடவே சென்று அந்தந்த ஜன்மங்களில் என்னென்ன நல்ல ;கெட்ட கார்யங்களைச் செய்கின்றார்களோ அதை யெல்லாம் பார்த்திருந்து அதற்குத்தக்க தண்டனையை அடுத்த ஜன்மத்தில் விதிப்பார். இப்படிப்பட்ட அனேக விதங்களாகி சிக்ஷைகளை கோர்ட்டு மேஜிஸ்ரேட்டு சிக்ஷிக்க அவரால் முடியுமா? எவ்வளவேனும் முடியாது. ஒருவனை குருடனாய் சிருஷ்ட்டித்த விஷயம் இதுவரையில் முன் சொன்னோமல்லவா? அந்த துன்மார்க்கன் குருட்டுச்

சரீரத்தில்போய்ச் சேர்ந்த பிறகு அந்த ஜன்மத்தில் அவன் என்ன செய்கின்ருனே அது விஷயம் இனி சொல்லப் போகிறேம்.

இவன் பிறக்கும்பொழுதே குருடனுய்பிறந்து வளந்து பெரியவனுன பிறகு, அந்த குருடன் என்ன சொல்லுகிருனென்ருல், ஐயோ! முன் ஜன்மத்தில் நான் என்ன பாவம் செய்தேனே தெரியவில்லை. இரண்டு கண்களும் இல்லாமல் பிறந்து துக்கத்தை அனுபவிக்கின்றேன் என்று மிகவும் மனம் நொந்து ராமா, ராமா என்று எப்பொழுதும் கடவுளைத் துதி செய்துகொண்டே இருப்பான். இவனுக்குத் தெரியாமல் இவன் கால் யார்மீதாகிலும் பட்டால் சுவாமீ நான் குருடன் என் கால்பட்டது மன்னியுங்கள் என்று மிகவும் வணக்கமாய் அவர்களைக் கேட்டுக்கொள்வான். இதுபோல் தன் மரணகாலம் வரையில் அவன் ஒருவருக்கும் தீங்குசெய்யாமல் தன் மனதை நொந்து எல்லோருக்கும் அவன்மேல் கருணை உண்டாகும்படி கெஞ்சிக்கேட்டு பிச்சை யெடுப்பான். இவற்றை யெல்லாம் அவன் இருதய கமலத்திலிருக்கும் ஆத்மாவாகிய கடவுள் பார்த்து, குருட்டுச் சரீரம் வந்தபின் இவனுக்கு நல்ல புத்தி வந்தது என்று அவனுக்குள்ளிருக்கும் ஆத்மாவானவர் தெரிந்துகொண்டு, இவன் முன் ஜன்மத்தில் விசேஷ தீங்குசெய்து பாவமென்னும் மூட்டையை சம்பாதித்துக் கொண்டான். அதனுல் இவனைக், குருடனுய் சிருஷ்ட்டித்தேன். இவன் இந்த ஜன்மத்தில் ஒரு பாவகார்யமும் செய்யாமல் எல்லோருக்கும் இவன்மேல் கருணை உண்டாகும்படி கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். ஆதலால், கண்ணில்லாமல் இருக்கும் இந்த குருட்டுச்சரீரம் போனவுடன் இவனை நல்ல வீட்டில் சிருஷ்ட்டி செய்யவேண்டுமென்று அவனுக்குள் சாக்ஷி சொரூபமாயும், ஜீவாத்மாவாயும் இருக்கும் கடவு

ளானவர் தீர்மானம்செய்து, அதன் பிறகு அவன் குருட்டு சரீரம் போனபின் அவனை நல்ல செல்வமுள்ளவர்களின் வீட்டில் ஆத்மாவாகிய தான் கொண்டுபோய்ப் போட்டு, அந்த ஜன்மத்தில் அவன் என்ன செய்கிருனே என்பதை பார்ப்பதற்காக தானும் அவனுடன் கூடவே வருவார். இவ்வாருகவே ஆத்மாவாகிய கடவுள் எல்லா ஜீவராசிகளின் இருதய கமலத்தில் இருந்து அவரவர்கள் தினந்தோறும் செய்துவரும் புண்ணிய பாவங்களுக்குத் தக்கபடி பலத்தைக்கொடுத்துக்கொண்டு வருகிருர். இந்த ரகஸ்யம் ஜனங்களுக்குத் தெரியாமல் கோவிலுக்குச் சென்று அங்குள்ள விக்ரகங்களைப் பார்த்து அவைகளே நிஜமாகிய கடவுளென்று நம்பிக்கும்பிட்டு, தமக்குவேண்டும் வரங்களை மனதில் நினைத்துக்கொள்வார்கள். அவர்கள் அவ்வாறு மனதில் நினைத்த தக்ஷணமே அவர்களின் இருதயகமலத்திலிருக்கும் ஆத்மாவிற்கு உடனே தெரியவரும். அதன்பிறகு, அவர்கள் மரணமடையும்பொழுது ஆத்மாவாகிய தானே அவர்களை வேறு சரீரத்தில் கொண்டுபோய்ச் சேர்ப்பித்து தானும் அவர்களுடன் கூடவே சென்று, அவர்களின் இருதயகமலத்தில் நிவசித்துக்கொண்டிருந்து முன் ஜென்மத்தில் அவர்கள் கேட்ட வரத்தை அந்த ஜன்மத்தில் கொடுப்பார் என்று இன்னொரு முறையும் சொல்லுகிறேம்.

மானவ ஜனங்களெல்லோரும் இதுவரையில் அனேக ஜன்மங்களெடுத்து ஒவ்வொரு ஜன்மத்திலும் வரும் தாய்த் தந்தைகள், மனைவி, மக்கள், பந்துஜனங்களுடன் கூட சில வருஷங்கள் வரையில் மாத்திரமே எல்லா பந்துக்களின் மீதும் எல்லா வஸ்துக்களின்மீதும் ஆசையாயிருப்பார்கள். இவ்வாருக இருந்து தம் தம் ஆயுள் தீர்ந்து மரணமடையும்பொழுது எல்லா பந்துக்களின்மீதும், வஸ்த்துக்களின்மீதும் இருந்த ஆசைகளையெல்லாம் மறந்து

பிராணனை விடுவார்கள். அதன் பிறகு அந்த ஜீவன் மற்றொரு தாயின் கர்ப்பத்தில் போய்ச் சேர்ந்து பிறகு சிசுவாய்ப் பிறக்கும். அங்குபோய்ச் சிசுவாய்ப் பிறந்து வளர்ந்தபின் மறுபடியும் அந்த ஜன்மத்தில் புதிதாய் வந்த தாய்த் தந்தைகள் மீதும், மனைவி மக்கள் மீதும், வஸ்த்து வாகனங்களின் மீதும் ஆசையாய் இருப்பார்களே யொழிய அதற்கு முன் ஜன்மத்திலிருந்த தாய்த் தந்தைகள், மனைவி மக்கள், பந்து ஜனங்கள் முதலானவர்களின் ஞாபகம் எதுவும் அவர்களுக்கு இராது. ஆனால், இவர்கள் எத்தனை ஜன்மங்கள் எடுத்ததும் எங்கெந்த ஜாதியில் பிறந்து என்னென்ன வேலை செய்ததும் இதுகளெல்லாம் அவர்களுடன் கூடவே தொடர்ந்து வரும் ஆத்மா என்னும் கடவுளுக்கு மாத்திரம் தெரியவரும். இதுபோல் ஒவ்வொரு ஸ்திரீ புருஷர்களும் ஒவ்வொரு ஜன்மத்தில் பிறந்து எனது வீடு, எனது தோட்டம், எனது பூமி, எனது துரவுகள், எனது மனைவி, எனது மக்கள் என்று தனதல்லாத வஸ்த்துக்களை யெல்லாம் தனதாய் நினைத்துக் கடைசியில் எல்லாவற்றை யும் மறந்து தான் குடியிருந்த சரீரத்தைவிட்டுத் தானும், தனக்குச் சாக்ஷியாய்த் தன் இருதயகமலத்திலிருந்த ஆத்மாவாகிய கடவுள் இவ்விருவரும் ஒன்றாய்ச் சேர்ந்து மற்றொரு சிசு சரீரத்தில் போய்ச் சேருகிறார்கள்.

ஓ சகோதர ! சகோதரிகளே !

பரப்பிரம்மம், ஆத்மா இவ்விரண்டு கடவுள் தவிர, வேறே கடவுள் எங்கும் இல்லவே யில்லை. பரப்பிரம்ம மென்பது மிகவும் பரிசுத்தமானது. அதிலிருந்து அணு சொரூபமாய் புரப்பட்டு வந்தவைகளுக்கு ஆத்மா யென்று பெயருண்டாயிற்று. இந்த ஆத்மாக்களும் மிகவும் பரிசுத்த மானவைகள். இந்த ஆத்மாக்கள் எல்லா தேசத்திலுள்ள ஜீவராசிகளின் இருதயகமலத்தில் போய்ச் சேர்ந்ததனால்

இந்த ஆத்மாக்களுக்கு ஜீவாத்மா வென்று பெயருண்டா யிற்று. எங்கும் பரிபூரணமாய் நிறைந்திருக்கும் ஓர் வஸ்து விற்கே பரப்பிரம்ம மென்றும், ஆத்மா, ஜீவாத்மா, பரமாத்மா, மஹாத்மா வென்று இத்தனை பெயர்கள் உண்டா யிற்று. பரப்பிரம்மம், ஆத்மா, ஜீவாத்மா, பரமாத்மா இவைகளின் விஷயம் இதுவரையில் சொன்னோம். மஹாத்மா எப்படிப்பட்டதோ அதுவிஷயம் இனி சொல் லப்போகிறோம்.

உலகத்திலுள்ள ஆத்மாக்க ளெல்லாம் பலவிதங்க ளாகிய ஆசைகளுடன் கூடி இருக்கின்றது. இந்த ஆசைக ளெல்லாம் ஆத்மாவை விட்டு எந்த ஜன்மத்தில் நீங்குகின் றதோ அப்பொழுது அந்த ஆத்மா மஹாத்மாவாகின்றது. மஹாத்மா வென்றால், ஆத்மாக்களில் சிரேஷ்ட்டமானது. என்றால், எந்த ஆசைகளும் இல்லாமல் மிகவும் பரிசுத்த மாய் இருக்கப்பட்டது. இந்த ஆத்மா பரிசுத்தமான பிறகு, தன் நிஜசொரூபமாகிய பரப்பிரம்மத்தில்போய்ச் சேரும். ஆத்மா பரப்பிரம்மத்தில் போய்ச் சேர்ந்து விடு வதே மோக்ஷ மென்று சொல்லப்படும். பரப்பிரம்மம், ஆத்மா, ஜீவாத்மா, பரமாத்மா, மஹாத்மா இவைகளுக் குள்ள பேதங்கள் இப்பொழுது இந்நூலை வாசிக்கும் ஸ்திரீ புருஷர்களுக்கெல்லாம் நன்றாய்த்தெரிந்திருக்கலாம். இதன் ரகஸ்யம் இப்படி யிருக்க ஆதியில் இருந்த பெரியோர்கள் என்ன செய்தார்களென்றால், எல்லா தேசங்களிலு மிருக் கும் சிவ மதஸ்த்தர்களுக்காக சிவன் கோயில்களையும், விஷ்ணு மதஸ்த்தர்களுக்காக விஷ்ணு கோவில்களையும், அங்கங்கு கட்டிவைத்தார்கள். அதுபோல் அங்கங்குள்ள மகம்மது மதஸ்த்தர்களுக்காக மசூதிகளையும், கிறிஸ்த்தவர் களுக்காக மாதா கோவில்களையும், பௌத்தவ மதஸ்த்தர் களுக்காக புத்தர் கோவில்களையும் கட்டிவைத்தார்கள். அந்தந்த மதஸ்த்தர்களுக்காக அந்தந்த கோவில்களை ஏன் கட்டிவைத்தார்களோ அது விஷயம் இனிசொல்லப் போகி றோம்.

சிவ விஷ்ணு கோவில்களின் ரஹஸ்யம் வெளியிடுதல்.

எங்கும் பரிபூரணமாய் நிரைந்திருக்கும் கடவுள்ஒருவராய் இருந்தபோதிலும் அக் கடவுளைப் பார்க்க முடியாததனுல் மரங்களினுலும், சிலைகளினுலும், செம்புகளினுலும் முன்னுள்ள பெரியோர்கள் விக்ரகங்களைச் செய்து அவ் விக்ரகங்களுக்கு பரமசிவனென்றும், விநாயகரென்றும், சுப்ரமண்யரென்றும், பார்வதி, சாமுண்டீஸ்வரி, கன்னிகா பரமேஸ்வரி, காமாக்ஷி, விசாலாக்ஷி என்று இவ்வாருக அனேக திருநாமங்களை அவ் விக்ரஹங்களுக்கு வைத்து சிவ மதஸ்த்தர்களுக்காக சிவன் கோயில்களைக் கட்டி வைத்தார்கள். இதுபோல் ஸ்ரீராமர், கிருஷ்ணன், நரசிங்கன், பார்த்தசாரதி பெருமாள், லக்ஷ்மி என்னும் பெயர்களுடன் அனேக விக்கிரகங்களைச் செய்து விஷ்ணு மதஸ்த்தர்களுக்காக விஷ்ணு கோவில்களைக் கட்டி அதில் அவ்விக்ரகங்களை வைத்தார்கள். இந்த இரண்டு மதஸ்த்தர்களின் விக்ரஹங்களின் ஹஸ்த்தங்கள் எப்படிக் காட்டுகிறதென்ருல், தம் இடது கையால் இடது பாதத்தைக்காட்டி, அதன்பிறகு, எதையும் நினையாமல் சும்மா இருங்களென்று தம் வலது கையை எல்லோருக்கும் காட்டுகின்றன. அதன் கருத்து எதுவோ அதை இனி சொல்லப்போகிறோம்.

ஒவ்வொரு ஸ்திரீ புருஷர்களும் இரவு படுத்துத் தூங்கும் பொழுது அவர்களின் மனமானது வெளி வியவகாரங்களில் ஓடாமல் நின்றிருக்கும். தூங்கி எழுந்தவுடன், அவர்களின் மனமானது ரெப்பை மூடுமவ்வளவு நேரமும் சும்மாயிராமல எதற்கும் உபயோகமற்ற அனேக எண்ணங்கள் தனக்குத் தானுகவே ஒன்றின் பின் ஒன்ருய் நீர்க் குமிழி

களைப் போல் உதித்து அவைகளை யெல்லாம் மறந்து மறு படியும் வேறு வேறு எண்ணங்களை அம்மனம் எண்ணிக் கொண்டே யிருக்கும். இதுபோல் தினந்தோறும் கணக் கில்லாத அனேக எண்ணங்களை எண்ணிக்கொண்டிருக்கும் மனதை ஒரே நிலையில் கொண்டுவந்து நிறுத்துவதற்காக என்ன செய்யவேண்டுமோ அதை இனி சொல்லப்போகி றேம்.

எவரெவர்களுக்கு எந்தெந்த தேவதையின் மீது அதிக பிரீதியோ அந்த ஓர் தேவதையை மாத்திரம் தன் உபாசனாமூர்த்தியாய் நினைக்கவேண்டும். உபாசனாமூர்த்தி யென்றால், மோக்ஷ வீட்டிற்கு வழிகாட்டும் கடவுள் என்ப தேயாம். ஆதலால், தங்களுக்கு உபாசனாமூர்த்தியா யிருக்கும் கோவில் மூலஸ்தானத்திற்குள் செல்லவேண்டும். அவ்விடம் சென்றபிறகு, அங்குள்ள மூலவிக்ரஹ முகத்தை மாத்திரம் நன்றாய் திருஷ்ட்டித்துப் பார்த்துப் பிறகு, அவ் விக்ரஹத்தின் சிரசில் அணிந்திருக்கும் ரத்ன கிரீடத்தைப் பார்க்கவேண்டும். அதன்பிறகு நெற்றியில் அணிந்திருக்கும் ஸ்ரீ சூரணத்தையும், அதன்பிறகு அந்த விக்ரஹத்தின் கண்கள், மூக்கு, தவடை, உதடு, முகவாய்க்கட்டை இவை களை மாத்திரம் பார்க்கவேண்டுமே யொழிய சிரசிற்குக் கீழ்பாகமாகிய சரீரத்தைப் பார்க்கலாகாது. ஏனென்றால், எண்ஜாண் சரீரத்திற்கும் சிரசே பிரதானம். ஆதலால், மேற்சொல்லிய முகத்தைமாத்திரம் நன்றாய் திருஷ்ட்டித் துப் பார்த்துப் பிறகு, கண்களைமூடி புருவமத்தியில் முன்பு பார்த்த விக்ரஹ முகத்தை மனக் கண்ணால் பார்க்கவேண் டும். புருவமத்தியில் அவ் விக்ரஹ முகம் மனக் கண்ணுக் குத் தெரியாவிட்டால் மறுபடியும் கண்களைத்திறந்து அம் முகத்தை சிலநேரம் நன்றாய் திருஷ்ட்டித்துப் பார்த்து மறுபடியும் கண்களைமூடி புருவ மத்தியில் அவ் விக்ரஹ

முகத்தை மனதில் நினைத்து பார்க்கவேண்டும். இவ்வாறுக புருவமத்தியில் மனக்கண்ணுக்கு அவ்விக்ரஹ முகம் நன்றாய்த் தெரியும்வரையில் கண்களைத் திறந்து திறந்துப் பார்க்கவேண்டும்.

அவ்விக்ரஹமுகம் மனக்கண்ணுக்கு நன்றாய்த் தெரிந்த பின், வீட்டிற்குச் சென்று சப்தம் வராத ஓர் ஏகாந்த அறையை பூஜை வீடாய்ச் செய்து அவ்வறையில் பளிங்கு சாம்பராணி தூபம்போட்டு, ஊதுவத்திகளைக் கொளுத்தி இன்னும் நல்ல வாசனை வஸ்துக்களை வைத்து அவ்வறை எப்பொழுதும் வாசனையுடன் இருக்கும்படிச் செய்துப் பிறகு, வடக்கு முகம் பார்க்கும்படி மணையும், அதன்மேல் மான்தோலும், அதன்மேல் வெள்ளைவஸ்திரம் மடித்து விரித்து தயார்செய்து வைக்கவேண்டும். அதன் பிறகு, அவர்களின் உபாசனாமூர்த்தியாகிய கடவுளின் படத்தை தெற்கு பார்க்கும்படி ஓர் சிறிய பெஞ்சியின்மேல் வைத்து தீபம் யேற்றி அப்படத்திற்கெதிரில் தான் வடக்குப் பார்க்கும்படி முன் அமைத்துவைத்த மணையின்மேல் போட்டிருக்கும் மான்தோல்மீது உட்கார்ந்து அப்படத்திற்கு எதிரில் பழம் அல்லது கல்கண்டு, தாம்பூலம்வைத்து தூபதீப நைவேத்தியம் காட்டி நமஸ்கரித்துக்கொண்டே,

குருர்பிர்ம்ம, குருர் விஷ்ணு, குருர் தேவோ, மஹேஸ்வரஹ,
குரு ஸாக்ஷாத் பரப்பிரம்ம தஸ்மை ஸ்ரீ குருவே நமஹ.

ஹம்ஸ மந்திரமாகிய சிவராஜயோகம் எனக்கு சித்திக்கும்படி வரம் பிரசாதிக்கவேண்டும் என்று மனதில் நினைத்துப் பிறகு, சரீரம் கூன்வளையாமல் நேராய் நிமிர்ந்து சின்முத்திரையை இரண்டு கைகளின் விரல்களால் பிடித்துக் கண்களை மூடி அதன்பிறகு, புருவமத்தியில் தன் உபாசனாமூர்த்தியாகிய கடவுளின் திருமுகத்தை மாத்திரம் நன்றாய்த் திருஷ்டித்துப் பார்த்துக்கொண்டே

யிருக்கவேண்டும். அப்பொழுது மனம் எந்த வெளி விவகாரங்களிலும் ஓட அவகாசமிராமல் ஒரே நிலையில் நின்றிருக்கும். இதுபோல் அவரவர்களின் சக்தியானுசாரம் எவ்வளவு நேரம் இருக்குக் கூடுமோ அவ்வளவு நேரம் இருந்துப் பிறகு கண்களைத் திறந்து படத்தை நமஸ்கரித்து எழுந்து பூஜை அறையைப் பூட்டிச்சென்று சாப்பிட்டுத் தான் எங்கு சென்றபோதிலும் எதையும் நினையாமல் தன் உபாசனாமூர்த்தியாகிய கடவுளின் திருமுகத்தையே மனதில் நினைத்துப் பார்த்துக்கொண்டே செல்லவேண்டும். அப்படிச் செல்வதனால் அனேக எண்ணங்களை எண்ணிக் கொண்டிருக்கும் மனம் எந்த எண்ணங்களையும் எண்ணாமல் ஒரே நிலையில் நின்றுவிடும். சரிகையிலே ஈசன் சடவடிவமாய் நின்றார் என்பது இதுவேயாம். இதற்கு மேல்படி கிரிகை என்றால், மந்திரஜபம். அம்மந்திர ஜபம் எவ்வாறு செய்யவேண்டுமோ அவைகளை யெல்லாம் "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரகஸ்யம்" நூலில் உபதேசமாய் சொல்லியிருக்கின்றோம்.

ஓ ஸஹோதர! ஸஹோதரிகளே! கல் விக்ரகங்கள் கடவுள் அல்லவென்றும், கடவுளானவர் நமக்குள் இருதயகமலத்தில் இருக்கின்றாரென்றும் இப்பொழுது உங்களுக்கு நன்றாய்த் தெரியவந்ததல்லவா? ஆதலால், இனி நீங்கள் எந்த பாவகார்யங்களைச் செய்யாமலும், பொய் சொல்லாமலும் எந்த வஸ்துவையும் அக்ரமமாய் வாங்காமலும் சத்தியமாய் இருந்து தானதர்மங்களைச்செய்து வருவீர்களாகில் இவைகளை யெல்லாம் உங்கள் இருதயகமலத்திலிருக்கும் ஆத்மா என்னும் கடவுளானவர் பார்த்துக் கொண்டிருந்து இனி நீங்கள் எடுக்கப்போகும் ஜன்மத்தில் மேலான ஜன்மத்தை உங்களுக்குள் இருக்கும் ஆத்மாவாகிய கடவுள் கொடுப்பார்.

உங்களுக்கு இனி ஜன்மமே வேண்டாமென்று நினைப்பீர்களாகில் எந்த எண்ணங்களையும் எண்ணுமல் சும்மாய் இருக்கவேண்டும். எல்லா ஆசைகளுக்கும், நல்ல கெட்ட குணங்களுக்கும் மூலகாரணமாய் இருப்பது எதுவென்றால் எண்ணங்களேயாம். அந்த எண்ணங்களை எண்ணுமல் சுலபமாய் இருப்பீர்களாகில் அப்பொழுது ஆசைகளும், நல்ல கெட்ட குணங்களும் வருவதற்கு இடமில்லாமல் வெளி வெளியாய் நின்றுவிடுவீர்கள். இவ்வாருக எப்பொழுதும் வெளிவெளியாய் இருந்து பிராணனைவிட்டால் மறுபடியும் ஜன்மம் வரவேமாட்டா. எண்ணங்களினுலேயே ஆசைகள் உண்டாகின்றன. இந்த ஆசைகளினுல் ஜன்மம் வருகின்றது. எண்ணங்களையே மனதுயென்று சொல்லப்படும். எண்ணங்களே மனதாகவும் மனதே எண்ணங்களாகவும் இருக்கின்றன. தினந்தோறும் கணக்கில்லாத எத்தனையோ எண்ணங்களை எண்ணுகின்றார்கள். அந்த எண்ணங்களையெல்லாம் சொல்வதற்குச் சாத்தியப்படாததனுல் இந்த எண்ணங்களுக்கு மனதுயென்று ஒரே பெயர் வைத்தார்கள். எல்லா மதஸ்த்தர்களின் கோவில் கல், விக்ரகங்கள் தம்தம் வலது கையை எல்லோருக்கும் காட்டுகிறது. அவ்வாறு காட்டுவதற்குக் காரணம் என்னவென்றால் எதையும் நினையாமல், சும்மா யிருங்கள். அப்படிச் சும்மா இருப்பீர்களாகில் மேக்ஷ மென்னும் வீட்டை அடைவீர்கள் என்னும் கருத்தேயாம்.

பிரபஞ்சத்தில் அனேக தனவான்கள் இருக்கின்றார்கள். இந்த தனம் அவர்களுக்கு எப்படி வந்ததென்றால், முன் ஜன்மத்தில் புண்ணியம் செய்திருக்கின்றார்கள். இவர்கள் செய்த புண்ணியங்களையெல்லாம் அவர்களுக்குள் இருக்கும் ஆத்மா யென்னும் கடவுளுக்கு நன்ருய்த் தெரிந்தது. ஆதனுல் அவனை தனவான் வீட்டில், ஆத்மாவாகிய

தானே கொண்டுபோய்ச் சிசுவாய்ச் சிருஷ்ட்டித்துத் தானும் அவனுடன்கூட சாக்ஷிமாத்திரனாய் இருந்து அந்த ஜன்மத்தில் அவன் செய்யும் கார்யங்களை யெல்லாம் பார்த்துக்கொண்டிருப்பார். அந்த தனவான் அந்த ஜன்மத்தில் புண்ணியம் செய்யாமலிருந்தால் அவனை மறுபடியும் தனவான் வீட்டில் சிருஷ்ட்டி செய்யாமல் எந்த ஏழைகளின் வீட்டிலோ கொண்டுபோய்ப் போடுவார்.

மானவர்களுக்கு இதன் ரகஸ்யம் தெரியவராது. பொருளைச் சம்பாதித்து எந்த புண்ணியமும் செய்யாமல் இருந்தால், மறுபடியும் தாழ்ந்த ஜன்மத்தை அடைகின்றார்கள். ஆதலால், இந்நூலை வாசித்த தனவான்களெல்லோரும் இந்த ரகஸ்யங்களை யெல்லாம் தெரிந்துகொண்டு இனிமேலாகிலும் தான தர்மங்களைச் செய்துவாருங்கள். நமது நிழல் நம்முடன்கூடவே எப்படித் தொடர்ந்து வருகிறதோ அதுபோல் நாம் செய்யும் தர்மம் ஒன்றே நம்முடன்கூட தொடர்ந்துவரும்.

அன்பர்களே!

ஆத்மா என்னும் கடவுள் நமது இருதய கமலத்திலிருந்து செய்துவரும் கார்யங்களையெல்லாம் இதுவரையில் சொன்னோம். சிவவிஷ்ணு கோவில்களினுடைய ரகஸ்யமும் சொன்னோம். மகம்மது மதஸ்த்தர்கள் மஸூதிகளைக் கட்டி நமாஸ் ஏன் செய்கிறார்களோ அதன் ரகஸ்யம் இனி சொல்லப்போகிறோம்.

மஸூதிகளின் ரகஸ்யார்த்தம் வெளிப்படுத்தல்.

மகம்மது மதஸ்த்தர்கள் மஸூதிக்குள் சென்று அங்குள்ள குளத்தில் கை, கால்கள், முகம் முதலானவைகளை பரிசுத்தமாய் அலம்பி பிறகு நமாஸ் செய்யுமிடத்திற்குச் சென்று நெற்றி பூமியில் படும்படிக் கும்பிட்டுப் பிறகு கால்களை பின்புறமாய் மடித்து அக்கால்கள்மேல் உட்கார்ந்து சிலநேரமும், மறுபடியும் எழுந்து நின்று சில நேரமும் நமாஸ் மந்திரத்தை தமது மனதில் நினைத்து ஜபம் செய்வார்கள். அச்சமயத்தில் யேதாகிலும் ஒரு சப்தம் அவர்களின் காதில் வீழ்ந்தால் அப்பொழுது அவர்களின் மனம் ஜபத்தில் நிற்காமல் சலித்துவிடும். இக்காரணத்தினால்தான் மஸூதிகளினிடம் வாத்யங்களை வாசிக்கலாகாதென்று சண்டை செய்கிறார்கள். அனேக இடங்களில் ஓடிக்கொண்டிருக்கும் மனதை ஒரேநிலையில் கொண்டு வந்து நிறுத்துவதற்காகவே மஸூதிகளில் நமாஸ் செய்கிறார்கள். கிறீஸ்த்தவ மதஸ்த்தர்களின் மாதாகோவில் ரகஸ்யார்த்தம் இனி சொல்லப்போகிறோம்.

மாதாகோவில் ரகஸ்யார்த்தம் வெளிப்படுத்தல்.

கிறீஸ்த்து மதத்திலிருக்கும் ஸ்திரி புருஷர்கள் எல்லோரும் மாதாகோவிலுக்கு "பைபில்" புத்தகத்துடன் சென்று அங்குள்ள நாற்காலி, பெஞ்சிகளின்மேல் உட்காருவார்கள். அதன் பிறகு, பாதிரியார்வந்து உயரத்திலிருக்கும் தமது சிம்மாசனத்தினிடம் சென்று நிற்பார். அப்பொழுது உட்கார்ந்திருக்கும் ஸ்திரீ புருஷர்கள் எல்லோரும் எழுந்துநின்று அவருக்கு வந்தனம் செய்வார்கள் அதன்பிறகு பாதிரியார் "பைபில்" புத்தகத்தை எடுத்து தான் வாசிக்கப்போகும் பக்கத்தைச் சொல்வார். அப்பொழுது அங்குள்ள ஸ்திரீ புருஷர்கள் எல்லோரும் தங்கள் கையிலிருக்கும் பைபில் புத்தகத்தைத் திறந்து அவர் சொன்ன பக்கத்தைப் பார்ப்பார்கள். அதன் பிறகு பாதிரியார் அப்பக்கத்தை வாசிப்பார். அந்த சமயத்தில் அவர்கள் மனம் பாதிரியார் வாசிக்கும் வாக்கியத்திலேயே நின்றிருக்குமே யொழிய வெளிவியவகாரங்களில் ஓடமாட்டா. பாதிரியார் எவ்வளவு நேரம் வாசிக்கின்ருரோ அவ்வளவு நேரமும் அவர்களின் மனம் அவ்விடமே நின்றிருக்கும். இந்த மதஸ்த்தர்களும் மனதை ஒரு நிலையில் கொண்டுவந்து நிறுத்துவதற்காகவே மாதாகோவில்களைக் கட்டி வைத்தார்கள்.

பௌத்தவ கோவில் ரகஸ்யார்த்தம் வெளிப்படுத்தல்

பௌத்தவ மதஸ்தர்கள் அவர்களின் கோவிலுக்குச் சென்று பௌத்தவர் சிலைக்கெதிரில் உட்கார்ந்து அவர்களுக்கு உபதேசித்த மந்திரங்களை மனதில் நினைத்துக் கொண்டே ஜபமாலையை கையில்பிடித்துத் திருப்பிக்கொண்டிருப்பார்கள். அச்சமயம் அவர்களின் மனம் வெளி விவகாரங்களில் ஓடாமல் ஒரே நிலையில் நின்றிருக்கும். இந்த மதஸ்த்தர்களும் மனதை ஒரு நிலையில் கொண்டு வந்து நிறுத்துவதற்காகவே பௌத்தவ என்றால், புத்தர் கோவில்களைக் கட்டி வைத்தார்கள்.

மேல்கண்ட நான்கு மதஸ்த்தர்களும் தங்கள் மனதை ஒருநிலையில் கொண்டுவந்து நிறுத்துவதற்காகவே அந்தந்த மதாச்சாரப்படி அவரவர்களுக்கு வேண்டிய கோவில்களைக் கட்டிக் கொண்டார்கள். யார் மனதை ஜயிக்கின்றார்களோ அப்படிப்பட்டவர்கள் பிரபஞ்சத்தையே ஜயித்தவர்களாகின்றார்கள்.

ஜனன மரண ரகஸ்யம் முற்றிற்று.

பரமஹம்ஸ ஸச்சிதானந்தன்

PRINTED AT SRI BHARATHI PRESS, CHOOLAI, MADRAS.

கெம்பாபுர அக்ராரமடம்

மடாதிபதிகள்

பெங்களூர் சிடி.